விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c

தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 184 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 15, சனிக்கிழமை 28.05.2016


## அமெரிக்கா அணுகுண்டு வீசிய நகரில் பராக் ஒபாமா



பக்கம் 14 -15

# பொறுப்புக்கூறும் பொறிமுறை இராணுவத்துடன் ரணில் பேச்சு

## வெளிநாட்டுச் சட்டவாளர்கள் ஆலோசனை மட்டுமே வழுங்குவார்கள் எனவும் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 28
போர்க் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையை அமைப்பது தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்புச் செயலர் மற்றும் இராணுவத்தின் மூத்த அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தியுள்ளார்.
அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலக, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, இராணுவத்தின் மேஜர் ஜெனரல் தர அதிகாரிகள் மற்றும் இறுதிக் கட்டப் போரில் பணியாற்றிய பிரிகேடியர் நிலையில் உள்ள முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.
இந்தச் சந்திப்பின்போது, கிழக்கு மாகாண முதலமைச்சர், கடற்படை அதிகாரியைத் திட்டிய விவகாரம் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறை தொடர்பாக முக்கிய பக்.22



## அரநாயக்க மீட்புப் பணி நாளை முடிவு

கொழும்பு, மே 28
கேகாலை –அரநாயக்க மண்சரிவு மீட்புப் பணிகளை நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவுக்குக் கொண்டு வரவுள்ளதாகக் கேகாலை மாவட்ட அரச அதிபர் டபிள்யு. பக்.23

## கந்தரோடையில் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு



யாழ்ப்பாணம்,மே 28
கந்தரோடை மடத்தடிப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்றிரவு பக்.23

## காணாமற்போனோரின் உறவினர்கள் பங்களிப்பின்றி சுயாதீன அலுவலகம்

### அரசின் முயற்சியை எதிர்க்கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, மே 28
காணாமற்போனவர்களின் குடும்பஉறுப்பினர்களின் ஆலோசனையின்றி, சுயாதீன அலுவலகம் அமைக்கும் முயற்சிக்கு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.
காணாமற்போனோர் தொடர்பாக சுயாதீன அலுவலகம் அமைப்பதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.
இந்த நிலையிலேயே இலங்கை அரசு, காணாமற்போனவர்களின் குடும்பஉறுப்பினர்களின் ஆலோசனையின்றி, குறித்த அலுவலகத்தை அமைக்கவுள்ளதாகச் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற் பக்.22

## நல்லிணக்க வழிமுறையில் நல்லாட்சி அரசுக்கு வெற்றி

### ஜப்பானில் ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்

(ஜப்பான் இசெசிமாவிலிருந்து அருண் ஆரோக்கியநாதர்)
கொழும்பு, மே 28
புரட்சிகரமான ஆட்சி மாற்றத்துடன், எனது அரசு பல்லின சமூக சூழலில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நிலையான அபிவிருத்திச் சூழலுக்குமான வழியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. தற்போது எமது மக்கள் சுதந்தரமாகவும், மனித உரிமைகள் மதிக்கப்பட்டவர்களாகவும் உள்ளார்கள்.
இவ்வாறு தெரிவித் பக்.23



## முச்சந்தி முரளி



ஜெனிவா கூட்டத்துக்கு முதல் இப்படி பல ஆலோசனையள் நடக்கும் பாருங்கோ....

## தனியார் காணிகளை இராணுவம் கையகப்படுத்துவது உரிமை மீறல்

### யாழ். நகரைச் சேர்ந்த மூவரின் மனுவை விசாரணைக்கு ஏற்றது உயர் நீதிமன்றம்

கொழும்பு, மே 28
போர் முடிவுக்கு வந்த பின்னர் யாழ். நகரில் அமைந்துள்ள மூன்று தனியார் காணிகளைக் கையகப்படுத்த இராணுவத்தினர் எடுத்துள்ள தீர்மானத்தின் மூலம், மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் தாக்கல்செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஆராய்ந்த பின்னர் பிரதம நீதியரசர் சிறிபவன் பக்.23

## யாழ். தொழில் நியாய சபை வடக்குக்கான வரப்பிரசாதம்

### மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 28
வடக்கு மாகாணத்துக்கான தொழில் நியாய சபை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டமை மக்களுக்கும், இளம் சட்டத்தரணிகளுக்கும் கிடைத்த வாய்ப்பாகும். தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு இதுவரை காலமும் அநுராதபுரம் செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. இனிமேல் யாழ்ப்பாணத்திலேயே தொழில் பிணக்குகள் தொடர்பான வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு பக்.22

## பிரகீத் படுகொலை; சந்தேகநபருக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, மே 28
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட வழக்கில், கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவப் புலனாய்வு அதிகாரியான லெப்.கேணல் பக்.22

## அனைத்து இன மக்களுக்கும் நாட்டில் சம உரிமை உண்டு

### இதனடிப்படையிலேயே நல்லாட்சி நடக்கின்றது என்கிறார் நீதி அமைச்சர்

யாழ்ப்பாணம், மே 28
இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் அவர்களின் மொழி, மதம் சார்ந்த உரிமைகள் உள்ளன. அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை என்பதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் கட்டளையாகும். இதனடிப்படையிலேயே தற்போதைய நல்லாட்சி இடம்பெறுகின்றது.
இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் நீதி அமைச்சர் பக்.2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கல்வி விருத்திக்கு ரூ.960 மில்லியன் ஒதுக்கீடு

## மாகாணக் கல்வியமைச்சின் செயலர் தெரிவிப்பு





யாழ்ப்பாணம்,மே.28

மாகாண ரீதியிலே குறித்தொதுக்கப்படுகின்ற நிதியாகச் சென்ற வருடம் 275 மில்லியன் ரூபா கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருடம் இந்த நிதி 960 மில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர் மாநாடு 2016 இன் ஆரம்பநாள் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி கலையரங்கத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்துகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இதன் பிரகாரம் நிதி ஆணைக்குழு ஆசிரிய வாண்மை விருத்தி தொடர்பிலான திட்டங்களைத் தரவேண்டுமெனக் கேட்டிருந்தார்கள். பாடசாலை ஆசிரியர்களுடைய, அதிபர்களுடையவாண்மை விருத்தி தொடர்பில் அந்தத் திட்டங்களுக்காக 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம். அதில் 24 மில்லியன் ரூபா ஆசிரியர்களுடைய வாண்மை விருத்தி சார்ந்த ஆசிரியர் மாநாடுகளை நடத்துவதற்கும், மிகுதியான 16 மில்லியன் ரூபா அதிபர்களின் வாண்மை விருத்தி தொடர்பிலான மாநாடுகளை நடத்துவதற்கும் ஒதுக்கியுள்ளோம். அது தொடர்பிலான தரவுகள் நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த வகையிலே வலய ரீதியாக ஆசிரியர்களின் தொகைக்கேற்ப வழங்கப்பட்ட நிதியை பிரித்து ஒதுக்கியுள்ளோம்.

இதுவரை நான்கு மாநாடுகள் நிறைவுற்றுள்ளன. இந்த மாநாட்டை நடத்துவதன் நோக்கம் ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்துவதற்கும் அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும், எங்களுடைய மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்குவதற்குமானதாக இருக்கின்றது. இதுவே பிரதானமான நோக்கம்.

இந்த மாநாடு தொடர்பிலான பதினாறு உள்ளடக்கங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் சிறந்த பண்பை வளப்படுத்துவதற்காக, எதிர்காலச் சிறுவர்களின் கல்வியை வளம்படுத்துவதற்கு, கல்வியிலே மாணவர்களின் விருப்பு நிலையை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களை எவ்வாறு முழுமையாக பயன்படுத்தப் போகின்றோம் என்பதை இந்த மாநாடு தொக்கி நிற்கின்றது. கல்வி அமைச்சின் உத்தேசமும் அதுவாகத்தான் இருந்து வருகிறது. எத்தனையோ விதமான பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

ஆனால்ஆசிரியர் வழிகாட்டல்என்பது போதுமானதாக இல்லை. ஆகவே ஆசிரியர்களின் வினைத்திறன் மிக்க செயற்பாடு பாடசாலைகளில் காணப்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது. ஆசிரியர்களின் அர்ப்பணிப்புள்ள சேவையே மாணவர்களைக் கல்வி நிலையில் முன்னிலைப் படுத்தும். பெற்றோர், சமூக மட்டம், பாடசாலை சார் செயற்பாடுகள் என்பன ஊடாகவே இதனைச் சாத்தியமாக்க முடியும்.

ஆசிரியர்கள் வேற்றுமைகளைக் களைந்து சமூகத்தின் முன்னோடியாகவும், ஒழுக்கவிழுமியங்களின் காவலனாகவும்,நல்ல கல்விப் போதனையூடான வழிகாட்டுநராகவும் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் நல் மாணாக்கரைச் சமூகத்திடம் தந்திடும் சிற்பிகள். அவர்கள் தமது கடமைக்கூறுகளின் அடிப்படையிலே தமது பொறுப்புக்களைச் சரிவரச் செய்து எமது மாகாணத்தின் தற்போதைய பின்தங்கிய நிலையை முன்னிலைப்படுத்த முன்வர வேண்டும் - என்றார்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா,வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வாழ்நாள் பேராசிரியரும்முன்னாள்துணைவேந்தருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக வலிமை என்ற மலர் வெளியீடு, ஆய்வரங்குகள், இலங்கையின் பாடசாலைக் கல்வியின் இன்றைய நிலை தொடர்பிலான விமர்சன ஆய்வு என்பன நடைபெற்றன. வலிகாமம் வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கண்காட்சி நிகழ்வும் இடம்பெற்றது. இதன்போது கல்வி சார் செயற்பாடுகளின் வெளிப்பாடாக பல பயனுள்ள காட்சிப்படுத்தல்கள் இடம்பெற்றிருந்தன.

ஆசிரியர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா,வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்,யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட பீடாதிபதி,முன்னாள் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர்.மா.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி2)

# வவுனியா வளாகத்தில் நேற்று தொழிற்சந்தை ஆரம்ப நிகழ்வு





வவுனியா, மே 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினரால் ஏற்பாடு செய்யயப்பட்ட மாபெரும் தொழிற்சந்தையில் ஏராளமான பட்டதாரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து பயன் பெற்றுள்ளனர்.

இந்தத் தொழிற்சந்தை நேற்று முற்பகல் 9.30 மணியளவில் வவுனியா பல்கலைக்கழக பம்பைமடு வளாகத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், வியாபார கற்கைநெறி பீடாதிபதி கலாநிதி அ. புஸ்பநாதன், பிரயோக விஞ்ஞான பீடாதிபதி சி.குகநேசன், தொழிற்சந்தை ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் கலாநிதி ர. நகுலன், ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

அனைத்துப் பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் இறுதியாண்டு மாணவர்களுக்காக இடம்பெற்ற இந்த தொழிற்சந்தை இன்று ஏனைய தொழில் வாய்ப்புக்களைத் தேடுபவர்களுக்காக இடம்பெறவுள்ளது எனவும், இன்றும் முற்பகல் 9 மணி முதல் மாலை 4 மணிவரையும்இதுஇடம்பெறும்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், ஆடைத் தொழிற்சாலை நிறுவனங்கள், மற்றும் உயர்கல்வி, தொழில்சார் கற்கைநெறிகள், தொழில் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் உட்பட 30 இற்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் கலந்துகொண்டதுடன் மாணவர்களுக்கான தொழில்வழி காட்டி வகுப்புக்களும் இடம்பெறுகின்றன. (த-ஐ-21)

சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம் மே 31

நீறாய் போவாய் நீயும் - என்று
நிறையவே உணர்த்தின - சிகரெட்டுக்கள்
மீளாத் துயிலில் கிடப்பதென்ன
மீளும் வழியை அறிவதெப்போ?

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை
யாழ். மாநகர சபை

# இலங்கையில் முதலிடுங்கள்

## ஜி-7 நாடுகளுக்கு மைத்திரி அழைப்பு

கொழும்பு, மே 28

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு, ஜி-7 நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜப்பானில் நடைபெறும் ஜி-7 நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

எமது விரிவான அபிவிருத்தி முயற்சிகளுக்கு நிதிப் பற்றாக்குறை உள்ளது. எனவே, அபிவிருத்தி அடைந்த நாடுகள், பலதரப்பு மற்றும் இருதரப்பு முதலீட்டாளர்கள், இலங்கையில் முதலீடு செய்யக் கோருகிறோம் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்கள் தொடர்பாகவும், மனித உரிமை நிலமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் அவர் விவரித்துள்ளார்.

இந்த மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன், மற்றும் ஜி-7 நாடுகளின் தலைவர்களான, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மார்க்கல், பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலண்ட், கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடே, இத்தாலியப் பிரதமர் மற்றோ ரென்சி ஆகியோரையும் ஜனாதிபதி மைத்திரிபால சந்தித்துப் பேச்சு நடத்தினார். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்**
**இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் -2015**
**கல்வியாண்டு 2013/2014**

- இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளுக்கான பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களிடமிருந்து 01.06.2016 ஆம் திகதியிலிருந்து 10.06.2016 ஆம் திகதி வரை இராமநாதன் நுண் கலைக்கழக அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.
- இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் இசைத்துறை, நடனத்துறை, சித்திரமும் வடிவமைப்பும் அலுவலகத்திலிருந் தும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடஅலகிற்கு ரூபா 250/= வீதமும் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்து ஏற்றுக்கொள்ளப்பட்டோர் ஒரு பாடஅலகிற்கு பரீட்சைக் கட்டணமாக ரூபா 250/= வீதமும் பரீட்சை பெறுபேற்றினை தரமுயர்த்துவதற்கு பாட அலகொன்றிற்கு ரூபா 500/= வீதமும் பல்கலைக்கழக காசாளரிடமோ. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

**உதவிப் பதிவாளர்,**
**இராமநாதன் நுண்கலைக்கழகம்.**

# கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை

**திருமதி சாந்தநாயகி சுப்பிரமணியம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி,**
**அதிபர், ஆசிரியர்கள்.**

# நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2016

கீழ்குறிப்பிட்டவேலைக்கானகேள்வி நல்லூர் பிரதேசசபையினால் கோரப்படுகின்றது. குறித்த வேலைக்கான கேள்விவைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் (அலுவலக நாள்களில்) செலுத்தி படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 30.05.2016 தொடக்கம் 16.06.2016 (மு.ப 8.30 தொடக்கம் பி.ப 3.00 வரை)
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி: 17.06.2016 மு.ப 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 17.06.2016 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியகல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தைசமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை '**தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை,கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை. '**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்** என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | வேலைவிவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | காரைக்கால் திண்மக்கழிவு முகாமைத்துவ ஆதரவு நிலையத்திற்கான அபிவிருத்தி ( கூரைவேலை) | 0.9 | 9000.00 | 1000.00 | M08/C09 |

செயலாளர்
நல்லூர் பிரதேசசபை
-கொக்குவில்
27.05.2016


# பாரிராஜ்
## பல்பொருள் அங்காடி

**நவீன முறையில் வடிவமைக்கப்பட்டு**
**மக்களின் சிறந்த தெரிவுக்கு ஏற்ற முறையில்**

**முதலாம் மாடியில்:-**

விளையாட்டுப்பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள், காலணி வகைகள், அலுமினியம் மற்றும் எவர்சில்வர் பொருள்கள், விசேட விலைக்கழிவுடனும் மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ள முடியும் மின்சார உபகரணங்கள், மின்விசிறிகள் மலிவு விலையில்

**இரண்டாம் மாடியில்:-**

- அழகு சாதனப் பொருள்கள்,
- கர்ப்பிணி தாய் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான அனைத்து பொருள்களும் மிகமிக மலிவு விலையில்.
- Hand Bag, School Bag, Travelling Bag, Plastic பொருள்கள் நவீன டிசைன்களில் மிகமிக மலிவு விலையில்.



**ஆடம்பரப் பொருள்கள் முதல் அத்தியாவசியப் பொருள்கள்வரை**
**மிகமிக மலிவாகப் பெற்று உங்கள் பணத்தினை**
**மீதப்படுத்திக் கொள்ளுங்கள்**


Gift vouchers

மாதந்தோறும் குலுக்கல் முறையில் எமது வாடிக்கையாளருக்கு பரிசில்களையும் பண வவுச்சர்களையும் வழங்கி வருகின்றோம்.

பாரிராஜ் பல்பொருள் அங்காடியின் வாடிக்கையாளராகி பல சலுகைகளை பெற்றுக்கொள்ளுங்கள்

**இல.344, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
021 221 7252 | 021 221 6326


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1938 . 03 . 11 | 2016 . 05 . 25 |

# சின்னத்துரை சிவஞானம்

அல்லைப்பிட்டி, மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவஞானம் கடந்த (25.05.2016) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்லைப்பிட்டி - மண்டைதீவைச் சேர்ந்த சின்னத்துரை - யோகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் நெடுந்தீவு மேற்கை பூர்வீகமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான கந்தையா - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருநாவுக் கரசு (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்), அன்னலட்சுமி இராசையா (அல்லைப்பிட்டி), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, இராசலட்சுமி நல்லையா (மண்டைதீவு) நித்தியலட்சுமி பாலசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தில்நாயகி (பிரான்ஸ்), சிறீதரன் (யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்), சிறீகுகன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிறீபரன், காலஞ்சென்ற சிறீவரதன், நவநிதி (பிரான்ஸ்), சிறீறங்கன் (பிரான்ஸ்), சிவநிதி (கிளிநொச்சி), சிறீரூபன் (கனடா), காலஞ்சென்ற சிறீஅன்பன், சிறீவினோதன் (பிரான்ஸ்), கலைநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாபு, சிவஞானகுமாரி (ஆசிரியர் - கிளி / வட்டக்கச்சி மத்திய கல்லூரி ), பத்மலோசினி (சுவிஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ் - முன்னாள் கிராம அலுவலர்), அருட்செல்வி (பிரான்ஸ்), வேலவன் (வன்னி மலர்க்காடு - முன்னாள் உப தபாலதிபர்), சத்தியசிவம் (பிரான்ஸ் - முன்னாள் அலுவலக உதவியாளர் - முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்), தர்சினி (கனடா), கோசலாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2016.05.29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வட்டக்கச்சி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மம்மில் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 332, ஆறுமுகம் வீதி,**
**வட்டக்கச்சி,**
**கிளிநொச்சி.**

தகவல்: **சி.சிறீதரன்,**
**(பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி)**

(c 21312) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ்மா அதிபருக்கு விசாரணை அறிக்கை அனுப்புவதைத் தடுத்தார் அனுர சேனநாயக்க

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தர்மவர்தன, ரக்பி வீரர் தாஜுதீன் வழக்கில் வாக்கு மூலம்

கொழும்பு, மே 28
ரக்பி வீரர் தாஜுதீன் விவகார விசாரணை அறிக்கையைப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புவதை, மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க தடுத்தார். -இவ்வாறு அவரது தனிப்பட்ட உதவியாளராகச் செயற்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தர்மவர்த்தன வாக்கு மூலம் வழங்கியுள்ளார். இதனை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவானின் கவனத்துக்கு நேற்று முன்தினம் கொண்டு வந்துள்ளனர்.

தாஜுதீன் படுகொலை வழக்கு, கொழும்பு மேலதிக நீதிவான் நிஸாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலாவது சந்தேக நபரான நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா, இரண்டாவது சந்தேக நபரான முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க ஆகியோர் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

வழக்கு ஆரம்பமானது. குற்றப் புலனாய்வுப் பிரிவின், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசேகரவால், விசாரணையின் தற்போதைய நிலைமை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில், தாஜுதீன் விவகாரம் தொடர்பில் நான் எதனையும் மறைக்கவில்லை. நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கையைக் கூட நான் பார்க்கவில்லை. இவ்வாறு அனுர சேனநாயக்கா வாக்குமூலம் வழங்கியுள்ளார். அத்துடன் இந்த விடயம் தொடர்பில் எதுவும் தெரியாது. விசாரணைகளில் ஓட்டை இருப்பதை அறிந்திருந்தால், அது தொடர்பில் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அனுர சேனநாயக்கவின் தனிப்பிட்ட உதவியாளராகக் கடமையாற்றிய ஓய்வு பெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தர்மவர்த்தனவின் வாக்கு மூலங்களை நாம் பதிவு செய்துள்ளோம். அதில், வாகன விபத்தாகக் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்த தாஜுதீன் படுகொலை விவகாரம் தொடர்பில், அப்போதைய பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்க முனைந்த போது, அனுர தடுத்தார்.

இது தொடர்பான ஆவணங்களைப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்ப முற்பட்ட போது, அதனை அனுர தனது கட்டுப்பாட்டில் எடுத்தார். கிருலப்பனையில் கண்டெடுக்கப்பட்ட தாஜுதீன் பணப்பை தொடர்பான விவரத்தை, மன்றுக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட 'பீ' அறிக்கையில் பதிவிடாதவாறு அனுர பார்த்துக் கொண்டார்.

இதன் பின்னர் சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி சில கோரிக்கைகளை முன்வைத்தார். இந்த விசாரணை மிகநுட்சுமமாக, அவதானமாக முன்னெடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் கடந்த தவணையின்போது விசாரணைத் தகவல்களை பெற்றுக் கொள்ள தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்துக்கு மன்று உத்தரவு பிறப்பித்தது. ஆனாலும் அந்த நிறுவனத்தின் ஒத்துழைப்புக்கள் திருப்தியாக இல்லை. தேவையான தகவல்களை வழங்க மீளவும் உத்தரவிடவேண்டும்-என்றார்.

பாதிக்கப்பட்டோர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கருத்துக்களை முன்வைத்தார். விசாரணையுடன் தொடர்புபட்டு இலங்கை மருத்துவ சபை முன்னெடுத்த விசாரணைகள் முக்கியமானவை. அதன் அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டிருந்தது. இதுவரை அவ்வாறு இடம்பெறவில்லை.

இதற்கு இலங்கை வைத்திய சபை சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் பதிலளித்தார். ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளை அவர்கள் நிறைவு செய்துள்ளனர். தாஜுதீன் விவகாரத்தில் உடற்கூற்றுப் பரிசோதனையை முதலில் மேற்கொண்ட வைத்தியர் ஆனந்த சமரசேகர, அவரது உதவியாளர்களான இராஜகுரு, அமரரத்ன ஆகிய வைத்தியர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்னர் அவர்களுக்கு குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் விசேட விசாரணைகள் எதிர்வரும் ஜூன் 4 ஆம் திகதி இடம்பெறும். குற்றப் பத்திரிகை கொடுக்கப்பட்டு 27 நாள்களின் பின்னரே அவர்களிடம் விசாரணை நடத்த முடியும். இதுவே முறையாகும். இதனாலேயே காலதாமதம் - என்றார்.

முதல் சந்தேக நபர் சுமித் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அவரது வாதங்களை முன்வைத்தார். இதற்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக அறிக்கைகளை ஆராய்ந்தேன். அதில் பெரிதாக ஒன்றுமில்லை. குற்றவியல் சட்டக் கோவையின் 296 ஆவது அத்தியாயத்தின் கீழ் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமை தெளிவற்றதாகவுள்ளது.

குற்றவியல் நடைமுறைக் சட்டக் கோவையின் 127 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம், தனக்குத் தெரிந்த அனைத்தையும் நீதிவான் முன்னிலையில் ஒப்புவிக்க எனது சேவை பெறுநர் சுமித் தயாராக இருக்கின் றார். எனவே அவருக்குப் பிணை வழங்குமாறு கோருகின்றேன் என்று மன்றில் கேட்டுக் கொண்டார்.

இரண்டாவது சந்தேக நபர் அனுர சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தனது வாதங்களை முன்வைத்தார். சில சாட்சியங்களை மறைத்தமை தொடர்பில் அனுரவுக்கு எதிராக குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 132, 189, 198 ஆகிய பிரிவுகளில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலும் நீதிவான் நீதிமன்றம் ஒன்றால் பிணை வழங்க முடியாத குற்றச்சாட்டை உள்ளடக்கும் குற்றவியல் சட்டத்தின் 296 ஆவது அத்தியாயமும் குற்றச்சாட்டுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. பிணை மறுப்பதற்காகவே இது உள்ளீர்க்கப்பட்டது என்று சந்தேகம் தோன்றுகின்றது.

குற்றவியல் சட்டத்தின் 402 ஆவது அத்தியாயத்தின் கீழ் பிணை பெறத் தக்க குற்றச்சாட்டு ஒன்று தொடர்பில் பிணை பெறுவதற்குப் பூரண உரிமையுள்ளது. தற்போதைய விசாரணையின் அடிப்படையில் எனது சேவை பெறுநருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் 296 ஆவது பிரிவின் கீழ் குற்றச்சாட்டு முன்வைக்க முடியாது. ஏனைய குற்றச்சாட்டுக்கள் பிணை பெறத்தக்கவை. எனவே பிணையை மறுப்பதற்கு ஏதுவான காரணிகள் மன்றிடம் இல்லை.

அனுரவிடம் சிலரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களை இந்த விவகாரத்துடன் தொடர்புபடுத்தி குற்றவியல் சட்டத்தின் 127 ஆவது பிரிவின் கீழ் ஒப்புதல் வாக்குமூலம் வழங்குமாறு கூறியிருக்கின்றனர். அதனை அனுர மறுத்துள்ளார். இதனாலேயே பிணையின்றி அனுர விளக்கமறியலில் இருந்து வருகின்றார். சாட்சிகளை அச்சுறுத்துவதாக புலனாய்வுப் பிரிவு கூறுகின்றது. இது தொடர்பில் அவர்கள் ஏன் மன்றின் கவனத்துக்கு கொண்டு வரவில்லை. அனுரவுக்குப் பிணை வழங்குவதால் பொதுமக்களிடையே குழப்பம் ஏற்படும் என்று புலனாய்வுப் பிரிவு அறிக்கையிடுகின்றது. அனுர அரசுக்கு எதிரானவர் என்பதாலேயே அப்படிக் கூறுகின்றனர்.

பத்திரிகைகளில் அனுர கைது, அனுர விளக்கமறியலில் என்று தலைப்பு செய்திகள் வெளிவருதால் மட்டும் பொதுமக்கள் குழப்பம் என்னும் வார்த்தையை அளவீடு செய்ய முடியாது. உண்மையில் அப்படி பத்திரிகைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் குழப்பமடைந்திருப்பின், யானைக் குட்டி விவகாரத்தில் உடுவே தம்மாலோக தேரர் கைதாகிப் பிணையில் விடுதலை செய்யப்பட்டபோது அது நடந்திருக்கவேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களத்துக்குத் தற்போது ஏற்பட்டுள்ள அபகீர்த்தியைப் போக்க எவரையேனும் கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்ளோம் என்ற செய்தி அவசியமாகின்றது. இதனால் தான் பிணை வழங்குவதைத் தடுக்கின்றனர்.

அனுர சட்டத்தை மதிக்கும் ஒருவர். இதனால் மன்றின் விசாரணையிலிருந்து ஒளிந்திருக்கப் போவதில்லை. அத்துடன் அவரிடம் தற்பொழுது அதிகாரமும் இல்லாத நிலையில் சாட்சியங்களையும் அச்சுறுத்த முடியாது. எனவே பிணை வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கின்றேன் - என்றார்.

இதன் பின்னர் அரச தரப்பு சட்டத்தரணி தனது வாதங்களை முன்வைத்தார். இரண்டாம் சந்தேக நபர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி முன்வைத்த வாதங்களை நிராகரிப்பதாக குறிப்பிட்டார். இந்தக் குற்றத்தின் பாரதூரம் தொடர்பில் பிணை வழங்கு முன்னர் சிந்திக்க வேண்டும். ஒரு கொலை சாதாரண விபத்தாகக் காட்டி மூடி மறைக்கப்பட்டுள்ளது. அறிவியல் ரீதியான சாட்சியங்களை வைத்து இது கொலையே என்று நிரூபித்திருக்கின்றோம். கொலையின் பிரதான பங்குதாரர்களுடன் இந்தச் சந்தேக நபர்களும் இணைந்து சதித் திட்டம் தீட்டியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. கொலைக்கான சதித் திட்டம் தீட்டியமை குறித்த குற்றச்சாட்டு குற்றவியல் சட்டத்தில் 296 ஆவது பிரிவின் கீழேயே வருகின்றது. நாம் சந்தேக நபர்களின் பிணைக் கோரிக்கைக்கு எதிர்ப்பு வெளியிடுகின்றோம் - என்றார்.

இறுதியில் நீதிவான் தனது கருத்துக்களை மன்றுக்குத் தெரிவித்தார். இந்த மன்று இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் கொண்டது. புலனாய்வுப் பிரிவு கோரும் தகவல்களை வழங்க தனியார் நிறுவனத்துக்கு உத்தரவிடுகின்றது. மருத்துவ சபை முன்னெடுக்கும் விசாரணைகள் தொடர்பாக மேலதிக விசாரணை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தைப் பொறுத்த வரையில் எவரையும் சந்தோசப்படுத்துவதற்காக என்னால் உத்தரவுகளை வழங்க முடியாது எனத் தெரிவித்து வழக்கை எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (த-ஐ-5)


**வாடகைக்கு**
நல்லூரில் தனியறை, சிறிய சமையலறை, இணைந்த குளியலறையுடன் வீட்டின் அனெக்ஸ் வாடகைக்குண்டு. சிறிய அரச உத்தியோகத்தர் குடும்பம் விரும்பத்தக்கது. வாடகை 7000/= முற்பணம் ஒரு இலட்சம். (e/21522)(11.18)
072 816 1475

**தேவை**
கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது சிறிய கோழிப் பண்ணையைப் பராமரிக்க ஆள் தேவை. தங்குமிட வசதி உள்ளது. குடும்பமாக வந்து நின்று பராமரிக்க விருப்பமுடையோரும் வரலாம். தகுந்த ஊதியம் வழங்கப்படும். (J 1659)(14,17,18)
க.விஷ்ணு 077 474 7488

**ஏல விற்பனை**
வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள கோர் நிறுவனத்தில் பயன்படுத்திய **கணினி உபகரணங்களும் கணினி மேசைகளும்** 2016.06.17 ஆம் நாள் ஏல விற்பனைக்குட்படுத்தப்படும். தேவையுடையோர் பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்பினை ஏற்படுத்தவும். (11,18)
021 320 5342, 077 166 8081

**விற்பனைக்கு**
Bey xxxx இலக்கமுடைய MOTOR CYCLE 110CC SUPER CUB (CHINA) மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. (J 1642)(12.18.)
077 871 5616

**வாடகைக்கு**
கந்தர் மடம், அரசடி வீதியில் யாழ். பல்கலைக்கழகம் யாழ் இந்து மகளிர் கல்லூரி. இந்துக்கல்லூரி ஆகியவற்றுக்கு அருகில் வீடு வாடகைக்கு உடன் உண்டு. சிறிய குடும்பத்துக்கு ஏற்றது.
தொடர்பு: 077 736 1872

**Car For Sale**
நல்ல நிலையில் உள்ள (Isuzu Diesel Car, AC, Power steering. Power break, Power window) உடன் விற்பனைக்குண்டு. 720 000/= Negotiable
077 030 3834

**காணி விற்பனைக்கு**
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் 1 ½ பரப்புக் காணி, சுற்று மதிலும்,குழாய்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 329 8759

**விற்பனைக்கு**
உழவு இயந்திரப் பெட்டியும், 21,எம்.டீ 90 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு.
077 473 0722, 077 104 0992

**முன்பள்ளி பிரத்தியேக வகுப்பு**
வீட்டில் இருந்தவாறே முன்பள்ளிக் கல்வியைப் பெற ஓர் அரிய வாய்ப்பு. ( 3+ முதல் ) உங்கள் குழந்தை எழுத கஸ்டப்படுகின்றதா? இலகுவழி மூலம் எழுத, சித்திரம், ஆடல், பாடல் போன்ற இன்னும் பல இதோ இன்றே இணையுங்கள் எம்முடன். உங்கள் வீடுகளுக்கே வந்து கற்பிக்கின்றோம்.
076 701 9748, 077 393 6964

**யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு**
யாழ்.சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையில் ஈச்சமோட்டையில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434

**வீடு விற்பனைக்கு**
தெல்லிப்பழை. K.K.S. வீதியில் "தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி"இற்கு அருகில் 3 பரப்புக் காணியில் 3 அறைகள். குசினி. இரண்டு குளியல் அறைகள் மற்றும் சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது. தரகர் தேவையில்லை.
077 134 0858, 021 205 9213

**வேலையாள் தேவை**
செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு வேலைக்கு ஆள் தேவை. 20,000/= சம்பளமும் மதிய உணவும் வழங்கப்படும். (11.18)
021 791 2997

**ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு வகுப்புக்கள்**
G.C.E. (A/L) பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும் ஆங்கில அறிவு தேவைப்படுகின்ற ஏனைய மாணவர்களுக்கும் மிக விரிவான முறையில் ஆங்கிலம், பிரெஞ் ஆகியன சலுகைக் கட்டண அடிப்படையில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
**க.சி. சிவசுப்பிரமணியம்**
சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர்
கந்த முருகேசனார் வீதி,
புலோலி தெற்கு,புலோலி.
021 226 0277

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி அழைப்பு**
நாளை (29.05.2016) ஞாயிற்றுக் கிழமை முரசுமோட்டை, முரசொலி விளையாட்டுக்கழகத்தினால் கழக மைதானத்திடலில் நடத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**நேரம்: பிற்பகல் ஒரு மணி**
**முரசொலி விளையாட்டுக்கழகம்.**
**முரசுமோட்டை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணை அச்சுறுத்திய மூவருக்கு விளக்கமறியல்

## பாலியல் துஷ்பிரயோக வழக்குத் தொடர்பில்

கிளிநொச்சி,மே 28

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கை மீளப் பெறுமாறு சாட்சியாளரான பாதிக்கப்பட்ட பெண்ணை அச்சுறுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட, கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியில் பெண் ஒருவரைத் திருமணம் செய்வதாகக் கூறி, ஏமாற்றிப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்து பாதிக்கப்பட்ட பெண்ணால் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யபப்பட்டது.

முறைப்பாட்டை அடுத்து குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த வழக்கின் போது பாலியல் குற்றச்சாட்டுத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரும் மற்றும் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்ட இருவரும் பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணைகளின் போது, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்,செயலாளர், பொருளாளர் ஆகியோர் வழக்கைத் திரும்பப் பெறுமாறு கூறித் தன்னை அச்சுறுத்துவதாகப் பாதிக்கப்பட்ட பெண், சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட நீதிவான், பாதிக்கப்பட்ட பெண்ணால் குற்றம் சாட்டப்பட்டுள்ள, மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கிளிநொச்சிப் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரிக்கு உத்தர விட்டிருந்தார். அத்தோடு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் எவரும் தலையிடக் கூடாது எனவும் அவ்வாறு தலையிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர், மற்றும் பொருளாளர் ஆகியோர் நேற்று முன்தினம் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபர்களான மூவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும், குறித்த பெண்ணுக்கு இடம் பெற்ற சம்பவம் பாரதூரமானது என்றும் நீதிவான் தெரிவித்தார்.

(ஐ-4-21-ரி3)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 29.04.2016 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா சிவப்பிரகாசம்

[ சிவம் - அம்பாள் ஸரோர்ஸ் அன் குறோசறீஸ், பண்டத்தரிப்பு ]



தோற்றம்
27.04.1940

மறைவு
29.04.2016

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 27.05.2016 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் சம்பில்த்துறை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (29.05.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

(J 1646)(14,17,18)

அம்மன் கோயிலடி,
பனிப்புலம், பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

மலர்வு
19
.
05
.
1951



உதிர்வு
26
.
05
.
2016

## திருமதி அரிதேவி கனகரட்ணம்

யாழ். பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரிதேவி கனகரட்ணம் 26.05.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா-லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், வான்மதி(இந்தியா), கிருஷ்ணகுமார்(ஜேர்மனி), சுரேஷ்குமார்(பிரான்ஸ்), சுதாமதி(லண்டன்), சுமதி(நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஏரம்பு, சரஸ்வதி, செல்லம்மா, தர்மராஜா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வகுமார், கிரிஜா, கேதாஜினி, வசீகரன், ஜெகதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷோபனா, கரிஷ், டிலக்சன், ஜஸ்மிகா, கிஷோர் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், பிறிஜன்ந், சமிஷ்கா, மிதுன், ரிஷிகா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (29.05.2016) ஞாயிற்றுக் கிழமை பொன்னாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# அறிவித்தல்

**கருகம்பனை**
**கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம்**
**வருடாந்த வேள்விப் பொங்கல் விழா - 2016**

இந்த ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கல் விழா இந்த வருடமும் 28.05.2016 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. எனினும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு காரணமாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் அனுமதி மறுக்கப்பட்டி ருப்பதுடன் குறித்த விடயம் தொடர்பாக தகுந்த நீதிமன்றங்களில் தகுந்த கட்டளைகளைப் பெறும் பொருட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**அன்பார்ந்த பக்தர்கள் / பொதுமக்களுக்கு அறிவித்துக் கொள்வதாவது,**

இந்த விடயம் தொடர்பாக தகுந்த நீதிமன்றங்களில் கட்டளைகள் பெறப்பட்ட பின்னர் மேற்குறிப்பிட்ட வேள்விப் பொங்கல் விழா தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மற்றும் விவரங்கள் தங்களுக்கு அறியத் தருவோம் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்,**
**நன்றியுடன்,**
**சின்னத்துரை புஸ்பராசா**
**ஆலய தர்மகர்த்தா,**
**கருகம்பனை கவுணாவத்தை**
**நரசிங்க வைரவர் ஆலயம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சீனா-இலங்கை இடையே பொருளாதார உடன்பாடு

கொழும்பு, மே 28
சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை கையெழுத்திடப்பட்ட இந்த உடன்பாட்டின் கீழ், 13 ஆயிரத்து 800 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு சீனா கொடையாக வழங்கும்.
இந்த நிதி, பொலன்னறுவையில் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவமனை ஒன்றை அமைப்பதற்குச் செலவிடப்படும்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஆண்டு, சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் நடத்திய பேச்சுக்களில், இந்தக் கொடையை வழங்க இணக்கம் காணப்பட்டிருந்தது.
(த-ஐ-5)




கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி
இந்திராணி நித்தியானந்தராஜா
அவர்களின் பாசமிகு மாமனார்
அப்புப்பிள்ளை சின்னையா
அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது ஆத்மசாந்திக்கு பிரார்திப்பதோடு அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.
(ஜே.1651) (13.18)
ஆசிரியர் நலன்புரிசங்கம்
யா/நாவற்குழி ம.வி. நாவற்குழி கைதடி.


## இடரால் பாதிப்புற்றோருக்கு நட்ட ஈடு

கொழும்பு,மே 28
மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வீதமும், அழிவுற்ற வீடுகளுக்காக ஒரு லட்சம் ரூபாவில் இருந்து 25 லட்சங்கள் வரையில் நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவஅமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.
இயற்கை இடர்கள் தொடர்பான தேசிய காப்புறுதிகள் செயற்றிட்டத்தின் கீழ், இது தொடர்பாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதோடு, எந்தவொரு வேறு பாடுகளுமின்றி விபத்துக்களுக்கு உள்ளாகியுள்ளோருக்கு நட்டஈடு களைப் பெற்றுக் கொடுப்பதற்குச் செயற்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
அழிவுக்குள்ளாகியுள்ள வீடுகளைக் கணக்கிடும் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக உரிய சுற்றறிக்கைகள் பிரதேச செயலாளர்களுக்கும், அரச அதிபர்களுக்கும் கையளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள அமைச்சர், இருவார காலத்துக்குள் அந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித் துள்ளார்.
கடந்த 23 ஆம் திகதி இடர்முகாமைத்துவ அமைச்சில் இடம்பெற்றிருந்த ஊடகச் சந்திப்பொன்றில் வைத்தே அமைச்சர் இவற்றைத் தெரிவித்திருந்தார்.
உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒவ்வாத செயற்பாடொன்றாக,களனி ஆற்றுப்படுகையில் அனுமதியற்ற குடியமர்த்தல்களும், ஏற்பட்டுள்ள இடர் நிலைப்பாட்டுக்குக் காரணமாக இருப்பதுடன், அந்த குடியிருப்பாளர்களுக்கு வேறு இடங்களில் வீடுகளைப்பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.
(த-ஐ-22)


கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் முன்னாள்
பிரதமகுரு பிரம்மஸ்ரீ சந்திரா
ஸ்ரீபதிகுருக்கள் (J.P)
அவர்களின் அன்புத்துணைவியார்
திருமதி ஸ்ரீபதி சிவனேஸ்வரி அம்மா
அவர்கள் 26.05.2016 வியாழக்கிழமை இறைபதம் எய்தியமையையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி சாந்தி சாந்தி
யாழ். மணிக்கூட்டு வீதி, அரசடி விநாயகர் ஆலய
பரிபாலனசபையினரும், பூசகர்களும், ஊழியர்களும்.



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் இராசா அருணகிரி
(CL - 29 இலக்க மோட்டார் வாகன உரிமையாளர்)
தாயின் மடியில்
15.09.1936
இறைவன் அடியில்
28.04.2016

எமது குடும்பத்து விளக்காக இருந்து எம்மையெல்லாம் வாழவைத்த உங்களது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் தெரிவித்தோருக்கும் பல வழிகளிலும் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இன்று (28.05.2016) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அரசடி வீதி,
இருபாலை.
(ஜே/1593) (11,18)
குடும்பத்தினர்.
021 223 0706



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 28.04.2016 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்
பொன்னு சிவப்பிரகாசம்



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.05.2016) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.
(ஜே/1644) (11,18)
குடும்பத்தினர்.


## தமிழ்மொழி தினநிகழ்வுகள்

சாவகச்சேரி, மே 28
மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலய தமிழ்மொழித் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் வித்தியாலய கலையரங்கில் நடைபெறவுள் ளன. அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்னவும், சிறப்பு விருந்தினராக வலயதமிழ்ப் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமாரும் கலந்துகொள்வர்.
(த-ஐ-9)

## விவாவத சுற்றுப்போட்டி

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும், கல்வி அமைச்சும் இணைந்து, சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக, நடாத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான விவாவதச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.
யாழ்.மாவட்டத்தின் 35 பாடசாலைகள் இதில் பங்குபற்றவுள்ளன. இறுதிப் போட்டியில் வெற்றி பெறும்அணி, தேசிய ரீதியில் இடம்பெறும் போட்டியில் கலந்து கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-ஐ-5)


31 ஆம் நாள் நினைவஞ்சலி
நமசிவாயம் குணபாலராஜா

மலர்வு
11.09.1941



உதிர்வு
28.04.2016

குடும்ப குத்துவிளக்காய் ஒளி வீசிய சுடரே
நாற்பத்திரண்டு ஆண்டுகளாய் புஸ்பவனத்தில்
லக்ஷி, லக்ஷன் சேர்ந்து மலர்ந்த நந்தவதனமதில்
சிரித்து ஆடி வலம் வந்த பூந்தென்றலே
இன்று உம் மூச்சை நிறுத்தி எமை
உஷ்ணக்காற்றில் தவிக்க விட்டு விட்டீர்களே
சொந்தமே சொர்க்கம் என்று அயராது உழைத்தவரே
அல்லும் பகலும் பாராது உழைத்த இராஜதேனியே
குடும்ப உயர்வு கண்டு உள்ளம் பூரித்தவரே
உம் சேவை குடும்பத்திற்கு இனிப்போதுமென்றா
இறைசேவை செய்ய விரைந்து சென்றீரோ
கண்கலங்கி நிற்கிறோம் உணர்வுகளில் உமைசுமந்து
உமதான்மா இறைஅடியில் உன்னதமாய் இளைப்பாற
இறையருளை இறைஞ்சுகின்றோம்
வலி கொண்ட நெஞ்சோடு
28.04.2016 அன்று இறைவனடி சேர்ந்த எம் குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு எம் துயரில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் கூறிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.
28/1, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(J 1650)(14,17,18)
குடும்பத்தினர்.



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01.09.1943



விண்ணில்
08.06.2015
திதி: ஸப்தமி

அமரர் செல்லம் பொன்னுத்துரை
நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி ஆண்டொன்று சென்றாலும்
எம்மைவிட்டு நீங்காது உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
[illegible],
கைதடி.
(J.165[illegible]3.18)
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் குற்றச் செயல்களை தடுக்க உடனடி நடவடிக்கை

## புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதி



யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணத்தில் நடைபெறும், குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு சட்டம் மற்றும் நீதிக்கு அமைவாக உரிய நடவடிக்கைகளை நீதியின் வழியில் மேற்கொள்வேன் எனப் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையேற்ற சஞ்சீவ தர்மரத்தின தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நேற்று முன்தினம் பொறுப்பேற்கும் நிகழ்வு அலுவலக வளாகத்தில் பொலிஸாரின் அணிவகுப்பு மற்றும் சர்வமத வழிபாடுகளுடன் இடம்பெற்றது.

இதன் நிறைவில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், புதிதாக இந்த மாவட்டத்தின் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளேன். முதலில் உடனடியாக இந்த மாவட்டத்தின் பூரண நிலைமையை முழுமையாக அறிந்து கொண்டு அதன் பின்பு அவற்றை உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று தீர்வு பெற்று வழங்கப்படும்.

இதற்காக என்னால் ஆன அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வேன். அதேபோன்று எனது பணியை செவ்வனே முன்னெடுக்க அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன்–என்றார். யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. அதனை ஏற்றுக்கொண்ட பின்னர், பௌத்த,இந்து, இஸ்லாம், மற்றும் கிறிஸ்தவ மத வழிபாட்டைத் தொடர்ந்து பதிவேட்டில் கையொப்பமிட்டு தனது கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

மாத்தளை பொலிஸ் பிரிவில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய இவர், யாழ்ப்பாணத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (த-ஜ-4-101-106)

# சிறகுவலைத் தொழிலாளருக்கான கடற்றொழில் அமைப்பு உருவாக்கம்

யாழ்ப்பாணம்,மே 28
வலி.தென் மேற்கு பிரதேசத்திலுள்ள சிறகுவலைத் தொழிலாளர்களின் நலன் கருதி சிறகு வலை கிராமிய கடற்றொழில் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் என்.பொன்னம்பலம் தலைமையில், சாவற்கட்டு கடற்றொழில் அமைப்புக்களின் காரியாலயத் தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 11 பேர் கொண்ட நிர்வாக சபை உத் தியோகத்தர்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் மீனவர் எந்தப் பகுதியிலும் தொழில் செய்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனுமதியின்றி ஒரு துறையில் தங்கியிருந்து தொழில் செய்வதற்கு மட்டும் தடை விதிக் கப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்.மாவட்ட மீனவர், கிளிநொச்சி மாவட்ட கடற்பரப்பில் தொழில் செய்வதற்கு அதிகாரிகளும், மீனவ சங்கங்களும் அனுமதி மறுப்பதால் குடாநாட்டு மீனவர்கள் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த நிலைப்பாடு குறித்து சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கும், மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும் விரிவாக எடுத்து விளக்கிய போதிலும் தொடர்ந்தும் தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதால், சிறகு வலைத் தொழிலில் ஈடுபடுபவர்களின் உரிமையைப் பாது காக்கும் நோக்குடன் மேற்படி சங்கம் உருவாக்கப்பட் டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

இன்று நடைபெறவிருக்கும் சண் டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ற-ஜ-115)

# கிராம அலுவலருடன் முரண்; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 28
கிராம அலுவலருடன் முரண்பட்டார் என்று குற்றஞ்சாட் டப்படும் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர், நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரொருவரைப் பிணையில் எடுப்பதற்காக, உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றைக் கிராம அலுவலரிடம் பெறச் சென்ற பெண்ணைக் குறித்த கிராம அலுவலர் தரக்குறைவாகப் பேசியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதனாலேயே குறித்த கிராம அலுவலருடன் குறித்த சந்தேகநபர் முரண்பட்டுள்ளார் என்றும் ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

பிணை விண்ணப்பத்தின் அடிப்படையில், வதிவிடத்தையும், பிணையாளியையும் கிராம சேவையாளர் உறுதிப்படுத்திக் கடிதம் வழங்கிய பின்னரே, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை விடுவிப்பது வழமை. இமையாணன் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சிறு குற்றச்செயல் ஒன்றுடன் தொடர்புபட்டு விளக்கமறியலில் இருந்து வருகிறார்.

குறித்த இளைஞரைப் பிணையில் எடுப்பதற்கு அவரது தாயார் கிராம அலுவலரிடம் பத்திரத்தில் கையொப்பமிடக் கேட்டபோது, குறித்த கிராம அலுவலர் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்ததுடன் உறுதிப்படுத்திக் கடிதம் வழங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாரால் கூறப்படுகிறது.

அது தொடர்பில் தாயார் சகோதரர்களுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டிலேயே ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் கூறினர். (த-வ-4-26-107)

# மாமியாரின் எ.ரி.எம். அட்டையை திருடிய மருமகள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,மே 28
கணவனின் தாயாரின் கைப்பையில் இருந்து எ.ரி.எம். அட்டையைத் திருடி ஒரு இலட்சத்து 89 ஆயிரம் பணத்தைத் திருடிய மருமகளை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதியை அண்மித்ததொரு தினத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை, தும்பளைப் பகுதியில் உள்ள கணவனின் தாயாரின் வீட்டுக்கு வந்த மருமகள், அவரது கைப்பையில் இருந்த எ.ரி.எம் அட்டையைத் திருடியுள்ளார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள அரச வங்கி ஒன்றின் கிளைகளில் ஏ.ரி.எம் இயந்திரம் மூலம் பணத்தைத் தொடர்ச்சியாக அவர் பெற்றுக் கொண்டு வந்துள்ளார். எ.ரி.எம் அட்டையை எங்கு தேடியும் காணத நிலையில், மாமியார் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணைகளின் மூலம் நேற்று முன்தினம் மருமகளைக் கைது செய்த பொலிஸார், பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஜ-4-107-26)

# உரையாடல் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மே 28
'மனக் கவலை மாற்றல் அரிதா' எனும் தலைப்பிலான உரையாடல் நிகழ்வு ஒன்று சிந்தனைக் கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

இல.121, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள சிந்தனைக் கூட கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த உரையை பொறியியலாளர் மாவை நித்தியானந்தன் ஆற்றவுள்ளார். மேற்படி உரையாடல் நிகழ்வுக்கு ஆர்வமுள்ளளோர் வருகை தந்து பயன்பெற முடியும் என சிந்தனைக் கூட பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (த-ஜ-4)

# டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய காணிகளை துப்புரவாக்க அவகாசம்

சாவகச்சேரி,மே 28
அண்மையில் பெய்த மழையின்போது குடியிருப்புகள் மற்றும் காணிகளில், டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் காணப்பட்ட குடியிருப்புகள் மற்றும் காணிகள் போன்றவற்றை ஒரு வார காலத்துக்குள் துப்புரவு செய்யுமாறு நிபந்தனையுடன் அறிவித்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வடமாகாண சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கமைய விசேட டெங்குக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் பிரதேசத்தின் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியினருடன், பொலிஸார், படையினர், பிரதேச செயலக அலுவலர்கள், உள்ளூராட்சி சபையினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் குழுக்களாகச் சென்று தரிசிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

தரிசிப்பின் போது, அண்மையில் பெய்த மழையால் குடியிருப்புகள் மற்றும் காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய கொள் கலன்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், தகரங்கள், குவளைகள், தகர ரின்கள், இளநீர்க் கோம்பைகள் உட்பட பல பொருள்களில் மழை நீர் தேங்கி நின்றதை அவதானித்துள்ளனர்.

குடியிருப்பாளர் மற்றும் காணி பராமரிப்பாளர் ஆகியோருக்கு ஒரு வார கால அவகாசத்துள் காணியைத் துப்பரவு செய்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தல்களை வழங்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் வரை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாகத் தரிசிப்புகள் இடம்பெற்று வருவதால், தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (த-ற-ஜ-9)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 28
வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 நடைபெறவுள்ளது.

இதேவேளை அன்றைய தினம் நடைபெறவிருந்த வட மராட்சி தெற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 98 வீதமான போராளிகள் சமூகத்துடன் இணைப்பு

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் வவுனியாவில் தெரிவிப்பு

வவுனியா, மே 28

விடுதலைப்புலிகளுடன்இணைந்து போரில் ஈடுபட்ட 98 வீதமானவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டு, அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பொருளாதார ரீதியாக உயரக் கூடிய வகையில் பல பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்னாயக்க தெரிவித்தார்.

வவுனியா,பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை அவர்களுடைய உறவினர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்னும் சில வருடங்களில் புனர்வாழ்வு அளிக்கும் பணிகள் நிறைவடைந்து விடும். கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து போரில் ஈடுபட்ட 98 சதவீதமானவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டு அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

எமது நாட்டில் கடந்த 30 வருட காலமாகப் போர் இடம்பெற்றது. அதனால் நாம் இன்று பொருளாதார ரீதியாகப் பின் நிற்கின்றோம். போர் இடம்பெற்றிருக்காவிட்டால், எமது நாடு இன்று சிங்கப்பூர் போல் மாறியிருக்கும். இன்று உலகில் பல நாடுகள் ஒற்றுமையுடன் வாழ்ந்து தமது நாட்டைக்கட்டியெழுப்பியுள்ளனர். நெல்சன் மண்டேலா 20-25 வருடங்கள் பிரிட்டனில் துன்புறுத்தப்பட்டவர். ஆனால் அவர் பழிவாங்க நினைக்கவில்லை. கோபம், பகை அவரிடம் இருக்கவில்லை. இதனால் இன்று ஆபிரிக்கா ஒரு சிறந்த நாடாக மாறியது. 1947, 1948 ஆம் ஆண்டுகளில் குருதி சிந்தாது அகிம்சை வழியில் நாம் எமது உரிமைகளைப் பெற்றிருந்தோம். இந்தியா கூட ஒரு காலத்தில் எம்முடன் சமமாக நின்ற நாடு. இன்று பொருளாதாரத்தில் அந்த நாடு வளர்ச்சியடைந்து அதன் நாணயப் பெறுமதி எமது நாட்டு நாணயப் பெறுமதியை விட உயர்ந்துள்ளது.

இந்தியாவில் இருந்து எமது நாட்டுக்கு மோட்டர் சைக்கிள், கார் என பல உற்பத்திப் பொருள்கள் வருகின்றன. அதையே நாம் இன்று வாங்கிப் பயன்படுத்துகின்றோம். இந்தியா பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு வேறு வேறு மொழிகள் பயன்படுத்தப்பட்டாலும் அவர்களின் ஒருமைப்பாடு, கூட்டாகச் செயற்படும் திறன், சாந்தி, சமாதானமே இந்த வளர்ச்சிக்குக் காரணம்.

ஆனால் எமது நாடு ஒரு சிறிய நாடு. சனத்தொகை குறைவு 9 மாகாணங்கள் தான் உள்ளன. பரந்த பிரதேசங்கள் இருந்த போதும் முள்ளியவாய்க்காலில் 3 இலட்சம் மக்கள் தான் இருந்தார்கள். ஆகவே நிலப்பரப்பு அதிகமாகவுள்ளது. மக்கள் தொகை குறைவு. எமது நாட்டில் பல இடங்களில் வளங்களும் உள்ளன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரிட்டன் போன்ற ஐரோப்பியர்கள் இங்கு வந்தமைக்கு எமது பிராந்திய நிலையமே காரணம்.

நாம் ஏனைய நாடுகளுக்கு ஒரு முக்கியமான இடத்தில் இருக்கின்றோம். ஒவ்வொரு நாடுகளும் தங்கள் தங்கள் நடவடிக்கைக்கு எம்மை பயன்படுத்துகிறார்கள். வெளிநாடுகளின் தவறான நடத்தைகளால் எமது நாட்டில் போர் நடந்து, இன்று கல்வி, பொருளாதாரம் என பல துறைகளும் சீரழிந்த நிலையில் உள்ளன.

போர் அழிவுகள் முள்ளியவாய்க்கால் வரை ஏற்பட்டது. இதற்கு காரணம் என்ன? அயல்நாடுகள் எமது நாட்டின் வளர்ச்சியைப் பொறுக்காது பிரச்சினைகளை வளர்த்து விட்டார்கள். இதனால் நாங்கள் தான் பாதிக்கப்பட்டோம். அரபு நாடுகளில் வளம் இருந்தாலும் அவர்கள் நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஐ.எஸ். ஐ.எஸ். போன்ற பல தீவிரவாத அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் எமது நாட்டில் அவ்வாறான நிலமை இல்லை.

எனவே 2009 மே மாதத்துக்குப் பின் இந்த நாட்டில் போர் முடிவடைந்து பல அபிவிருத்திகள் ஏற்பட்டு வருகின்றன. புனர்வாழ்வு பெற்றவர்களுக்கும் பொருளாதார ரீதியாக உயரக் கூடிய வகையில் பல பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டு பொருளாதார ரீதியாக எமது நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். -என்றார்.

(த-ஜ-21)

---

## முன்னாள் போராளிகள் 8 பேர் குடும்பங்களுடன் இணைந்தனர்

வவுனியா, மே 28

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு வருடம் புனர்வாழ்வுப் பயிற்சிகளை நிறைவு செய்த விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 8 பேர் அவர்களின் குடும்பத்துடன் கடந்த புதன் கிழமை இணைக்கப்பட்டனர்.

குறித்த நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணிமனை புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் எல். டீ. எம். சி. ஜானக ரத்னாயக்க, வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு பணிப்பாளர் எம். எ. ஆர்.



கெமிடேன், வவுனியா புனர்வாழ்வு நிலைய பொறுப்பதிகாரி பி.எ. குணசேகர, மற்றும் இராணுவ அதிகாரிகள், மூவின சமயத் தலைவர்கள், வவுனியா பூந்தோட்டம் பொலிஸ் நிலைய அதிகாரி, முன்னாள் போராளிகளின் உறவினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இன்று சமூகத்துடன் இணைந்து கொண்ட முன்னாள் போராளி சுப்பையா ஜெயசங்கர் புனர்வாழ்வு பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் போது கருத்துத்தெரிவிக்கையில், புனர்வாழ்வு பயிற்சியை நிறைவு செய்து கொண்டு வெளியேறுவதில் சந்தோசம், அத்துடன் எம்முடன் சிறையிலிருக்கும் மேலும் முன்னாள் போராளிகளும் எம்மைப் போன்று புனர்வாழ்வு பெற்று வெளியேறும்போது தான் அவர்களின் குடும்பத்தினருக்கும் சந்தோசம் ஏற்படும். எமக்குப் போதிய பயிற்சிகளைப் புனர்வாழ்வு நிலையத்தில் பயிற்சியளித்துள்ளதுடன், நாம் வெளியே சென்று சுயதொழில் மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சிளை அதிகாரிகள் வழங்கியுள்ளனர். ஓம் சாந்தி பயிற்சி மூலம் சிறந்த ஒரு நிலையை அடைந்துள்ளோம். குடும்பத்தினருடன் இணைந்து கொண்டது சந்தோசம் அளிக்கிறது. புனர்வாழ்வு நிலைய அதிகாரிகளுக்கு தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ஜ-4)

---

## சிங்கள மொழி பயிற்சி வகுப்புக்கள் மன்னார் பாடசாலையில் ஆரம்பிப்பு

மன்னார், மே 28

மன்னார் பேசாலை பொலிஸாரின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் சிங்கள மொழி பயிற்சி வகுப்பு முதற் தடவையாக பேசாலை சென் மேரிஸ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வுகடந்தசெவ்வாய்க்கிழமை பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிங்சிலி கேரத்தால் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

பேசாலை கிராமத்தின் சிங்கள மொழி அறிவை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிங்சிலி கேரத் குறித்த சிங்கள மொழி பயிற்சி வகுப்பை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பாடசாலையில் 2ஆம், 3ஆம், 4ஆம் ஆண்டுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் வெவ்வேறு நேரங்களில் சிங்கள வகுப்புக்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் பாடசாலை அதிபர் செபஸ்ரியான் ராஜேஸ்வரன் பச்சேக், பேசாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிங்சிலி கேரத் உட்பட பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(த-ற-ஜ-56)

---

## இளைஞர் சேவைகள் மன்றத்தின் கொடி வாரம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், மே 27



மன்னாரில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கொடி வார நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வருடாந்தம் முன்னெடுக்கப்படும் இந்தக் கொடி வாரம் கடந்த புதன் கிழமை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ரி.பூலோகராஜா தலைமையில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரியவுக்கு, வைபவ ரீதியாக முதற் கொடி சூட்டப்பட்டு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கொடி வார நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் கொடிகள் சூட்டப்பட்டன. நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண [illegible] இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட சம்மேளனத்தலைவர் சி.வ[illegible]குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(த-ற-ஜ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## சட்டவிரோதமாகப் பசு மாடு வெட்டிய நால்வர் சிக்கினர்


வவுனியா,மே 28

சட்ட விரோதமாகப் பசுமாடுகளை வெட்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் வவுனியா விசேட அதிரடிப்படையினரால் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை காலை 5 மணியளவில் வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றது.

வவுனியா சோயா வீதியிலிருக்கும் வவுனியா நகரசபைக்குச் சொந்தமான மாடு வெட்டும் கொல் களத்தில், பசுமாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன என வவுனியா விசேட அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றது.

அதையடுத்து, குறித்த கொல்களத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போதே வெட்டப்பட்ட நிலயில் இருந்த இரு பசுமாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அத்தோடு அந்தக் கொல் களத்தில் பணியாற்றிய நால்வரை விசேட அதிரடிப் படையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விசேட அதிரடிப்படையினரால்பொலிஸா



ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, இவர்கள் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-ற-ஜ-21)

# வவுனியாவில் சிறப்புற நடந்த ஆசிரியர் மாநாடு






வவுனியா,மே 28
வவுனியா தெற்கு கல்வி வலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரிய மாநாடு சிறப்பாக ஆரம்பமானது.
இந்த மாநாடு வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் நேற்றுமுன்தினம் காலை எழுச்சியாக ஆரம்பமானது
வடக்கு மாகாண கல்வியமைச்சின் அனுசரணையுடன், இரண்டு நாள்களைக் கொண்ட இந்த ஆசிரியர் மாநாட்டின் முதல் நாள் நிகழ்வே நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
இந்த ஆசிரியர் மாநாட்டின் முதல் நிகழ்வாக, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கண்காட்சி வைபவம் இடம்பெற்றது. இந்தக் கண்காட்சி முன்பள்ளி மாணவர்கள் மற்றும் தரம் 1 முதல் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பாட அலகுகள் ரீதியாக பல்வேறு அறிவியல் பூர்வமாகஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.
தொடர்ந்து வவுனியா சைவப்பிரகாச மகளிர்கல்லூரியிலிருந்து பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.
தொடர்ந்து முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி க.சீனிவாசகம் அரங்கில், அன்னாருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு ஆசிரியர் கீதம் இடம்பெற்றது. இதை அடுத்து மாணவர்களுடைய வரவேற்பு நடனம் மற்றும் வரவேற்பு உரைகளும் இடம்பெற்றுத் தொடர்ந்து மாநாடு ஆரம்பமானது.
மாநாட்டுக்கான அறிமுக உரையை ஆசிரிய ஆலோசகர் இ.மாதவன் நிகழ்த்தினார். ஆய்வுகளை ஆசிரியர்கள் முன்வைத்தனர்
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மேலதிக மாகாண கல்விப்பாளர் திருமதி. செல்வின் உட்பட வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்

(த-ஜ-21-402)

# மழையினால் வயல்களில் முளைத்தன நெற்பயிர்கள்

## இயந்திர அறுவடையே காரணம்

யாழ்ப்பாணம், மே 28
தென்மராட்சிப் பிரதேச வயல்களில், சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதைப்போன்று நெற் பயிர்கள் காணப்படுகின்றன. அண்மையில் பெய்த மழையின் காரணமாக இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.
தென்மராட்சிப் பிரதேச வயல்களில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதில்லை. காலபோக நெல் அறுவடையின் பின்னர் வயல்களில் ஈரப் பதம் காணப்பட்டது. இதனால் காலபோக நெற் செய்கை மேற்கொண்டவர்கள், அதன் பின்னர் வயல்களை உழுது சிறுதானியப் பயிர்களை விதைத்தனர்.
சிறுதானியப் பயிர்கள் அறுவடைக்குத் தயாராக இருந்தன. இந்த நிலையில் கடந்த வாரம் கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் சிறு தானியப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடைந்து விட்டன. தற்போது வெள்ளம் வற்றியுள்ள நிலையில், வயல்களில் நெற் பயிர்கள் காணப்படுகின்றன.
இதற்குக் காரணம், காலபோக நெற்பயிர்ச் செய்கையின் அறுவடையின் போது இயந்திரங்களைப் பயன்படுத்தியமையே என்று தெரிவித்த விவசாயிகள் மனிதவலுமூலம்நெல்அறுவடை செய்யப்பட்ட போது நெற்பயிர்கள் பெருமளவில் உடைந்து வீழ்வதில்லை. ஆனால் தற்போது இயந்திரங்கள் ஊடாகவே நெல் அறுவடை மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது பெருமளவு நெல் நிலத்தில் வீழ்கின்றது. இவ்வாறு வீழ்கின்ற நெல்லே, கடந்த மழையுடன் முளைத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

(த-ஜ-5-9)



வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த 2016 ஆம் ஆண்டுக்கான இளைஞர் தினத்துக்கான நடைபவனி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.
(ஜ-ரி7-ரி3)

# திருட முற்பட்ட இளைஞன் மக்களால் நையப்புடைப்பு

யாழ்ப்பாணம், மே 28
வீட்டுக்குள் இரவுநேரம் அத்துமீறி நுழைந்து திருட முற்பட்ட இளைஞனைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்தனர். பின்னர் அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் சிறுப்பிட்டி வைரவர் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
சிறுப்பிட்டிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில்வருடாந்தத்திருவிழா இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் இளைஞன் ஒருவர் புகுந்ததை எதேச்சையாக ஒருவர் கண்டுள்ளார். திருட்டுச் சந்தேக நபரைத் துரத்திச் சென்றபோது, அவர் அருகில் உள்ள பற்றை ஒன்றுக்குள் ஒழிந்துள்ளார். சம்பவம் அறிந்து வந்த இளைஞர்கள் குழு பற்றைக்குள் சல்லடை போட்டுத் தேடி, அவரைப் பிடித்து நையப்புடைத்துப் பின்னர் அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
இவ்வாறு திருட முற்பட்ட இளைஞன் அதே பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் எனப் பொலிஸார் கூறினர். (த-ஜ-4-107)

# இன்று மின்சாரத் தடை

யாழ்ப்பாணம், மே 28
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைவாக யாழ். பிரதேசத்தில் சங்கத்தானை, டச்சுறோட், மயிலங்காடு, குப்பிளான், வல்வெட்டித்துறை, வன்னிச்சி, சிவன் கோயில் பிரதேசம், ஊரணி ஆகிய இடங்களில் மின் தடைப்பட்டிருக்கும்.
கிளிநொச்சிப் பிரதேசத்தில் கிளிநொச்சி நகரம், திருநகர், மக்கள் வங்கி, கிளிநொச்சி மாவட்ட செயலகம் (கச்சேரி), கிளிநொச்சிலங்கா சதொச, கார்கில்ஸ் பி.எல்.சி, கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம், கோவிந்தன் கடைச் சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப்பபடை 1 மற்றும் 11, வட்டக்கச்சி பாம், டொன் பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 66 ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களில் மின்தடைப்பட்டிருக்கும்.
வவுனியா பிரதேசத்தில் குட்செட் வீதி பிரதேசத்திலும், மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார்குளம், வெள்ளிமலை, சி.இ.சி.பி, ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

(த-ஜ-ரி)

# மதுவரித் திணைக்களத்துக்கு 2ஆணையாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,மே 28
வடக்கு மாகாண மதுவரித் திணைக்களத்துக்கு இரு உதவி மதுவரி ஆணையாளர்கள் நேற்று முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாணத்தின் இரு பிரிவுகளாக வடக்கு மாகாண மதுவரித் திணைக்கள அலுவலக நடவடிக்கைகள் பிரிக்கப்பட்டு அவ்விரண்டு பிரிவுகளுக்கும் இரு மேலதிக உதவி மதுவரித் திணைக்கள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இதன் பிரகாரம் நேற்று வரை மட்டக்களப்பு மாவட்ட மதுவரி அத்தியட்சகராகப் பதவி வகித்த நா. சோதிநாதன் யாழ்ப்பாண மதுவரி அத்தியட்சகராகவும், மேலதிகமாக வடக்கு மாகாணம் இல. 01 இன் கீழ் உள்ள யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான மேலதிக பதில் உதவி மதுவரி ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
இதேபோன்று இதுவரை யாழ்ப்பாண மதுவரி அத்தியட்சகராகப் பணிபுரிந்த க.தர்மசீலன், கிளிநொச்சி மதுவரி அத்தியட்சகராகவும் மேலதிக பதில் வடமாகாண இல. 2 இன் ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
வட மாகாண இல.2 இன் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா , மன்னார் ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(த-ஜ-10)

# எல்லை நிர்ணயிக்கும் வரை மீள்குடியேறுவதற்குத் தடை

அச்சுவேலி, மே 28
மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்ட வலி.கிழக்கு, வலி வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் எல்லை நிர்ணயம் செய்யப்படும் வரை, குறித்த பகுதியில் மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தடை செய்யப்படவேண்டும் என வலி.கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாகத் தீர்மானத்தின் பிரதிகள் வலி.வடக்குப் பிரதேச செயலருக்கும், யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
வலி.கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டம் அண்மையில் வலி.கிழக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன் ஆகியோரின் இணைத் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.
ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வளலாய் கிராம அலுவலர் பிரிவு பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளால் வலி. கிழக்கு,வலி.வடக்கு பிரதேச எல்லை நிர்ணயம் தொடர்பாகவும், குறிப்பிட்ட எல்லை வளலாய்ப் பகுதிக்கு உள்ளே ஊடுருவி ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் வளலாய்ப் பகுதியைச் சேர்ந்த தனியாரின் காணிகள் பல வலி.வடக்குப் பிரதேசத்துக்கு உள்ளே செல்வதாகவும், இந்த நில ஆக்கிரமிப்பு மூலம் பொதுமக்கள் மத்தியில் கைகலப்பு மற்றும் பிரச்சினைகள் உருவாகிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.
அப்போது கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லை நிர்ணயம் செய்யும் வரை பிரச்சினைக்குரிய பகுதியில் மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. இதனை இரண்டு தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.
தீர்மானம் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு தீர்மானத்தின் பிரதிகளை வலி.வடக்குப் பிரதேச செயலருக்கும், யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் அனுப்பி வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராசா வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், பரஞ்சோதி, க.சர்வேஸ்வரன், எஸ்.சிவாஜிலிங்கம், எஸ்.சிவயோகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(த-ஜ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண முதல்வரை விசாரணைக்கு உட்படுத்துக

### மகிந்த ராஜபக்ச வலியுறுத்து



கொழும்பு, மே 28
கடற்படை அதிகாரியான கப்டன் பிரேமரத்னவை மோசமாகத் திட்டிய கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் முகமட்டை, விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

சம்பூரில் நடந்த சம்பவம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கில், இரா.சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுடன் கிளிநொச்சி இராணுவ முகாமுக்குள் அத்துமீறிநுழைந்திருந்தார். இப்போது, இரண்டாவது சம்பவமாக கடற்படை அதிகாரியை, கிழக்கு மாகாண முதலமைச்சர் அவமரியாதைக்கு உட்படுத்தியுள்ளார். அதுவும் அமெரிக்கத் தூதுவர் முன்பாகவே இவ்வாறான சம்பவம் நடந்துள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் முன்னெப்போதும் இலங்கையில் நடைபெறவில்லை. எனவே இது குறித்து கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் அரசு விசாரணை நடத்தவேண்டும்.

இதுபோன்ற சம்பவங்கள் மீள நடைபெறாதிருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ச கோரியுள்ளார். (த-ஜ-5)

## சம்பூரில் நிகழ்ந்த சர்ச்சை; முடிவு ஜனாதிபதி கையில்

### அதுவரை கருத்துக்களை வெளியிடக்கூடாது பிரதமர் இரு தரப்பினருக்கும் வலியுறுத்து



கொழும்பு, மே 28
சம்பூரில் நடந்த சர்ச்சைக்குரிய நிகழ்வு தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவெடுக்கும் வரை, அதுபற்றி எந்தக் கருத்துக்களையும் வெளியிடக் கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இரண்டு தரப்பினரையும் வலியுறுத்தியுள்ளார்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில், கடற்படை அதிகாரியை, கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் கடுமையாகத் திட்டிய விவகாரம் தொடர்பாக பிரதமர், கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளார்.

அதேவேளை, கடற்படை ஏற்கனவே இதுபற்றிய அறிக்கை ஒன்றைப் பிரதமரிடம் கையளித்துள்ளது.

தற்போது ஜி-7 மாநாட்டுக்காக ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதும், கடற்படையினதும், கிழக்கு மாகாண முதலமைச்சினதும் அறிக்கைகளை, பிரதமர் கையளிக்கவுள்ளார்.

இந்த நிலையிலேயே, சர்ச்சைக்குரிய இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி பொருத்தமான முடிவு ஒன்றை எடுக்கும்வரை, இது தொடர்பாக கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு, கடற்படையையும், கிழக்கு முதல்வரையும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயத்தில் இறுதி முடிவு ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னரே எடுக்கப்படும் என்றும், அவர் இரண்டு தரப்பினரிடமும் தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுணவர்த்தனவிடம் இந்தச் சம்பவம் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசாரணை நடத்தியுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-ஜ-5)

## சபையில் மன்னிப்பு கோரினார் அமைச்சர்

நாடாளுமன்றத்துக்குள் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியமைக்காக, அமைச்சர் ஹரின் பெர்னான்டோ, கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சபை அமர்வின்போது மன்னிப்புக் கோரினார்.

இதன்போது சபையில் கருத்துரைத்த சபாநாயகர் கரு ஜயசூரிய, "நாடாளுமன்றத்துக்குள் இவ்வாறான வார்த்தைகளைக் கேட்பது வருந்துவதற்குரிய விடயம். இத்தகைய வார்த்தைப் பிரயோகங்களை எவரும் பயன்படுத்தக்கூடாது. அண்மையில், சபையில் இடம்பெற்ற சம்பவங்களால், நாடாளுமன்றத்தின் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளது" என்றும் தெரிவித்தார். (த-ஜ-4)

## பொத்துவில் விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்டம்

### காணிகளை மீள வழங்குமாறு கோரி

அம்பாறை, மே 28
தமது காணிகளை மீள வழங்குமாறு கோரியும், வன இலாகா மற்றும் இராணுவத்தினரின் கபளீகரச் செயற்பாட்டுக்கு ஆட்சேபம் தெரிவித்தும், பொத்துவில் முஸ்லிம் விவசாயிகள் நிந்தவூர் பிரதேச செயலகம் முன்பாக நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கிரான் கோமாரி பகுதியில் 1957 ஆம் ஆண்டு, தலா ஐந்து ஏக்கர் வீதம் வழங்கப்பட்ட விவசாயம் செய்யும் காணியை வன இலகாவினரும், இராணுவமும் கபளீகரம் செய்வதுடன், தமது காணிக்குள் செல்லத் தடை விதித்துள்ளமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் குறித்த விவசாயிகள் இந்தக்கவனவீர்ப்புப் போராட்டத்தில்



ஈடுபட்டனர். குறித்த பகுதியில் உத்தரவுப் பத்திரத்துடன் காணி பெற்ற சுமார் 180 விவசாயிகள் அங்கு காடு வெட்டி 1988 ஆம் ஆண்டு வரை விவசாயம் செய்து வந்தனர்.

ஆனால் போர்ச் சூழ்நிலை காரணமாக மேற்படி நிந்தவூரைச் சேர்ந்த முஸ்லிம் விவசாயிகள் அங்கு செல்ல முடியாது விவசாயத்தைக் கைவிட்டிருந்தனர்.

போர் முடிவுற்று சுமுக நிலையேற்பட்டதும் மீண்டும் விவசாயிகள் தமது காணிகளில் விவசாயம் செய்யச் சென்றபோது வன இலாகாவினரும், இராணுவத்தினரும் அதற்குத் தடை விதித்துள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளே தமது காணிகளை மீள வழங்குமாறு கோரியும், வன இலாகா மற்றும் இராணுவத்தினரின் கபளீகர செயற்பாட்டுக்கு ஆட்சேபம் தெரிவித்தும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கை குறித்து அம்பாறை மாவட்ட அரச அதிபருக்கான மகஜர் ஒன்றை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் நிந்தவூர் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.யூ.அப்துல் ஜலீலிடம் கையளித்தனர். (த-ஜ-30)

## வடக்கு-கிழக்கு முதல்வர்களுக்கு தொற்றியுள்ளது ஒரு வகை நோய்

### விமல் வீரவன்சவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு,மே 28
வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்டுக்கும் ஒரு வகை நோய் தொற்றிக் கொண்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னரே இந்த நோய் தொற்றிக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டத்தொகுதியில், கடந்த புதன்கிழமை தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"அழைப்பில்லாத வைபவத்துக்குச் சென்ற கிழக்கு மாகாண முதலமைச்சர், அங்கு படையின் உயரதிகாரியை மோசமாகத் திட்டியுள்ளார். இது, படையினரை அவமதிக்கும் செயலாகும்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், படையினரை, வடிகான்களைச் சுத்தப்படுத்துமாறு கோரியுள்ளார். இது மதிக்க வேண்டிய படையினரைச் அசிங்கப்படுத்தும் செயற்பாடாகும்.

கிழக்கு முதலமைச்சர் நடந்து கொண்ட கேவலமான செயற்பாட்டுக்காக அவருக்கு தண்டனை வழங்க வேண்டும். அத்துடன், அரசால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். படையினரை நினைவு கூர்வதை நிறுத்தவே வெற்றி விழாவை நிறுத்தினர்.

ஆனால், இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிய தன் மூலம், அவர்கள் இயற்கையாகவே ஞாபகப் படுத்தப்பட்டுவிட்டனர்-என்றார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றின்போது, தாக்கப்பட்டவரும், தாக்கியவரும் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறை நிரப்புப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் பெறுபேறு தவறானது. அப்பெறுபேற்றை அறிவித்தவருக்கும், செயலாளர் நாயகத்துக்கும் எந்தவித மான தண்டனையும் வழங்கப்படவில்லை.

ஆகையால் நான், செங்கோலுக்கும் சபாநாயகருக்கும் மரியாதை செலுத்துவது தொடர்பில், சிந்திக்க வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கவனவீர்ப்பு

## தமிழ் மாணவன் மீதான தாக்குதலைக் கண்டித்து

யாழ்ப்பாணம், மே 28
மாணவ சமூகத்தினரிடையே இனத்துவேசம் தேவையா? என்ற கோசத்தை முன்வைத்து, கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களால் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட தமிழ் மாணவன், நினைவேந்தல் படத்தை அவரது முகநூலில் பதிவேற்றம் செய்துள்ளார்.

இதற்காகச் சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவன் மீது, தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரோ, பல்கலைக்கழக நிர்வாகமோ நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை, கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள், இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது முன்வைத்தனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது மாணவ சமூகத்தினரிடையே இனத்துவேசம் தேவையா ?, தமிழ் நீதிக்கு வேலி இனத்துவமா?, கல்வி கற்பதா கலவரம் செய்வதா ? நிர்வாகமே என்ன பதில், தாக்கப்பட்ட உறவுக்கு நிர்வாகத்தின் நீதி என்ன ?, பல்கலைக் கழகங்களில் இனத்துவேசத்தை தூண்டாதே, இனவாதத்தை தூண்டும் காடையர்களை இங்கிருந்து வெளியேற்று, எமது தேசத்தில் எம்மை பகைத்து எதனை எதிர்பார்க்கிறாய்?, பல்கலையில் நீ கற்பது இந்த சமத்துவத்தைத் தானா ?, சக மாணவனை அச்சுறுத்த இனவாதம் தேவையா ? உட்பட பல சுலோகங்களை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அங்கு விரைந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சா.வியாழேந்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

இதன் பின்பு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடந்த ஆட்சியாளர் காலத்தில் இருந்து தற்போதுவரை இவ்வாறான கெடுபிடிகள் தொடர்கின்றன. தமிழ் மாணவர்களுக்கு எதிரான மிலேச்சத்தனமான தாக்குதல் போன்றவை நிறுத்தப்படமால் தொடர்ச்சியாகச் சிங்கள மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை மக்கள் பிரதிநிதிகளான நாங்கள் அனுமதிக்க முடியாது.

கடந்த காலங்களில் கிழக்குப் பல்கலைக் கழகத்துக்குள் சிங்கள மாணவர்களின் உள்நுழைவே இதற்கு முக்கியமான காரணமாக உள்ளது. பல்கலைக்கழகத்தில் இவ்வாறான தாக்குதல்கள் மற் றும் சிங்கள மாணவர்களது அதிகரித்த உள்நுழைவு தொடர்பாக,நாடாளுமன்றம் மற்றும் பல்கலைக் கழ்க மானியங்கள் ஆணைக்குழு போன்றவற்றுடன் கலந்து ரையாடி எதிர்காலங்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்கள்.

(த-ஐ-5)

## மகிந்தவின் பாதுகாவலர்களின் வங்கிக் கணக்குகளை ஆராய்க

### கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,மே 28
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மூன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பெயர்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்குகள் மற்றும் பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த அறிக்கையைக் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

72 வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் பங்குச் சந்தை ஆகியவற்றுக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பிரிகேடியர் தம்மித கோமின், மேஜர் நெவில் வன்னியாராச்சி மற்றும் கப்டன் திஸ்ஸ விமலசேன ஆகிய மூவருக்கும் எதிராகவே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

(த-ஐ-4)



## குமார் குணரட்ணத்தின் குடியுரிமையில் சிக்கல்

கொழும்பு,மே 28
முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் குமார் குணரட்ணத்துக்குக் குடியுரிமை வழங்குவது குறித்து, சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அது தொடர்பான அறிக்கையை எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி நீதிமன்றுக்கு அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் குடியுரிமை வழங்குமாறு குமார் குணரட்ணம் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதில் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர், சட்டமா அதிபர் உள்ளிட்டவர்கள் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். குடியுரிமை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, இதுவரை உரிய பதிலளிக்கப்படவில்லை என குமார் குணரட்ணம் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது குமார் குணரட்ணத்துக்குப் பிணை வழங்குவது குறித்து சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதி [illegible] உத்தரவிட்டுள்ளனர்.

(த-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரிடரால் புத்தகங்கள் அழிவு மாணவர்கள் பெரும் இடர்ப்பாடு

கொழும்பு, மே 28
அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அள்ளிச் செல்லப்பட்டவற்றுள் மாணவர்களின் புத்தகங்கள், பாடக் குறிப்புகளும் உள்ளடங்குகின்றன.

அதனால் பரீட்சைக்குப் படிப்பதில் சிரமத்தையும், இடர்ப்பாடுகளையும் எதிர்கொண்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. அதனால் வீட்டிலுள்ள ஏனைய பொருள்கள் போன்றே மாணவர்களின் பாடப்புத்தங்களும், பாடக் குறிப்புகளும் நீரில் மூழ்கின. பலரது புத்தகங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

வீடுகளுக்குள் எஞ்சிய புத்தகங்கள் நீரில் ஊறிப் பயன்படுத்த முடியாத வகையில் சேதமடைந்துவிட்டன.

இந்த நிலையில் வெள்ளம் தற்போது வடிந்து வரும் வேளையில் ஏனைய பொருள்கள் போன்றே, மாணவர்கள் தமது கற்றல் பொருள்களையும் மீட்கின்றனர். ஆனால் பயன்படக்கூடிய தான வகையில் புத்தகங்கள் எவையும் மீட்கப்படவில்லை என்று மாணவர்கள் கூறுகின்றனர். அதனால் மாற்று ஏற்பாடு செய்து தரப்படவேண்டும் என்றும் மாணவர்கள் கோரியுள்ளனர். (த-ஐ-4)

## லஞ்ச ஊழல் அதிகாரிகள் மீது டலஸ் அழகப்பெரும சாடல்

கூட்டு எதிரணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை வேட்டையாடுவதற்காக, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள், முதன்முறையாக நாடாளுமன்றத்துக்கு வருகின்றனர் என டலஸ் அழகப்பெரும குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரியின்றி வாகனங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அதற்கு மேலதிகமாக அதிசொகுசு வாகனமொன்றை இலஞ்சமாக வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்காக அமைச்சரவைப் பத்திரத்தையும் அரசு சமர்ப்பித்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (த-ஐ-4)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
15 . 05 . 1939

இறப்பு
04 . 06 . 2014

**திருமதி சரோஜினி துரைசிங்கம்**
( B.Sc(Ceylon)
ஓய்வு நிலை இரசாயனவியல் மற்றும் தாவரவியல் ஆசிரியை
1962 - 1976 வேம்படி மகளிர்
1976 - 1996 கனகரெத்தினம் (Stanley) )

திதி: 2016.05.28

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உம்முடைய இன் முகத்தையோ
நல் ஆலோசனைகளையோ சமயோசித புத்தியையோ
இக்கட்டான வேளைகளில் நீர் எடுக்கும் முடிவுகளையோ எம்மால்
எப்படி அம்மா மறக்க முடியும் ? உருக்கும் ஏக்கத்திலிருந்து விடுபட
முடியவில்லையே உம்முடைய சகிப்பும் வழிநடத்தலும் அன்பான
முத்துப் புன்னகையும் இன்றில்லையே எம்மைத் தவிக்க விட்டு
இப்பூவுலகிலிருந்து நிம்மதியாகச் சென்று விட்டாயா ?
நயவஞ்சகரில்லா உலகிற்கு நீர் சென்றுவிட்டதில்
எமக்கு முழு மன நிறைவு அம்மா
அந்தமன நிறைவுடன் கவலைகளை மறக்க எத்தனிக்கிறோம்

(J 1396)(14,17,18)

588/4, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(கனகரெத்தினம் மத்தியமகா வித்தியாலயம் எதிர் சிற்றொழுங்கை)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முல்லை.மாவட்டம் தமிழர் வசமிருந்து தட்டிப் பறிக்கப்படும் போக்கு!

இந்த நாட்டில், முல்லைத்தீவு மாவட்டத்திலேயே, அதிக எண்ணிக்கையான மக்கள் வறுமையால் வாடுகின்றனர். அந்த மக்களின் வறுமையைப் போக்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், வறுமையால் அதிகம் பேர் உயிரிழந்த மாவட்டமாக அதுமாறும்; உருவாகும் என்று நல்லாட்சி அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார், வடமாகாண சபையின் உறுப்பினர் ரவிகரன்.

வறுமையால் வாடும் அந்த மக்களுக்கு முன்னுரிமை வழங்கி, அவர்களை மீட்பதா அல்லது அவர்களைச் சாக விடுவதா என்ற மனித நேயம் மிக்க பென்னம் பெரிய வினா ஒன்றை அவர் முன்வைத்துள்ளார்.

அண்மையில் உலகவங்கியால் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையின் பிரகாரம், வடக்கு மாகாணத்தில், நாற்பது சதவீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கிறார்கள்.

அவர்களில், இருபத்தெட்டு சதவீதமானோர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்து மன்னார் மாவட்டத்தில் இருபது சதவீதத்தினர் வறுமையால் வாடி வதங்குகின்றனர்.

மேற்போந்த தகவல்களை ரவிகரன் தமது சொந்தக் கணக்கீடு என்ற அடிப்படையில் காட்டவில்லை. உலக வங்கியின் புள்ளி விபரம் என்பதால், இந்த விடயத்தை இலங்கை அரசு பூசி மெழுக எத்தனிக்கக் கூடாது. நீர்வளம், கடல்வளம், நிலவளம், காட்டு வளம், கனிய வளங்கள், பனை - தென்னை வளங்கள், உட்பட பலவகை வளங்களைக் கொண்ட முல்லைத்தீவு, இப்போது வறுமையின் பிடியில் அகப்பட்டுள்ளதையும் மாகாண சபையின் உறுப்பினர் அக்குவேறு ஆணி வேறாக பலவகைப்பட்ட தரவுகளுடன் அம்பலப்படுத்தி உள்ளார்.

அவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த முல்லைத்தீவு மாவட்ட மக்களின் தேவைகளை சென்றி மீற்றர் சென்றிமீற்றராக, மிக விஸ்தாரமாகப் புட்டுக்காட்டி உள்ளார்.

மறுபக்கத்தில் நோக்கினால்,--

கடற்றொழிலில் வெளிமாவட்ட மீனவர்களின் அதி உச்சத் தலையீடு, பெரும் எண்ணிக்கையான விவசாயக்குளங்கள் புனரமைக்கப்படாமை, போர் முடிவுற்று ஏழு ஆண்டுகள் கழிந்தும், தமது நிலவளம், கடல் வளத்தை தமிழ் மக்கள் தமது தேவைக்குப் பயன்படுத்த முடியாத அளவுக்கு வெளிமாவட்டத்தவரின் மேலோங்கித் தனமான தடைகள், மற்றும் வனத்திணைக்களத்தினரின் அடாவடித் தனங்கள், தொழிற்சாலைகள் எவையும் மீளச் செயற்படுத்தப்படாமை, மற்றும் பல தடங்கல்களும், கொழும்பு அரசுகளின் செயற்பாடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தைத் தமது தாயகமாகக் கொண்ட மக்களது வாழ்க்கையைச் சின்னாபின்னமாக்கி நாசம் செய்துள்ளன.

அவற்றுக்குப் பதிலீடாக, போருக்கு முன்னரான நிலையை மீளக் கொணர்வதற்கு நல்லாட்சி அரசு, உரிய கரிசனையுடன் செயற்படாமல், முல்லைத்தீவு தமிழர் மாவட்டம் என்ற நிலையை மாற்றி, அதனைச் சிங்கள மக்களது மாவட்டமாக ஆக்கும் விதத்தில், தமிழர்களது பாரம்பரிய வாழிடம் என்ற வரலாற்று உண்மையை நிலத்தில் புதைக்கும் விதத்தில் செயற்படும் போக்கு, எப்போது முடிவுக்குக் கொண்டு வரப்படும்? எவர்தான் இதனைத் தட்டிக் கேட்பார்கள்....?



# மகிந்தவின் தளர்ந்துபோன ஆளுமை!

வந்தியத்தேவர்

போர்முடிந்த கையோடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு சரியான தீர்வை வழங்க அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்வந்திருந்தால் அவரது ஆட்சி இன்றும் கூடத் தொடர்ந்திருக்க வாய்ப்பு அமைந்திருக்கும்.

இலங்கையில் உள்ள அனைத்து இன மக்களும் மனித உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் உருத்துஉடையவர்கள் என்ற பரந்த மனப்பாங்குடன் அனைத்து மக்களையும் அரவணைத்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் நகர்த்திச் செல்ல வேண்டும் என மகிந்த சிந்தித்திருக்க வேண்டும். அதை விடுத்து ஒரு சர்வாதிகார மன்னர் நிலையில் நின்று கொண்டு குடும்ப ஆட்சியை முன்னெடுத்துச் செல்லும் குறிக்கோளுடன் செயற்பட்டதே அவரின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

ஏனைய தென்னிலங்கை அரசியல்வாதிகளை விடவும் மகிந்த ராஜபக்ச இன்றுள்ள தலைமைகளில் மக்களிடத்தில் பிரபல்யமும் செல்வாக்கும் கொண்டவராகவே இருந்துள்ளார். அவர் எது சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் பெரும்பாலான சிங்கள மக்கள் காணப்பட்டனர். அவரது கருத்துக்கு மக்கள் முக்கியத்து வம் கொடுத்து வந்துள்ளனர். அந்த அளவுக்கு அவர் தென்னிலங்கையின் ஆதரவைக்கொண்டிருந்தார்.

இலங்கையின் அபிவிருத்தி குறித்த நல்ல சிந்தனைகளை மகிந்த சிந்தனை என நாடுபூராகவும் அறிமுகப்படுத்திய அவர், சேரிடம் அறிந்து சேர்? என்ற முதுமொழியை அறியாதிருக்க முடியாது. எனினும் இனவாதிகளான அரசியல் அனுபவம் குறைந்த விமல் வீரவன்ச, உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, தினேஸ் குணவர்த்தன உட்பட பௌத்த தர்மம் தெரியாத பௌத்த பிக்குகள் போன்ற தேசவிரோதிகளுடன் [illegible] சேர்ந்து தன்னையே தலைகீழாக்கியது ஏன் என்பது கேள்விக்குரியதே. அவருக்கு ஆலோசகர்களாக மானிடத்தை மதிக்கும் ஒரு மனிதன் கூடக் கிடைக்காமல் போனதும், வீடு கொளுத்தும் இராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரிகளாக இருந்துள்ளமையும்தான் அவரது பின்னடைவுக்குக் காரணமாகிறது.

தமிழ் மக்கள் கோரும் சமஷ்டி ஆட்சி நியாயமானது. பண்டார நாயக்க, கொல்வின் ஆர் டி சில்வா போன்ற பல சிங்களத் தலைமைகள் அந்த நியாயத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

அதனை எதிர்த்ததன் மூலம் இலங்கையின் அழிவுக்கு முக்கிய காரணியாக விளங்கியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. சமஷ்டிக்கு எதிரான பாதயாத்திரை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை என்று தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்தவர் ஜே.ஆரே. ஒரு சமயம் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து அதற்காகக் குரல் கொடுத்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பின்னாளில் ஜே.ஆர் வழியைப் பின்பற்ற முனைந்ததும் அவர் விட்ட தவறுகளில் ஒன்றாகும்.

போரின் பின்னர் நாட்டின் சுபீட்சத்தையும் ஐக்கியத்தையும் பேணும் வகையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கக்கூடியதாக சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்தவுள்ளேன் என மகிந்த ராஜபக்ச அறிவித்திருப்பின் தென்னிலங்கை அரசியல்வாதிகளும், மக்களும் அவருக்கு ஆதரவாகவே செயற்பட்டிருப்பார்கள் என்பது நிச்சயம். அவர் இந்த நாட்டில் மிகவும் ஆளுமை கொண்ட தலைவர் என்பதை அவரே புரிந்து கொள்ளவில்லை போலும். முன்னாளில் அரசியல் இருப்புக்காக சிங்களம் மட்டும் என்ற இனவாதக் கொள்கையை முன் வைத்து அரசியல் பிழைப்பு நடத்திய அரசியல்வாதிகளைப் பின்பற்றி அவர் அரசியலில் நியாயமாக நடந்து கொள்ளத் தவறினால் முழு நாட்டுக்கும் மக்களுக்கும் பேரழிவை ஏற்படுத்தும் என்ற உண்மையைத் தனது கருத்து நிலைப்பாடாக மேற்கொண்டிருந்தால். அனைத்துச் சிங்கள மக்களும் நிச்சயம் அதனை ஏற்றிருப்பார்கள்.

அந்த அளவுக்கு மக்களை, மந்திரிகளை நியாயத்தைப் புரிந்து கொள்ளச் செய்யும் ஆளுமை அவரிடத்தில் இருந்தது.

ஒரு தலைவன் என்ற வகையில் மக்களினதும், நாட்டினதும் எதிர்காலத்தைக் கவனத்துக் கொண்டு பொருத்தமான முடிவை எடுத்திருந்தால் அவர் என்றும் இலங்கை மக்களால் போற்றப்படுபவராக விளங்கியிருப்பார்.

இன்று மகிந்த ராஜபக்ச, சிங்கள இனவாதிகளிடம் தோற்றுப் போனவராகவே உள்ளார். அவர்களின் மகுடிக்கு ஆடுபவராகி விட்டார். மனித உரிமைகளுக்கு மதிப்பளித்த மகிந்த ராஜபக்ச திடீரென அதற்கு எதிரானவராக மாறியதும் அவரது வீழ்ச்சிக்கு காரணமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தனூர் சதீஸ்

# தமிழர் தரப்பிலிருந்து வேண்டும் சிங்கள மொழி மூல ஊடகம்

ஒரு குடும்பத்தில் இருக்கக்கூடிய தாய் தந்தை பிள்ளைகளுக்கிடையில் புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும் நிலவும் பட்சத்திலேயே அது நல்லதொரு குடும்பமாக இருக்கமுடியும். அதே போன்று பல்லினச் சமூகங்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் இனமதங்களுக்கிடையில் புரிந்துணர்வு அவசியத்திலும் அவசியமாகின்றது. அதற்கு ஒரு சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளை, தேவைப்பாடுகளை ஏனைய சமூகங்கள் அறிந்து தெரிந்துகொண்டிருக்க வேண்டும். இத்தகைய புரிந்துணர்வுகள் இருக்கக்கூடிய நாடொன்றிலேயே பூரணமான சமத்துவம் ஜனநாயகம் நிலவ முடியும். அந்தவகையில் எமது நாட்டில் ஏழு தசாப்த கால இனமுரண்பாட்டுக்கு இன்றுவரை குறித்த சமூகங்கள் ஏற்றுகொள்ளக்கூடிய தீர்வு எட்டப்படவில்லை. இதற்கான மூல காரணங்களுள் முக்கிய காரணியாக பரஸ்பர மொழிப்புரிந்துணர்வின்மையும் இடம்பிடித் துள்ளது. கடந்த மூன்றரை தசாப்த கால அறவழிப்போராட்ட காலத்திலும் சரி மூன்றரை தசாப்த கால ஆயுதப் போர்க் காலத்திலும் சரி தமிழ் மக்களுடைய உண்மையான நியாயமான பிரச்சினைகளை சிங்கள மக்களுக்கு கொண்டுசெல்லக்கூடிய எந்தவொரு பொறிமுறையும் முறையாக கையாளப்படவில்லையென்ற பெரும் குற்றச்சாட்டு இன்றுவரை நிலவிக் கொண்டே இருக்கிறது. இதற்குக் கடந்த கால கருத்துச் சுதந்திரமின்மையைக் காரணம் காட்டிஎவரும்தப்பித்துக்கொள்ள முடியாது.

கருத்துச் சுதந்திரமென்பது ஒரு தனிநபர், எந்தவொரு கருத்தையும் எந்தவிதத்திலும் தணிக்கையோ தடையோ இன்றி அறிந்துகொள்ள, தெரியப்படுத்த, வெளியிடக்கூடியதாக இருப்பதே ஆகும். அவ்வாறே சிந்தனைச் சுதந்திரம், பேச்சுச்சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், சமயச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் போன்றவையும் சமமானதாகக் கருதப்படுகின்றன.

கடந்த காலங்களில் இவை எமது நாட்டில் முழுமையாக இல்லாவிடினும் ஆட்சிமாற்றத்திற்கு பின்னரான தற்போதைய சூழல் ஏதோவொரு வகையில் மாற்றங்கண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இது நீடிக்குமா அல்லது அற்றுப் போகுமா என்பது காலத்தின் கைகளில்.

ஒரு சமூகத்தின் கருத்துக்களையும் பிரச்சினைகளையும் பிறிதொருசமூகம்புரிந்துகொள்ள-வேண்டுமாயின், அவர்கள் அறிந்த, தெரிந்த, தெளிந்த மொழியில் அவற்றை அவர்கள் முன் கொண்டுசெல்லும் போதே அதனை அவர்களால் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். அந்த வகையில் எமது நாட்டில் பிரதானமாக தமிழ், சிங்களம் என்ற இருதாய் மொழி பேசுகின்ற சமூகங்களே இருக்கின்றன. இந்த நிலையில் இரு வேறு சமூகங்களும் ஒருவர் பிரச்சினையை மற்றவர் அறிந்து கொள்ளக்கூடிய புரிந்துணர்வு நிலை ஏற்பட்டாலே புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதற்கு சமனாகும். ஒரு நாட்டில் வாழக்கூடிய சமூகங்களுக்கிடையிலான கருத்துக்களைக் காவிச் செல்கின்ற கருவியாக ஊடகங் கள் விளங்குகின்றன.

> ஒரு சமூகத்தின் கருத்துக் களையும் பிரச்சினைகளையும் பிறிதொரு சமூகம் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அவற்றை அவர்கள் அறிந்த, தெரிந்த, தெளிந்த மொழியில் அவர்கள் முன் கொண்டுசெல்லும் போதே அதனை அவர்களால் இலகு வில் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு இனச் சமூகத்தின் உரிமைகள் அதிகாரத்தரப்புக்களால் மீறப்படுகின்ற அல்லது பறிக்கப்படுகின்ற அல்லது அநீதியிழைக்கப்படுகின்ற போது பாதிக்கப்படுகின்ற சமூகம் தமது நியாயமான நிலைப்பாட்டை ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்துவது இயல்பான தொன்றே.

இலங்கை சுதந்திரமடைந்த 1948ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலம் முதல் தமிழினம் பெரும்பான்மை அதிகார வர்க்கத்தினரால் அபரிமிதமாக அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு ஆளப்படுகின்ற வரலாறே இடம்பெற்று வருகிறது.

மூன்றரை தசாப்த கால ஆயுதப் போராட்டமும் கூட ஏனைய சமூகங்களைப் பார்க்கிலும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களையே தயவு தாட்சண்யமின்றி தேடி அழித்துள்ளது. இதுபோன்ற இழப்புக்களையும் இடர்களையும் பெரும்பான்மை சிங்கள சமூகம் சரியாக அறிந்திருக்கவில்லை.

சிங்கள மொழி ஊடகங்கள் அவற்றைத் திட்டமிட்டமுறையில் இருட்டடிப்பு அல்லது புறக்கணிப்புசெய்துவருகின்றமையே இதற்குக் காரணம்.

இருப்பினும் இது விடயத்தில் தமிழ்த் தேசியத்திற்காக அன்று முதல் இன்று வரை குரல் கொடுத்து வருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், தமிழர்களின் பிரச்சினைகள் சங்கடங்கள் தொடர்பான கருத்துக்களையும் விமர்சனங்களையும் தமிழ் மொழி மூலம் மட்டுமே ஊடகமயப்படுத்தி வருகின்றமை பாரிய குறைபாடாகவே கணிக்கப்படுகிறது. அதற்கான காரணம் மாற்றுமொழி ஊடகங்கள் வாயிலாக அதிலும் குறிப்பாக சிங்கள மொழி ஊடகங்கள் ஊடாக வடக்கு கிழக்கு தமிழர் பிரதேச விடயங்கள் முழுமையாகவும் நம்பகமாகவும் வெளிக் கொணரப்படுவதில்லை.

சிறுபான்மை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான செய்திகளும் சம்பவங்களும் இலத்திரனியல் ஒலி ஒளி ஊடகங்கள் வாயிலாக அவ்வப்போது வெளிவந்திருந்தாலும், இவை சிங்கள மொழி மூலம் அச்சு ஊடகங்களில் வெளியிடப்படுவது போலாகாது. தகவல்களை மீண்டும் பார்த்து வாசித்து அறிந்து புரிந்து கொள்ளக்கூடியது அச்சு ஊடகமொன்றின் மூலமே. அந்த வகையில் சிங்கள மொழி மூல தமிழர் தரப்பால் வெளிக் கொணரப்படும் கருத்து வெளிப்பாடுகள் கட்டுரைகளைத் தாங்கி வெளி வரும் பத்திரிகை ஊடமொன் றின் தேவை அவசியமாகின்றது. அது குறித்து தமிழ் சமூகம் இதுவரை முயற்சிக்காமை கவலைக்குரியதே.

## யார் கவனிப்பார் இந்த அவலத்தை...

ஏ9 வீதி, நுணாவில் தேவாலய வீதியிலிருந்து சென்று ஏ32 வீதியுடன் இணையும் வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

இந்த வீதியால் தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். அத்துடன் மயானமும் உள்ளது. வயல்கள் கூடுதலாக உள்ளன. பாடசாலைப் பிள்ளைகள் இந்த வீதியால் பயணம் செய்கின்றார்கள்.

இரண்டு பிரபலமான சைவ ஆலயங்கள் உள்ளன. வீதியோ குண்டும் குழியுமாக உள்ளது. பலமுறை நகரசபையுடன் தொடர்பு கொண்டு 2016 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம், மற்றொரு நகர சபை உறுப்பினரால் வேறு திட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக இந்த வட்டார உறுப்பினர்கள் கவலையுடன் கூறினர்.

தற்போது 10 லட்சம் ரூபா திட்டத்திலும் மக்கள் இதைப் புனரமைக்குமாறு தெரிவிக்கின்றனர். ஆனால் அது கை நழுவும்போல் இருக்கிறது.

தயவு செய்து அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் நேரடியாக வந்து பார்த்தால் மக்கள் படும் வேதனைகள் தெரியும். ஐயா நாடாளுமன்ற உறுப்பினர்களே, ஒரு தடவை வந்து பாருங்கள்! யாருமற்ற அநாதைகளாக எம்மைக் கைவிட்டு விடாதீர்கள்.

சு.பூபாலசிங்கம்
அகில இலங்கை சமாதான நீதவான்
நுணாவில் மேற்கு.

## புனரமைக்கப்படுமா அறிவியல் நகர் பல்கலைக்கழக வீதி

கிளிநொச்சியில் அறிவியல் நகர் எனப் பெயர் பெற்ற பிரதேசத்தில் பல்கலைக்கழக வீதி எனப் பெயர் சூட்டப்பட்ட மேற்படி வீதி ஏ9 வீதியையும் பல்கலைக்கழகத்தையும் இணைக்கின்ற மிகப் பிரதான பாதையாகக் காணப்படுகின்றது. நீண்ட காலமாக புனரமைக்கப்படாது மழை காலங்களிலும், சாதாரண காலநிலையிலும் சேறும் சகதியுமாகவும் வெள்ளக்காடாகவும் காணப்படுகின்றது.

இந்த வீதி போக்குவரத்தை நம்பியே யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், விவசாய பீடம், பொருளாதார மையமான இரு பெரிய ஆடைத் தொழிற்சாலைகள், வடபகுதியின் விவசாய உற்பத்திகளை பெறுமதி கூட்டல் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் உற்பத்தி நிறுவனம் போன்றவை அமைந்திருப்பது மிக முக்கிய விடயமாகும்.

மேற்குறிப்பிட்ட வீதியூடாக பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் 2500 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சென்று வருவதும் அவர்களை ஏற்றி இறக்கும் இலகு ரக, கனரக வாகனங்கள், உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்லும் பாரவூர்திகள் போன்றன பயணிப்பதும் குறிப்பிடத்தக்கது.

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான இந்த வீதியைப் புனரமைப்பதற்கு கரைச்சி பிரதேச சபை முயற்சி எடுத்ததாகவோ அல்லது வீதிப்போக்குவரத்துத் திணைக்களம், பெருந்தெருக்கள் அதிகார சபை, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பெரிய தொழிற்சாலைகளை நிறுவி பெருமளவான தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழில் நிறுவனங்கள் என்பவை கவனம் எடுத்ததாகவோ தெரியவில்லை.

பெருமாரி, சிறுமாரி என இரு மழைகாலங்களிலும் கொட்டித் தீர்க்கும் மழையால் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கும் ஏறக்குறைய 2 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியைப் புனரமைக்க எடுத்த நடவடிக்கைதான் என்ன? பெருமளவான மாணவர்களின் அறிவுத் தேடலுக்கும் பெருமளவான மக்களின் வாழ்வாதாரத்துக்கும் மிக அவசியமாக இந்த வீதியைப் புனரமைப்பது எப்போது? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

– நலன்விரும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலூஜாவின் உப நகரான கர்மா இராணுவம் வசம்



பக்தாத், மே 28
ஈராக்கில் பலூஜாப் பகுதியில் உள்ள சிறு நகரான கர்மா நகரை ஐ.எஸ் அமைப்பிடம் இருந்து இராணுவத்தினர் மீட்டுள்ளனர். பலூஜா பகுதியைக் கைப்பற்றும் முயற்சியில் இராணுவத்தினருக்குக் கிடைத்த முதல் வெற்றி இதுவென ஈராக்கின் கூட்டுப்படை ஊடகப் பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.
பலூஜாவின் கிழக்குப் பகுதியின் அநேகமான பிரதேசங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஈராக் இராணுவத்தினர் ஷியாட் போராளிகளின் உதவியுடனும், அமெரிக்கக்கூட்டுப்படையின்வான்வழித் தாக்குதலுடனும் கர்மா நகரைக் கைப்பற்றினர்.
ஈராக் பிரதமர் ஹைடர் - அல் - அபாடி பேஸ்புக்கில் கர்மா நகரைக் கைப்பற்றியதற்குத் தனது மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார். அத்துடன், நாம் அனைவரும் ஒன்றிணைந்து தீவிரவாதிகளிடம் இருந்து மக்களைப் பாதுகாக்கிறோம் என அவர் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.
கைப்பற்றப்பட்ட நகர் இராணுவத்தினரால் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அங்கு சுமார் 50 ஆயிரம் பொதுமக்கள் வெளியேற வழியின்றித் தவித்து வருகின்றனர். அவர்களின் நிலை குறித்து கவலைக்கிடமான அறிக்கைகள் பெறப்பட்டதாக ஐ.நாவின் ஈராக்குக்கான மனிதாபிமான உதவியாளர் கடந்த புதன்கிழமை தெரிவித்துள்ளார்.
இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து இதுவரை 800 மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.
வெளியேறிய மக்கள் முகாம்களில் வைத்து ஐ.நா அமைப்பினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். உணவு, நீர் என அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மக்களின் எண்ணிக்கை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-ரி4)

## ஜப்பானில் ஆளில்லா வாகன சேவை அறிமுகம்



டோக்கியோ, மே 28
ஜப்பானிய தொழில்நுட்ப நிறுவனமொன்று ஆளில்லா ரோபோ வாகனத்தை ஜி-7 மாநாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. காக்கோ தீவில் நடைபெற்றுவரும் மாநாட்டில் ஆளில்லாமல் இயங்கும் ரோபோ கார்கள் பற்றிய விளக்கத்தை ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே வழங்கினார். மாநாட்டில் பங்கு கொண்ட தலைவர்களில் பலர் அந்த வாகனங்களில் பயணித்தும் பார்த்தனர்.
இந்த வாகனத்தின் சிறப்பு யாதெனில், செல்லிடத்தொலைபேசியில் மென் செயலி மூலம் அழைப்பை ஏற்படுத்தி வாகனத்தை அழைக்கலாம். பயணம் செய்யும் இடத்துக்கு தானியங்கியாகச் செல்லும். இது பொதுமக்களுக்கான ரக்சி சேவை என்பதுடன், பொருத்தமான பணத்தையும் அறவிடும் என தெரிவிக்கப்பட்டது.
இந்த வாகனம் தற்போது சோதனை ஓட்டத்தில் உள்ள நிலையில், இதனை 2020 ஆம் ஆண்டளவில் நடைமுறைப்படுத்துவதற்கு 1 பில்லியன் டொலர் அளவுக்கு நிதி முதலீடு செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் இந்த வகை வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
(த-ரி4)

# அமெரிக்கா அ
# வீசிய நகரில் பர



ஹிரோஷிமா, மே 28
அமெரிக்கா அணுகுண்டு வீசிய ஜப்பானின் ஹிரோஷிமா நகருக்கு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சென்றிருந்தார்.
இந்த நகருக்குச் செல்லும் முதல் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தான்.
வருத்தத்துடன் தோன்றிய ஒபாமா 1945 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அமெரிக்கத் தாக்குதலின் நினை
சின்னத்திற்கு வெள்ளை மலர்களா
செய்யப்பட்ட மலர்வளையத்
வைத்து அஞ்சலி செலுத்தினா
ஹிரோஷிமாவில் அணுகுண்

## 2 ஆவது உலகப் போரில் மூழ்கி
## 71 கடற்படையினரின் எலும்பு எச்சங்

ரோம், மே 28
இரண்டாம் உலகப் போரின்போது கடலில் மூழ்கிய பிரிட்டன் நீர்மூழ்கிக் கப்பல் 71 கடற்படை வீரர்களின் எலும்பு எச்சங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இத்தாலியில் சர்டினியாப் பகுதியில், அந்த நாட்டின் கடற்படைச் சுழியோடி ஒருவரினால் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
1942 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் கடலில் மூழ்கிய நீர்மூழ்கிக் கப்பல், கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது. இது கடந்த புதன்கிழமை அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. போர்ச் சூழல் காலப் பகுதியில் குறித்த பிரிட்டன் கப்பல் காணாமற்போனதாகக் கருதப்பட்டது.
பாதுகாப்புக் கருதி இத்தாலியக் கடற்படை வீரர்களினால் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. குறித்த நீர்மூழ்கிக் கப்பல் அவற்றினால் தாக்கப்பட்டு மூழ்கி இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது. இந்த நிலையில் மேலும் சுழியோடிகள் அனுப்பப்பட்டு குறித்த பகுதி தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. (த-ரி4)





இத்தாலியின் மத்திய புளோரன்ஸ் பகுதியில் உள்ள அர்னோ ஆற்றுப் பகுதியில், வாகனம் நி
நேற்று முன்தினம் பெரிய குழியொன்று ஏற்பட்டுள்ளது. அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2
சேதமடைந்தன. குழியின் அளவு 200 மீற்றர் நீளமும், 7 மீற்றர் அகலமுமாகும். நிலத்தடியி
விரிசல் இந்த விபத்துக்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ணுகுண்டு
# ...ாக் ஒபாமா



...மை மனிதகுலம் தன்னையே அழித்து கொள்ளும் திறனை எடுத்...துக் காட்டியுள்ளது என்று ஒபாமா, ...ான் ஆற்றிய உரையில் குறிப்...பிட்டார்.

இரண்டாம் உலகப்போரின் கடைசி நாள்களில் நிகழ்ந்த அணுகுண்டுத் தாக்குதலின் விளைவாக 1,40,000 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)



பிரான்சில் தொடர்ந்தும் தொழிலாளர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. தொழிலாளர்களுக்கான புதிய சட்டத்தைக் கண்டித்துப் பேரணிகள் இடம்பெற்று வருகின்றன. சில தினங்களாக வேலை நிறுத்தப் போராட்டம் வலுத்து வருகின்றது. இதனால் ஆர்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தப் பொலிசார் நாடெங்கும் குவிக்கப்பட்டுள்ளனர். (த-ரி4)

## ...நீர்மூழ்கி
## ...ருடன் மீட்பு



## ட்ரம்ப் இந்தியாவுக்கு புகழாரம்



அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் பங்கெடுக்கும் டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அவர் வழங்கிய செவ்வியில் இந்தியா குறித்து குறிப்பிட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவைப் புகழ்ந்து பேசியது இதுவே முதல் முறையாகும். முன்னதாக அவர் சீனா, மெக்சிக்கோ, மற்றும் ஜப்பான் நாடுகளைத் தரக்குறைவாகப் பேசி சர்ச்சையில் சிக்கிக் கொண்டார். இந்த நிலையில், இந்தியா சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. அதன் கெட்டித்தனத்தை எவரும் பாராட்டவில்லை. நான் இந்தியாவில் சிறப்பான திட்டங்களை நிறுவத் தீர்மானித்துள்ளேன் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். (த-ரி4)

## இந்தியாவின் அதிகூடிய நிறை கொண்ட குழந்தை



புதுடில்லி, மே 28

இந்தியாவின் தெற்கு மாநிலமான கர்நாடகாவில் அதிகூடிய நிறையுடன் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. நேற்று முன்தினம்பிறந்த குறித்த பெண் குழந்தை, 6.8 கிலோகிராம் நிறையுடன் இருந்தது.

இது இந்தியாவில் எடை கூடிய குழந்தை எனும் சாதனைப் பதிவுக்கானது என மருத்துவர்கள் தெரிவித்தனர். குழந்தைகளின் சாதாரண நிறை 2.5 கிலோகிராமில் இருந்து 3.5 கிலோகிராமாகும். 20 வயதான தாயார் நந்தினி, அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். குழந்தையின் அசாதாரண நிறைக்கான காரணம் குறித்து மருத்துவர்கள் பரிசோதித்து வருகின்றனர்.

குழந்தை உடற்பருமனாக மட்டுமல்ல உயரமாகவும் உள்ளது. இந்தியாவின் எடை கூடிய குழந்தை இதுவாகும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். குழந்தையின் உயரம் 62 சென்ரி மீற்றர் ஆகும். சாதாரணமாகப் பிறக்கும் ஆண் குழந்தையின் உயரம் 50 சென்ரி மீற்றர் ஆகும். தாயாருக்கு நீரிழிவு நோய் இருந்த போதிலும், அந்த நோய்க்கான எந்த அறிகுறியும் குழந்தையிடம் காணப்படவில்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், 2015 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச மாநிலத்தில் 6.7 கிலோகிராம் நிறையில் ஆண்குழந்தை பிறந்திருந்தமை சாதனையாகக் கருதப்பட்டது. இந்தச் சாதனையை இந்தப் பெண் குழந்தை முறியடித்துள்ளது. உலகின் மிக அதிகமான எடையுள்ள குழந்தை 1955 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், இத்தாலியில் பிறந்தது. இந்தக் குழந்தையின் எடை 10.2 கிலோகிராம் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி...



...இடத்தில் எதிர்பாராத விதமாக ...னங்கள் குழியினுள் விழுந்து ...கப்பட்ட பெரிய நீர்க் குழாயின் (த-ரி4)

# மருத்துவமனைகள் மீதான தாக்குதல்
# கடந்த 2 வருடங்களில் 960 பேர் சாவு

லண்டன், மே 28

உலகளாவிய ரீதியில் கடந்த இரு வருடங்களில் மருத்துவமனைகள் தாக்கப்பட்டதில் 960 பேர் உயிரிழந்துள்ளனர் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

போர் காலச் சூழலில் சிகிச்சை வழங்கப்பட்டமை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையில், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 594 மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்தத் தாக்குதல்களில் மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், நோயாளிகள், பார்வையாளர்கள் அடங்கலாக 959 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரத்து 500 பேர் காயமடைந்துள்ளனர்.

இடம்பெற்ற தாக்குதல்களில், [illegible] குறிவைத்தும், 20 சதவீதமான தாக்குதல்கள் தவறுதலான விதத்திலும், ஏனையவை குறிப்பிட முடியாதவை எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்கள் மூலம், சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் அதிகமாகப் பாதிப்படைந்துள்ளனர். மருத்துவமனைகள், மருத்துவ உதவிக் [illegible] குறிவைத்துத் தாக்குதல் நடத்துவது, ஜெனிவாப் பிரகடனத்தின்படி போர்க் குற்றமாகும். (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள்

## 2

(பிறந்தஎண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

2 ஆம் எண்ணைப் பற்றி அனைத்து நூல்களும், மக்களைத் தேவையில்லாமல் அச்சுறுத்துகின்றன. உண்மை அதுவன்று. பெரும் மரங்கள் சாய்ந்தாலும், நாணல் மட்டும் நிலைத்து நிற்கும். ஒவ்வொருவர் வாழ்விலும் புயல் (சோதனைகள்) என்பது நிச்சயம் ஏற்படும். அதற்கு எந்த எண்ணும் விதிவிலக்கல்ல. மற்ற எண்காரர்கள் துவண்டு விடும்போது இவர்கள் மட்டும் வாழ்க்கையின் சோதனைகளில் வளைந்து கொடுத்து, முன்னேறி விடுவார்கள். அம்பாளின் அருள் பெற்ற எண் இது.

பகலுக்கு ராஜா சூரியன் என்றால் இரவுக்கு ராணி சந்திரன். சூரியன் பிதா காரகன், சந்திரன் மாதாகாரகன். எனவே இந்த எண்காரர்களிடம் பெண்மையும், மென்மையும் உண்டு. இவர்கள் ஓரளவு தடித்த தேகத்தினர்.இதில் பிறந்த ஆண்கள் சுருட்டை முடியையும், பெண்கள் நீண்ட முடியையும் கொண்டவர்கள்.

இவர்கள் எவ்வளவு தூரம் வளைந்து கொடுக்கிறார்களோ, பல சமயங்களில் அதைவிடக் கடின சித்தராகவும் மாறி விடுவார்கள். மனதால் செய்யும் தொழில்களில் (கற்பனை, கவிதை,திட்டமிடுதல் போன்றவற்றில்) மிகவும் விருப்பத்துடன் ஈடுபடுவார்கள்.

இவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் குணம் உள்ளதால், மக்களால் பெரிதும் விரும்பப்படுவார்கள்.

கற்பனை கலந்து கவர்ச்சியுடன் பேசுவதால் இவர்களுக்கு மக்களாதரவு உண்டு.

பெரும்பாலானோருக்கு முன்னோர்கள் சொத்துக்கள் இருக்கும்.

இந்த எண்ணின் ஆதிக்கம் குறைந்தவர்கள் வீண் பிடிவாதம் கொண்டு தங்கள் வாழ்க்கையைத் தாங்களே கெடுத்துக் கொள்வார்கள். நீதிமன்ற வழக்குகளிலும் சிக்கலைத் தந்து விடும். முன்னோர் சொத்துக்களையும் இழக்க நேரிடும். மனதில் நிம்மதி இருக்காது.

இவர்களின் வெற்றிக்கும் அல்லது தோல்விக்கும் ஒரு பெண்ணே காரணமாக இருப்பாள்.

காரணம், இவர்களுக்குச் சந்தேகக் குணம் அதிகம் உண்டு. இதனால் முழுமையாக எவரையும், நம்பாமல் திரும்பத் திரும்ப மற்றவர்கள் மீது சந்தேகம் கொள்வதால், தான் இவர்களுக்கு எதிரிகள் உருவாகின்றனர். எதையும் பதற்றத்துடனும், ஒருவித சோம்பலுடனும் அணுகும் குணத்தையும் மாற்றிக் கொண்டால் இவர்கள் நிச்சயம் முன்னேறுவார்கள்.

முக்கிய காரியங்கள் எவற்றையும் சட்டென முடிக்காமல் காலத்தைக் கழித்து விட்டு, பின்பு அவசர அவசரமாகச் செய்து முடிப்பார்கள். ஒரு மாதத்தின் இறுதியில் தான் அவசர அவசரமாக உட்கார்ந்து அந்தந்த மாதத்தின் வேலையை முடிப்பார்கள். தங்களது வாக்குறுதிகளை இவர்கள் காப்பாற்றுவது மிகவும் சிரமம்.

சந்திர ஆதிக்கம் நன்முறையில் அமைந்திருந்தால் நல்லதிட்டங்கள் போட்டும் அவற்றில் வெற்றியும் அடைந்து விடுவார்கள். தங்களிடம் பல திறமைகள் இருந்தும் துணிந்து செயற்பட விருப்பப்பட மாட்டார்கள். இல்லாததைக் கற்பனை செய்துகொண்டுதங்களது வாழ்க்கையில் முடிவெடுக்க முடியாமல் திண்டாடுவார்கள். காலையில் சுறுசுறுப்புடன் தொடங்குவார்கள். ஆனால் மாலைக்குள் ஊக்கம் குறைந்து, சோர்ந்துவிடும் இயல்பினர்.

'பத்தாவது முறை தடுக்கி விழுந்தவனிடம்
பூமித்தாய் முத்தமிட்டு சொன்னது,
மறந்துவிடாதே நீ ஒன்பது முறை
எழுந்து நின்றவன் என்று'

கவிஞர் கவிதாமணியின் இந்த புதுக் கவிதையின் வரிகளை மறக்காமல் கடைப்பிடித்தால் இவர்களது வாழவில் இன்பம் நிச்சயம்.

**முக்கிய குறிப்பு**

விதி எண் 2 ஆக வரும் அன்பர்கள் ஒரு வகையில் அதிர்ஷ்டசாலிகள். திருமணம் ஆனவுடன்தான் அம்பாளின் அனுக்கிரகத்துக்கு உட்படுவார்கள். வசதியுடன் மனைவி அல்லது மனைவி வந்தவுடன் வேலை, வாழ்க்கையில் முன்னேற்றம் ஆகியவை இந்த எண்காரர்களுக்கு ஏற்பட்டு விடும்.

இவர்களும் பிறந்த ஊரை விட்டு வெளியூர் சென்று தொழில்,வியாபாரம் அமைந்தால் தான் நல்ல தொழில் முன்னேற்றம், நல்ல இலாபங்கள் அடையலாம். இவர்கள் நடையில் எப்போதும் வேகம் உண்டு. செல்வத்தைச் சேர்ப்பதில் மிகவும் ஆசை உடையவர்கள். உலக சுகங்களை அனுபவிப்பதிலும் மிகவும் நாட்டம் உண்டு. அளவுக்கு அதிகமாகச் சாப்பிடும் குணம் உள்ளவர்கள். மனோவசியம் மற்றும் மந்திர தந்திரங்களிலும் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு.

தாய்மையின் இயல்பான பாசம், குடும்பப் பற்று, தேசபக்தி,ஊர்ப்பற்று, தமிழ்ப்பற்று ஆகியவை உண்டு.

**இவர்களது நோய்கள்**

அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுபவர்களாதலால், வயிற்றுக்கோளாறுகள் அடிக்கடி ஏற்படும். சந்திரனின் ஆதிக்கம் குறையும் போது சிறுநீரகக் கோளாறுகள், மனச்சோர்வு, மூலவியாதிகள் தோன்றும். இவர்களுக்கு நீர்த் தாகம் அதிகம் உண்டு. தண்ணீர், மற்றும் குளிர்பானங்கள் ஆகியவற்றை மிகவும் விரும்புவார்கள். எனவே, இவர்கள் குடிப் பழக்கத்துக்கு மட்டும் ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதற்கு அடிமையாகி விடுவார்கள்.

பூசணி, பறங்கி, வெள்ளைப்பூசணி, முட்டைக்கோசு ஆகியவற்றை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சளித் தொந்தரவுகளும் அடிக்கடி ஏற்படும்.

(தொடரும்)

சி.நற்குணலிங்கம்

# சேமிப்புப் பழக்கம் கடன்படு நிலையைத் தவிர்க்க உதவும்

நீங்கள் உங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக, உற்சாகமாக, அர்த்தமுள்ளதாக வாழத் தொடங்கினால் போதும், நீங்கள் மற்றவர்கள் போன்று வாழ்க்கையை வாழ முயற்சி செய்யக் கூடாது. இன்றைய நவீன யுகத் தில் ஏற்பட்ட மாற்றங்களுக்குள் சிக்கி அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிப்பவர்கள் பலர். கலாசார மாற்றங்களுக் கேற்ப தமது வாழ்க்கை முறையையும் மாற்றியமைக்க ஏதோவொரு வகையில் முயன்று கொண்டிருப்பவர்கள் பலர். இவ்வாறான சூழ்நிலையில் எதை எவ்வாறு செய்வதென்று அறியாது மற்றவர்களுடன் போட்டி போடுவதாக நினைத்துக் கொண்டு தமது வரவுக்கு மீறிய செலவை செய்ய முற்படுகின்றனர்.

வரவுக்குள் செலவு செய்கிறபொழுது வாழ்க்கை கடினமாக இருக்குமே தவிர கஷ்டமாக மாறாது. வரவை மீறிய செலவுகள் பல்வேறு வழிகளில் ஏற்படும் போது வாழ்க்கை தடுமாறுகின்றது. வியாபாரம் செய்கிறோம் என்று கூறி தமது தொழிலை ஒழுங்காகச் செய்யாமல் பணத்தை தாறுமாறாகக் கரைக்கிறார்கள், வரவை மீறி கடன் வாங்கியாவது செலவு செய்வது வழக்கத்தில் எமக்கு கஷ்டத்தை மட்டுமல்ல பெரும்பாலும் நட்டத்தையே தரக் கூடும். இதனால் கடன் பட்டவன் கடனைத் திருப்பிக் கொடுக்க வசதியில்லாது தடுமாற, கடன்கொடுத்த வன் கடன்பட்டவனின் வீட்டை நாட இந்த நிலை தொடரும். ஆனால் கடன் தீர்ந்த பாடில்லை.



வரவுக்கு மீறிய கடனைப் பெற்றுக் கொள்வது இன்று சாதாரண விடயமாக உள்ளது. எல்லா வங்கிகளுக்கும் சென்று ஒப்பந்தப் பத்திரத்தில் கையொப்பமிட்டு கடனைப் பெற்று உரிய தவணைக்கு கடன்பணத்தை கட்ட முடியாமல் திணறுவதும், வங்கிக் கடன் தவணையை நினைவுறுத்தும் கடிதம் தொடர்ந்த வண்ணமிருக்க அதிலிருந்து தற்காலிகமாகத் தப்ப மீள ஒருவரிடம் கடன்பட, அதன் விளைவாக கடன்தொகை அதிகரிக்க அவற்றைச் சமாளிக்க ஏமாற்[illegible] கொள்வார்கள் [illegible] றத் தெரிந்தவனின் சாமர்த்தியத்துக்கு விளைச்சல் மடங்குக் கணக்கில் பெரிதாகக் கிடைக்கும். தவணைக்கட்டண முறையில் வாங்கப்படும் வாகனங்கள், பொருள்கள் என்பவை அந்தஸ்துக்கான அங்கீகாரத்தை மட்டும் சிலருக்கு வழங்குகின்றன. அதன் மூலம் மற்றவர்கள் மத்தியில் பெருமையும் அடைகின்றனர். அந்தத் தவணைக்கட்டணத்தை ஒழுங்காகக் கட்ட முடியாமல் காணி உறுதியை வங்கியில் அடகுவைத்து நகைகளை அடகு வைத்து பணத்தைப் பெற்று சிலர் தவணைப் பணத்தைக் கட்டுகிறார்கள். சிலர் முழுப்பணத்தையும் செலுத்த முடியாமல் தப்பி ஓடுகிறார்கள்.

முறையற்ற வட்டித் தொழிலுக்குள் பெருந்தொகைப் பணத்தை விட்டு அதிக லாபத்துக்கான பேராசையால் முதலும் வட்டியும் இல்லாமல் நடுத்தெருவில் விடப்பட்டவர்கள் பலர். உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் எல்லோரிடமும் பெரும் வட்டிக்கு பணத்தைப் பெற்றுத் தமது தேவைகளை நிறைவு செய்துவிட்டு பணத்தை வட்டிக்கு பெற்றவரிடம் மீளச் செலுத்தாது மாயமாக மறைபவர்கள் தான் இன்று அதிகம். அதுவும் பொறுப்பற்ற முறையில் கைமாற்றாக வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் கொடுத்தவர்கள் அதிகம். அவர்கள் பாடு பெருந்திண்டாட்டம் தான். கடன் வாங்கியவன் தான் கடன் வாங்கவில்லை என இலேசாகக் கூறித் தப்பித்துக் கொள்ள முடியும்.

சேமிப்புக்கான படிக்கல்லே சிக்கனமாகும். சேமிப்பு இல்லாத குடும்பம் கூரையில்லாத வீடு என்பார்கள். சேமிப்புப் பழக்கமே கடன்படுநிலையைத் தவிர்க்க உதவும். கடுமையாக உழைத்தால் முன்னேறலாம். புத்திசாலித்தனமாக உழைத்தால் வேகமாக முன்னேறலாம். வாழும் வாழ்க்கை திருப்தியாக அமைய வேண்டுமானால் மற்றவர்களிடம் கடன் பெறும் நிலையைத் தவிர்க்க வேண்டும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.உழைப்பு,சேமிப்பு,திட்டமிட்ட செலவு இவையே உன் வாழ்வின் பாது காப்பு அரண்கள். இவற்றைக் தகர்த்து வாழ முற்படின் கடனே உன் வாழ்வை மூட்டும். அது நிரந்தரமல்ல. அது நிரந்தர மான சோக வாழ்வைத்தான் தரும். இந்தச் சோக வாழ்வு கடன் வாங்கிய வரைவிட கடன் கொடுத்தவருக்குத்தான் அதிகம். கடன் கொடுத்தவர்தான் வாழாது சேமித்த பணத்தைக் கொடுத்து நட்டம் அடைந்ததும் வேதனை அடைந்ததும் தான் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களே உணர்ந்திடுவீர்!




■ உடுவிலூர் கலா

சிறுவர் உரிமைகள் அழகாக சட்டத்தில் பதிவாகியுள்ளன. சிறுமிகளோ காமக் காடையரால் முகர்ந்து கசக்கி எறியப்படுகிறார்கள். வயது வித்தியாசமின்றி பெண் குழந்தைகள் காமதாரிகளால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்ற அவலம் சொல்லி மாளாது. உறவுகளின் கலகலப்பில் கைகோர்த்தவர்கள் பெரியப்பா, தாத்தா, மாமா என்கிற அருமருந்தன்ன உறவுகளை இச்சைகொண்டு பந்தாடும் கொடூரம். கடவுளின் குழந்தைகளை, நாளை மலரவிருக்கும் அரும்புகளை அற்பமாக எண்ணி ஆபாசமாய் தொட்டு ருசிக்கும் இச்சாதாரிகளுக்கு முடிவேயில்லையா? இயற்கையின் இன்னல்களுக்கும் காலத்தின் கஷ்டங்களுக்கும் முகம் கொடுப்பவர்களாய் வாழும் எம்மவருக்கு திருடர் தொல்லை ஒருபுறம், பாலியல் துஷ்பிரயோகம் மறுபுறம், கொஞ்சமேனும் இரக்கமற்ற ஜென்மங்களா இவர்கள்? தமது பிஞ்சுக் குழந்தைகளை இச்சை கொண்டு ருசிக்கும் இவர்கள் நீடூழி காலம் வாழத்தான் வேண்டுமா? ஆண்கள் என்று வீரத்தை அடையாளப்படுத்த வேண்டிய ஆண்கள், பாலியல் வன்முறையாளர் என தம்மை அழகாக சமுதாயத்தில் தொடர்ந்து அடையாளப்படுத்துகின்றனர்.

போரில் தோய்ந்த நாம் ஒவ்வொரு நாள்களையும் நினைவு கூருகிறோம், அழுகிறோம், கண்ணீர் வடிக்கிறோம். முள்ளிவாய்க்காலில் சாவடைந்த சிறுமிகள் தான் எத்தனை பேர்? எஞ்சியிருக்கும் சிறுமிகளையாவது வாழவிடுங்கள். பெரியப்பாவால் சிறுமி ஒருவருடமாக துஷ்பிரயோகம். 64 வது வாலிப தாத்தாவால் சிறுமி துஷ்பிரயோகம். சீ! அருவருபாயிருக்கிறது. உறவுகளின் புனிதத்தை மறந்துவிட்ட புனிதர்கள் இவர்கள். உணர்வுகள் மதிப்பார்ந்தவை. ஒவ்வொரு மனிதனும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி கட்டுப்பாடாக வாழவேண்டும். தடம்புரண்டு, தடம்மாறி வாழ்வது ஆறாம் அறிவு மனிதனுக்கு ஏற்புடையதல்ல. மனிதம் மரித்துப் போக நடைப் பிணங்களாக வாழ்வதா? அப்பாவிச் சிறுமிகள் என்ன பாவம் செய்தார்கள்? இல்லை அவர்களைப் பெற்றவர்கள் தான் என்ன செய்தார்கள்?

பாலியல் துஷ்பிரயோகங்களின் அதீத வளர்ச்சி எல்லா ஆண்களையும் வெறுப்புடனே பார்க்க வைக்கிறது. நல்லவர் யார் என எப்படி அடையாளம் காண்பது? காமதாரிகளே உங்களின் ஈவிரக்கமற்ற செயலால் குழந்தைகள் தமது குழந்தைப் பருவத்தை அதிவேகமாக எட்டிக் கடக்கிறார்கள் என்கிற உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் பாதுகாக்க வேண்டிய உங்கள் குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் அளவுக்குக் காட்டுமிராண்டிகளா நீங்கள்? உங்களது துர்நடத்தையால் நாளைய தலைமுறை அழிந்து கொண்டே போகிறது. எதிர்காலத் தலைவர்களை, வைத்தியர்களை, ஆசிரியர்களை, பொறியியலாளர்களை, பிஞ்சிலேயே அழிக்கிறீர்கள் என்கிற யதார்த்தம் புரியாத விலங்குகளா நீங்கள்? இந்த நிலை தொடருமானால் உங்களைப் போன்ற வன்முறையாளர்களே நாளைய சமுதாயத்தை ஆட்சி செய்வர். மறந்துவிடாதீர்கள்.

பாலியல் கல்வியை வழங்க வேண்டும் என ஒரு திட்டம். யாருக்கு பாலியல் கல்வி? இந்தச் சிறுமிகளுக்கா? கிராமங்கள்தோறும் உள்ள சிறுவர் முதல் தாத்தா வரையான அனைத்து ஆண்பிறவிகளையும் கட்டம் கட்டமாக ஒன்றிணைத்து பாலியல் துஷ்ரயோகம் பற்றியும் குழந்தைகள் பெண்கள் பற்றியும் விரிவான விளக்கம் கொடுக்க வேண்டும். அதியுச்ச தண்டனை வழங்க முடியாதவர்கள் ஆண்களுக்கு பாலியல் விளக்கம் கொடுத்தாவது சிறுமிகள் பெண்களைக் காப்பாற்ற வேண்டும். தொடர்ந்து அஞ்சி அஞ்சி எப்படி வாழ்வது? வேலியே பயிரை மேய்கிறது. எப்படி? யாரை நம்புவது? இதற்குத் தீர்வுதான் என்ன? இதுவரை எத்தனை சிறுமிகள் பெண்கள் பாலியல் வன்முறையால் உயிரை இழந்தும் மனநோயாளிகளாகியும் உள்ளனர். வாழவேண்டிய பிஞ்சுகளை வாழாதொழிக்கின்ற கொடூரத்தை செய்கின்ற ஆண்களுக்கு தண்டனையை வழங்காதிருக்கும் சட்டத்தை என்னவென்பது?

ஆண்களே நீங்கள் இச்சை கொண்டு பார்க்கின்ற, தொடுகின்ற, தொட்டு நுகர்கின்ற குழந்தைகள் உங்கள் இளம் குழந்தைகள். கடவுளின் குழந்தைகள் அவர்கள். பூப்போன்ற அவர்களை பிய்த்தெறிகின்ற ஈனச் செயலை இனியாவது கைவிடுங்கள். சிறுமிகளை, பெண்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்வதால் உங்களுக்கு கிடைக்கும் இலாபம் என்ன? பதவி உயர்வு கிடைக்கிறதா? இல்லை சிறை வாழ்க்கை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? எம்மினம் கட்டம் கட்டமாக அழிந்து கொண்டிருப்பதை அறிந்தும் அறியாதவர்கள் போல் இப்படி நீங்கள் அநியாயம் செய்வது கொடுமையல்லவா? நாளைய வரலாறு உங்களை பாலியல் வன்முறையாளர்களாக சுட்டிக் காட்டுவதை விரும்புகிறீர்களா? இல்லை எம்மினம் அழிவதுதான் உங்கள் நோக்கமா? உணர்ந்திடுங்கள், சிந்தியுங்கள், மாற்றுங்கள் உங்கள் குணங்கள் கொள்கைகளை. புதியதொரு அத்தியாயத்தில் புதிய மனிதராய் வாழ இன்றே திடசங்கற்பம் கொள்ளுங்கள். இன அழிப்பில் எமது தலைகள் உருண்டன. குருதி தோய்ந்த மண்ணில் பெரு மூச்சு வெப்பம் தணியாமல் வாழ்ந்தோம், வாழ்கிறோம். போர் தந்த வலிகள் என்றுமே தீராதவை. உணர்வுகளைக் கட்டவிழ்த்து உம்மினத்தை மீண்டும் அழிப்பது நியாயமா? வன்முறைகள் அற்ற சமுதாயத்தை இனியாவது தோற்றுவிக்க நீங்கள் நீங்களாக வாழுங்கள். அடுத்தவர் காலில் நின்று அடுத்தவர் சொற்கேட்டு எம்மினத்தை அழிக்க முனையாதீர்கள். எமது சிறுமிகள், பெண்களுக்கு உங்கள் பாதுகாப்பைத் தாருங்கள். வீரம் கொண்ட மறவர் வழியில் வந்து கோழைகளாக வாழ்வது கொடிதல்லவா? சிறுமிகள் வாழ அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுங்கள். உங்கள் பார்வையைப் புனிதப்படுத்துங்கள். நல்ல அண்ணனாக, தந்தையாக, மாமனாக, பேரனாக உங்கள் உறவுகளைப் புனிதப்படுத்தி வாழுங்கள். எமது சிறுமிகள் பெண்களை எச்சில் படுத்தாதீர்கள். வேதனையிலும் சோதனையிலும் வாழ்ந்து முடியும் பெண்ணினத்துக்கு ஆண்களே மீண்டும் மீண்டும் துன்பம் தராமல் உங்களை நிதானப்படுத்தி செம்மையான பாதையில் பயணியுங்கள். பாலியல் துஷ்பிரயோகம் சமுதாயத்தில் முழுமையாக அழிந்து போக ஆண்களே நீங்களே உங்களை மாற்றுங்கள் மாற்றம் ஒன்றே மாறாதது. சிறுமிகளுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்பைத் தர ஆண்களே நீங்கள் தயாரா? நீங்களாகத் திருந்தாவிட்டால் பாலியல் துஷ்பிரயோகத்தை ஒழிக்க முடியாது. தமிழர் வாழ்வில் புதிய அத்தியாயங்களை அசிங்கமாய் பதிவு செய்யாதீர்கள். செல்லரித்துப் போகாதீர்கள். செவ்வனே வாழுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில் இன்றைய தினம்

1900 - பாரிஸில் கெயார் டி ஓர்ஸி புகையிரத நிலையம் திறக்கப்பட்டது.

1918 - அஸெர்பைஜான் ஜனநாயகக் குடியரசும் ஆர்மோனியா முதலாவது குடியரசும் தமது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தின.

1937 - 'வோல்க்ஸ் வோகன்' மோட்டார் வாகன உற்பத்தி ஜேர்மனில் தொடங்கப்பட்டது.

1940 - இரண்டாம் உலக மகாயுத்தம்; நோர்வே, பிரான்ஸ், போலந்து மற்றும் பிரித்தானியப் படைகளால் நோர்வேயில் நார்விக் பிரதேசம் மீளக் கைப்பற்றபட்டது. போரில் கூட்டுப்படைகளின் முதலாவது வெற்றி இதுவாகும்.

1948 - தென் ஆபிரிக்கப் பிரதமராக டானியல் பிறான் கோயிஸ் மலான் தெரிவு செய்யப்பட்டார். பின்னாளில் இனப்பாகுபாட்டை அவர் நடைமுறைப்படுத்தினார்.

1952 - கிரேக்கப் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

1961 - "மறக்கப்பட்ட சிறைக்கைதிகள்" எனும் பீற்றர் பென்சனின் கட்டுரை பல்வேறு சர்வதேச தினசரிகளிலும் பிரசுரிக்கப்பட்டது. இதுவே பின்னாளில் மனித உரிமை ஸ்தாபனத்தால் சர்வதேச மன்னிப்புச்சபையை உருவாக்கும் சிந்தனையைக் கொண்டு வந்தது.


1964 - பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது.

1975 - மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்தை உருவாக்கும் லாகோஸ் ஒப்பந்தத்தில் பதினைந்து மேற்கு ஆபிரிக்க நாடுகள் ஒப்பமிட்டன.

2002 - செவ்வாய்க் கிரகத்தில் பனிப்பாறை இருப்பதற்கான சாத்தியப்பாட்டை மார்ஸ் ஒடிஸி விண்கலம் கண்டு பிடித்தது.

2010 - இந்திய மேற்கு வங்காளத்தில் புகையிரதம் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளாகி 141 பயணிகள் சாவு.

# எல்லாம் நன்மைக்கே...!



ஒரு நாட்டை ஓர் அரசன் ஆண்டு வந்தார். அந்த நாட்டு அமைச்சர் எது நடந்தாலும் எல்லாம் நன்மைக்கே என்று சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அரசர் மாம்பழம் ஒன்றைக் கத்தியால் அறுத்தார். தவறுதலாகக் கத்தி அவரின் சுண்டு விரலை அறுத்து விட்டது. இரத்தம் வெளியேறி வலி தாங்க முடியாமல் அரசர் துடித்தார்.

வழக்கம் போல் அமைச்சர், "அரசே! எல்லாம் நன்மைக்கே!" என்றார்.

இதைக் கேட்டுக் கோபமடைந்த அரசர், "நான் விரல் வெட்டுப்பட்டுத் துடிக்கிறேன். எல்லாம் நன்மைக்கே என்று சொல்வதா?, காவலர்களே அமைச்சரைச் சிறையில் கொண்டு போய் அடைத்து விடுங்கள்" என்று உத்தரவிட்டார்.

காவலர்களும் அமைச்சரை அரசரின் உத்தரவுப்படி சிறையில் கொண்டு போய் அடைத்து வைத்தனர். அப்போதும் அமைச்சர், "எல்லாம் நன்மைக்கே!" என்றார்.

நாள்கள் பல கடந்தன.

வேட்டையாடுவதில் ஆர்வமுடைய அரசர் தனியாகக் காட்டுக்குச் சென்றார். அங்கே மலைவாசிகள் காளிக்குப் பலி கொடுப்பதற்காக ஒருவனைத் தேடிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் அரசர் சிக்கிக் கொண்டார்.

பலி கொடுப்பதற்காக மலைவாசிகள் கொண்டு வந்த அரசரை கோவில் பூசாரி முழுமையாகச் சோதித்தார்.

பின்பு, காளிக்கு எந்தக் குறையுமில்லாதவனை மட்டுமே பலியிட முடியும். இவனோ சுண்டு விரல் பாதியாக உள்ளார். இவனை விட்டு விடுவோம் என்றார்.

விடுதலை பெற்ற அரசர்! அரண்மனைக்கு வந்தார். உடனடியாக அமைச்சரை விடுவிக்க உத்தரவிட்டார்.

நடந்ததை எல்லாம் அமைச்சரிடம் சொன்ன அரசர், சுண்டு விரல் வெட்டுப்பட்டதால் உயிர் பிழைத்தேன். அன்று எல்லாம் நன்மைக்கே என்று நீர் சொல்லியதன் உண்மை உணர்ந்தேன். உம்மைச் சிறையில் அடைத்ததற்காக வருந்துகிறேன் என்றார்.

அரசே என்னை நீங்கள் சிறையில் அடைத்ததும் நன்மைக்கே. எப்பொழுதும் உங்களைப் பிரியாமலிருக்கும் என்னைச் சிறையிலடைக்காமல் இருந்திருந்தால் உங்களுடன் காட்டுக்கு வந்திருப்பேன்.

அந்த மலைவாசிகள் என்னையும் உங்களுடன் சிறைப்படுத்தி இருப்பார்கள். விரல் வெட்டுப்பட்டதால் நீங்கள் உயிர் பிழைத்தீர்கள். எந்தக் குறையும் இல்லாத என்னை அவர்கள் பலியிட்டு இருப்பார்கள். நீங்கள் என்னைச் சிறையில் அடைத்ததால் நான் உயிர் பிழைத்தேன்.

எல்லாம் நன்மைக்கே! என்றார் அவர்.



# சின்னச் சின்ன உண்டியல்


சின்னச் சின்ன உண்டியல்
சிவப்பு நிறத்து எனது உண்டியல்
மண்ணில் செய்த உண்டியல்
மகிழ்ச்சி கொடுக்கும் உண்டியல்!

எண்ணி எண்ணி அதனிலே
எனக்குக் கிடைக்கும் காசதை
சிறுகச் சிறுக நானுமே
சேர்த்து வருதல் தெரியுமா?

காசு பணமும் சேர்வதால்
கவலை இல்லை எனக்குமே
ஆசைப்பட்ட பொருள்களை
அதனைக் கொண்டு வாங்குவேன்!

எழுதும் பொருட்கள் வாங்குவேன்
இனிப்பு மிட்டாய் வாங்குவேன்
யாரும் உதவி வேண்டினால்
எடுத்துத் தந்து உதவுவேன்!

சின்னஞ் சிறிய வயதிலே
சேர்க்கும் பண்பு தேவையே
சேர்த்த பணத்தைக் கொண்டு நாம்
சேவை செய்ய வேண்டுமே





# வர்ணம் தட்டுவோம் வாங்க....

# விடுகதை

1. இரு கொம்புகள் உண்டு, மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது. அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம். அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது. அவர்கள் யார்?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம். நான் யார்?

1.சைக்கிள், 2. பட்டாசு,
3. தராசு, 4. எறும்புக் கூட்டம்,
5. அஞ்சல் பெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினிச் சாவுக்கு இடம்கொடுக்கப் போகின்றோமா ?

வடக்கு மாகாண சபையின் அமர்வில் மிக முக்கியமான விடயத்தை முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் முன்வைத்திருக்கின்றார். உலக வங்கியினால் வறுமையான மாவட்டங்களாக தரநிலைப்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்கள் பட்டியலில் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் முன்னணியில் இருக்கின்றன என்றும் இதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்படப் போகின்றது என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

உடனடியாக அவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை அவர் முன்வைத்திருந்தார். குறிப்பிட்ட காலத்துக்கு இவை வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.


இறுதிப் போர் இடம்பெற்ற மாவட்டமான முல்லைத்தீவு போரின் முழுமையான தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தது. அங்கு போரின் பின்னர் என்ன உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பொதுப் பயன்பாட்டுக்கு காப்பெற் வீதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள் புதிதாக அமைக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன. மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

வாழ்வாதார உதவிகள் வழங்குகின்றோம் என்ற பெயரில் பல உதவிகள் வழங்கப்படுவதாக அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடக்கம் அரசியல்வாதிகள் வரையில் சொல்கின்றனர். மாடுகள், கோழிக் குஞ்சுகள், மீன்பிடி உபகரணங்கள் என்று 2010 ஆம் ஆண்டு தொடக்கம் பல உதவிகள் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஒரே நபருக்கே மீண்டும் மீண்டும் உதவிகள் கிடைத்த சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இப்படி உதவிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அந்த மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. அவர்கள் இன்னமும் வறுமைக்கு உட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். வறுமை நிலையிலேயே இருப்பதாக உலக வங்கியின் அறிக்கை கூடச் சொல்கின்றது. அப்படியென்றால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஏன் உயர்த்தவில்லை என்பது ஆராயப்பட வேண்டும்.

ஏனெனில் இப்போது அரசியல்வாதிகள் பலரும், தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மக்களுக்கு வாழ்வாதார உதவி கொடுக்கின்றோம் என்று விளம்பரப்படுத்தி வருகின்றனர். இவ்வாறு கொடுப்பதன் ஊடாக எந்தப் பயனும் ஏற்படாத நிலையில் அதனை ஏன் தொடர்ந்து ஊக்குவிக்க வேண்டும். இதற்கு மாற்றாக அந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அந்த நிதியைப் பயன்படுத்த முடியும்.

இதற்கு மேலாக, இராணுவத்தினரினால் மக்களின் வாழ்வாதாரக் காணிகள் கையகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மீட்டுக் கொடுக்க வேண்டும். அந்தக் காணிகள் மீட்கப்படும் வரையில், அந்த மக்கள் மாற்றுக் காணிகளில் தொழில் செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இல்லையேல் முல்லைத்தீவு மாவட் டம் தொடர்ந்தும் வறுமையில் வாடிக் கொண்டிருக்கத்தான் செய்யும்.

நிவாரணம் வழங்குவது என்பது தற்காலிக ஏற்பாடாகத்தான் இருக்க வேண்டும். மக்களை நிரந்தர சோம்பேறிகளாக்கும் வகையில் நிவாரணம் வழங்குவது அமைந்து விடக் கூடாது. வாழ்வாதார உதவிகளை வழங்குகின்றோம் என்று சொல்லி தொடர்ந்தும் மக்களை வறுமையிலிருந்து மீள முடியாதவர்களாக வைத்திருந்து, அவர்களைச் சாகடிக்காமல், அவர்கள் வாழ்க்கைத் தரம் நிரந்தரமாக மேல் உயரக் கூடிய உதவிகளை விரைந்து செய்ய வேண்டும்.






# 26 வருடக் கனவு நனவாகின்றது

## நடேஸ்வரக் கல்லூரி 2 ஆம் திகதி பழைய இடத்தில்

இரத்தினசிங்கம் விஜய்

இருபத்தாறு வருடக் கனவு.... தவம்... எமது வாழ்வில் நனவாக மாறியுள்ளது. கிடைக்குமோ என்றிருந்த எமது பாடசாலை... எமது கைகளுக்குக் கிடைத்தபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. நடேஸ்வர அன்னையின் மடியில் வளர்ந்த அனைவருமே இன்ப வெள்ளத்தில் மிதக்கின்றோம். பார்த்துப் பார்த்து ஏங்கிய சொந்தம் வாசலில் வந்து சேர்ந்ததே என்பது போன்று ஆனந்தம் ஏற்படுகின்றது.

வலிகாமம் வடக்கின் இரண்டாம் கட்ட நிலவிடுவிப்பின்போதே, விடுவிக்கப்பட வேண்டிய இடமாக முன்னரேயே அடையாளமிடப்பட்டது நடேஸ்வரக் கல்லூரி. ஆனால் பாடசாலையின் கிழக்கு, தெற்கு எல்லைவரை நிலங்களை விடுவித்த அரசும் இராணுவமும், பாடசாலையை விடுவிக்கவில்லை. இதனால் மிகவும் ஏமாற்றமடைந்த அதிபரும், பழையமாணவர்களும் தொடர்ந்து எடுத்த முயற்சிகளின் விளைவால் ஜனாதிபதி மைத்திரிபால தானே நேரடியாக வந்து பாடசாலையை விடுவித்து அதற்கான சான்றிதழை பாடசாலை அதிபர் பி.அமிர்தலிங்கத்திடமே நேரடியாகக்கையளித்தார். விடுவிக்கப்பட்டது பாடசாலை என்றவுடன் அதன் சொந்தங்கள் அனைவரும் மாவிட்டபுரத்தின் எல்லைவரை சென்று காத்திருந்தார்கள். அவர்கள் தமது பாடசாலையை, அதுவும் இளமைக்கனவுகளோடு விளையாடிய, தடம் பதித்த பாடசாலையைப் பார்க்கும் ஆர்வத்தில்... தம் ஊர் நினைவுகளை நினைத்துப் பார்க்கவும் ஓடிச் சென்றார்கள்... உள்ளே சென்று தமது பாடசாலையைப் பார்த்தபோது அவர்களின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. ஆனால் பாடசாலையை இயங்க வைப்பதில் பல்வேறு தடைகள் ஏற்படாமல் இல்லை. ஆரம்பத்தில் பாடசாலையின் சிறிய புனரமைப்புக்களைத் தாம் செய்து தருவதாகக் கூறிய இராணுவம், பின்னர் நிதி இல்லையெனக் கூறிக் கையை விரித்து விட்டது. இது மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. பின்னர் வேறு வழிகள் மூலமாகப் பாடசாலையின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

நடேஸ்வரா பழைய இடத்தில் இயங்குவதானது காங்கேசன்துறையின் இதயம் இயங்குவதற்குச் சமமானதாகும். அதனை உணர்ந்துதான் இராணுவத்தினரும் இழுத்தடிப்புகளை செய்து வந்தனர். நடேஸ்வரா மிகப் பெரிய பரப்பைக் கொண்டதும் கட்டடங்களைக் கூட அதிகம் கொண்டதுமான பாடசாலை ஆகும். இது படைகளுக்கும் போதிய பாதுகாப்பளித்து வந்தது. இராணுவத்தினரின் தங்குமிட வசதி, மருத்துவ மனை வசதியையும்போர்க்காலத்தில்கொண்டிருந்ததாக கூறுவோரும் உள்ளனர்.

இதன் காரணமாகவே பாடசாலையைக் கையளிப்பதில் இராணுவத்தினர் மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்தனர். ஆனால் இன்று சகல தடைகளையும் தாண்டி நடேஸ்வரா என்னும் அந்தக் கல்விக்குரிய ஆலயம் பழைய இடத்திலேயே கொலுவிருக்கப் போகின்றது. அந்த இனிய நாள் எதிர்வரும் 2 ஆம் திகதி எ...
ப...

> ஆரம்பத்தில் பாடசாலையின் சிறிய புனரமைப்புக்களைத் தாம் செய்து தருவதாகக் கூறிய இராணுவம் பின்னர் நிதி இல்லையெனக் கூறிக் கையை விரித்து விட்டது. இது மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. பின்னர் வேறு வழிகள் மூலமாகப் பாடசாலையின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.




நிலை...
துப் ப...
கவே உள்...
பூரிக்கின்ற...
நடேஸ்வரா...
புதல்வர்களா...
நாம் மேற்...
தினத்தில் ஒ...
கூடி அந்த இ...
தினத்தை ம...
வுடன் கொண்...
வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**எஜமானி**: நீ ஏன் நேற்று வேலைக்கு வரலை? சொல்லாம கொள்ளாம நின்னிட்டே?

**வேலைக்காரி**: இல்லம்மா நான் facebook இல் இன்னிக்கு வேலைக்கு போகமுடியல தலைவலியா இருக்கு என்று status போட்டேன். ஐயா கூட Get well soon, miss u' என்று Comment போட்டாரே...

சாமினா 24

முதியோர் இல்லம்!
குழந்தைகள் காப்பகம்!
மனநலமற்றோர் காப்பகம்!
பிச்சைகாரர்கள் சங்கம்!
அத்தனையும் ஒரே இடத்தில் சங்கமம்...!!

**மனைவி:** நான் செத்துட்டா நீங்க என்னங்க செய்வீங்க? திரும்ப கல்யாணம் செய்வீங்களா?

**கணவன்:** ஐயோ! இல்லவே இல்லை... நான் எப்படிக் கல்யாணம் செய்வேன்?

**மனைவி:** ஏன் இல்லை? நல்லது கெட்டது நடந்தா உங்களுக்கு ஆள் தேவை தானே? கல்யாணம் செஞ்சுக்கோங்க...

**கணவன்:** ஐயோ! சாவுக்குப் பின்னரும் கூட நீ என்னைப் பத்தி யோசிக்கிறையே சோனா... ஸ்வீட் மனைவி

**மனைவி:** எனக்கு சத்தியம் செஞ்சு குடுங்க. நான் செத்ததுக்கு அப்புறம் வேறு கல்யாணம் செஞ்சுக்குவேன்னு...

**கணவன்:** உனக்காக நான் சத்தியம் செய்றேன்....

**மனைவி:** என்னுடைய காரைப் பயன்படுத்த அனுமதிப்பீங்களா?

**கணவன்:** இல்லவே இல்லை... புதுசா ஒன்று வாங்குவேன்.

**மனைவி:** என்னுடைய நகையை அணிய அனுமதிப்பீங்களா?

**கணவன்:** இல்லவே இல்லை. அது உன்னுடைய ஞாபகார்த்த பொருள்...

**மனைவி:** என்னுடைய ஷூஸ் அணிய அனுமதிப்பீங்களா?

**கணவன்:** அது எப்படி அனுமதிப்பேன். உன்னுடைய சைஸ் 9. அவளுடைய சைஸ் 7.

**மனைவி:** அமைதியானாள்.

**கணவன்:** ... உளறிட்டேனோ?...






# உண்மைச் சம்பவ கதையில் த்ரிஷா

உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து எடுக்கப்படும் பேய்ப்படத்தில் நடிக்கிறார் த்ரிஷா. இயக்குனர் மாதேஷ் பேய்ப்படம் ஒன்றை இயக்கு கிறார். இதில் த்ரிஷா ஹீரோயின். மோகன்லால் மகன் பிரணவ், நதியா முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். தற்போது லண்டனில் படப்பிடிப்புக்கு பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து கொண்டிருக்கும் மாதேஷ் இந்தப் படம் பற்றி கூறியதாவது: இது மெகா பட்ஜெட் ஹாரர் படம். லண்டன், மெக்சிகோ, ஜெனிவா, பல்கேரியா, ரொமானியா உட்பட பல்வேறு உலக நாடுகளில் இதன் படப்பிடிப்பு நடைபெறுகிறது. ஓர் உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் இந்தக் கதையை உருவாக்கி உள்ளேன். "சிங்கம்" படத்தை தயாரித்த பிரின்ஸ் புரொடக்சன் லக்ஷ்மண் தயாரிக்கிறார். சக்தி ஒளிப்பதிவு செய்கிறார். விவேக் மெர்வின் இசை அமைக்கிறார். இந்த மாத இறுதியில் படப்பிடிப்பு தொடங்குகிறது.-என்றார்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | 2 | |
| | | 3 | 4 | | | | 6 | |
| | 4 | 6 | | | 9 | | | |
| | 6 | 5 | 8 | 1 | | 4 | | |
| | 1 | 7 | | | | 8 | 5 | |
| | | 4 | | 9 | 7 | 2 | 1 | |
| | | | 7 | | | 5 | 8 | |
| | 5 | | | | 8 | 6 | | |
| | 7 | | 6 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 7 | 8 | 1 | 2 | 9 | 6 | 4 |
| 6 | 2 | 1 | 4 | 9 | 5 | 7 | 3 | 8 |
| 9 | 4 | 8 | 6 | 3 | 7 | 2 | 1 | 5 |
| 1 | 9 | 4 | 5 | 8 | 3 | 6 | 7 | 2 |
| 2 | 8 | 6 | 1 | 7 | 4 | 3 | 5 | 9 |
| 7 | 5 | 3 | 2 | 6 | 9 | 8 | 4 | 1 |
| 4 | 6 | 5 | 7 | 2 | 8 | 1 | 9 | 3 |
| 3 | 7 | 2 | 9 | 4 | 1 | 5 | 8 | 6 |
| 8 | 1 | 9 | 3 | 5 | 6 | 4 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழை க் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




**மேடம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலவிய போட்டி மறையும். இலாபம் அதிகரிக்கும். நண்பரின் ஆலோசனையால் நன்மை உண்டாகும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**இடபம்:** தொடர்பில்லாத பணியால் பிரச்சினை உருவாகலாம். தொழிலில் கூடுதல் உழைப்பால், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். மிதமான வருமானம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் தேவை.

**மிதுனம்:** செயல்களில் தாமதம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனையை ஏற்பது அவசியம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

**கடகம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வர்.

**சிங்கம்:** உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் ஆடம்பரப் பொருள் வாங்கி மகிழ்வர். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.





**கன்னி:** சிலரது பேச்சு சங்கடத்தை உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணவரவை விட நிர்வாகச் செலவு கூடும். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**துலாம்:** எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது. பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு.



**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் கூடும். சமூகத்தில் மதிப்பு உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**தனுசு:** தகுந்த திட்டமிடுதல் மூலம் வளர்ச்சி காண்பீர்கள். சக தொழில், வியாபாரம் சார்ந்தவர்களிடம், சச்சரவு செய்ய வேண்டாம். வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளவும்.

**மகரம்:** மனதில் உற்சாகமும், செயலில் சுறுசுறுப்பும் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பன்மடங்கு உயரும். உறவினரால் நன்மை அதிகரிக்கும். எதிரி வியந்து விலகும் சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் புதிய சீர்திருத்தம் செய்வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனமாகச் செலவு செய்வர். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நூல் ஆபரணங்கள்

நூல் ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. வண்ண நூல்களால் உருவாக்கப்பட்ட மாலைகள் விற்பனை செய்யப்படுகின்றன. பகட்டான வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட இவை ஆடைகளுக்கு மேலும் அழகு சேர்க்கும். இவற்றின் விலை 250 ரூபா தொடக்கம் 350 ரூபா ஆகும்.

# முள்ளு முறுக்கு



### தேவையானவை

சாமை மா – 100 கிராம்
அரிசி மா – 50 கிராம்
சிறுபருப்பு – 50 கிராம்
பொட்டுக்கடலை மா – 1 கரண்டி
வெண்ணெய் – 1 கரண்டி
சூடான எண்ணெய் – 2 கரண்டி
பெருங்காயத்தூள் – சிறிது
உப்பு, மிளகாய்த்தூள், சீரகம், எண்ணெய் – தேவைக்கேற்ப.

### செய்முறை

அடுப்பில் சட்டியை வைத்து சிறுபருப்பை லேசாக வறுத்து ஆறவிடவும். இதை மிக்ஸியில்இட்டு அரைத்து அரித்து வைத்துக் கொள்ளவும். பொட்டுக் கடலையையும் அவ்வாறே செய்யவும். சாமை மாவையும், அரிசி மாவையும் லேசாக வறுத்து அரித்து அனைத்தையும் கலந்து உப்பு, பெருங்காயத்தூள், சீரகம், மிளகாய்த்தூள், சூடான எண்ணெய், வெண்ணெய் சேர்த்துத் தேவையான நீர் விட்டு பிசைந்து 5 நிமிடம் மூடி வைக்கவும். எண்ணெயைக் காயவிட்டு பெரிய பெரிய முறுக்காக ஒவ்வொன்றாகப் பிழிந்து இருபுறமும் வேகவைத்து எடுத்து ஆறியதும் உடைத்துப் பரிமாறவும்.

## தெரிந்ததும் தெரியாததும்..!

1. நாம் உடுத்திய பழைய துணிகளை வீட்டின் கதவுகளின் மீது போடக் கூடாது.
2. உடம்பிலிருந்து உதிர்ந்த தலைமுடியையும், வெட்டிய நகத்தையும், வீட்டில் வைக்கக் கூடாது. உடனே வெளியே எறிந்து விட வேண்டும்.
3. ஒரே சமயத்தில் இரண்டு கைகளாலும் தலையைச் சொறியக் கூடாது.
4. திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிக்கு சென்று வந்தவுடன் குளிக்கக் கூடாது.
5. சாப்பிடும் அன்னத்தை உருண்டையாக உருட்டிச் சாப்பிடக்கூடாது.
6. ஈரத்துணியை உடுத்திக்கொண்டு உணவு அருந்தக்கூடாது
7. சவரம் (சேவ் ) செய்து கொள்ளும் முன்பு எதுவும் சாப்பிடக்கூடாது.
8. தாய் தந்தை உள்ளவர்கள் ஒருபோதும் வெள்ளிக் கிழமையன்று சவரம் (சேவ் ) செய்துகொள்ளக் கூடாது.
9. இரண்டு கன்னங்களிலும் கைகளை வைத்துக்கொண்டு நிற்பதோ, உட்கார்ந்து கொள்வதோ கூடாது.



**நாளை**
**வைகாசி-16**
ஞாயிற்றுக்கிழமை - 29.05.2016
திதி: அட்டமி பி.இ.01.16 வரை
நட்சத்திரம்: சதயம்
பி.இ.12.06 வரை
ராகுகாலம்: 04.22-05.52 வரை
சுபநேரம்: 08.52-10.22 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 700 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 300 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | – | 420 |
| முரல் | 300 | 500 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 450 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 400 | 380 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 250 | 250 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | 300 | 190 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 350 | 300 | 150 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | – | – |
| வாழை | 100 | 100 | 200 | 400 | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 140 | 80 | – | 40 | 70 |
| கத்தரி | 200 | 160 | 200 | 200 | 160 | 200 | 70 | 120 |
| கரட் | 250 | 140 | 100 | 160 | 160 | 250 | 70 | 160 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 60 | 60 | 80 | 40 | 40 |
| பயிற்றை | 150 | 150 | 170 | 100 | 120 | 240 | 90 | 200 |
| பாகல் | 200 | 150 | 300 | 180 | 140 | 120 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 120 | 120 | 80 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 90 | 100 | 100 | 75 | 70 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 160 | 120 | 200 | 100 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 60 | 40 | 60 | 15 | 40 |
| தக்காளி | 200 | 180 | 200 | 200 | 180 | 240 | 140 | 190 |
| வாழைக்காய் | 50 | 40 | 30 | 40 | 40 | 80 | 35 | 40 |
| கீரை | 50 | 40 | 40 | 30 | 40 | 40 | 25 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 35 | 30 | – | 20 | 15 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 400 | 400 | 300–400 | 600 | 400 | 250 |
| புடோல் | 100 | 80 | 140 | 120 | 80 | 120 | 30 | 80 |
| கோவா | 140 | 160 | 180 | 160 | 140 | 240 | 90 | 80 |
| வெண்டி | 150 | 120 | 140 | 120 | 120 | 160 | 50 | 100 |
| போஞ்சி | 250 | 180 | 200 | 180 | 160 | 300 | – | 300 |
| லீக்ஸ் | 200 | 180 | 160–200 | 160 | 220 | 240 | 100 | 130 |
| தேங்காய் | 40 | 25 | 50 | 30–40 | 30–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 | 100–110 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 300 | 300–400 | 200 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | – | 300 | 180 | 300 | 240 | – | 180 |
| இராசவள்ளி | 160 | – | 160 | 160 | 160 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 100 | 140 | 200 | 200 | 150 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை கனகசபாபதி



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்துரை கனகசபாபதி (சின்ராசா) நேற்று (27.05.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.05. 20 16) வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலட்டி ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு.**
021 790 2986

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### அமிர்தநாயகம் சவரிமுத்து

**பிறப்பு:** **03.12.1927**
**இறப்பு:** **21.05.2016**



யாழ் வயாவிளான் உத்தரிய மாதா கோவிலடியை பிறப்பிடமாக வும், கனடா Markham த்தை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தநாயகம் சவரிமுத்து கடந்த 21.05.2016 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்றவர் களான சவரிமுத்து - இராசம்மா தம் பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான அந்தோனிப் பிள்ளை மேரி முத்தம்மா தம்பதி களின் அன்பு மருமகனும் செபரெட்ணத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், சொர்ணநாயகி மற் றும் மரியநாயகி (கனடா), காலஞ்சென்ற லூர்துநாயகி, குண நாயகி, குலநாயகம்(கனடா) ஆகியோரின் அன்பு சகோ தரனும், அன்ரன் ஜெபநாயகம் (கனடா) அன்ரன் பரமநாயகம்(கனடா) அன்ரன் சிறிதரன் நாயகம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தை யும், லூர்துமேரி (கனடா) எட்வினா (கனடா) சிலோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டெல்ரன், ஷெறேக்கா, கரோலினா, ஷெறினா, ஷான் ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.05. 2016) சனிக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**அன்ரன், பரம், சிறி**
**(001 9054702759)**

### திருமதி விமலாதேவி கார்த்திகேசு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 27 |
| 07 | 05 |
| 1940 | 2016 |

யாழ் நாவற்குழி மேற்கைச் சேர்ந்த திருமதி விமலாதேவி கார்த்திகேசு நேற்று (27.05.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், கனகசபை கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், விஜயலட்சுமி (முதலமைச்சரின் செயலாளர், வட மாகாணம்), சிவகுமா ரன், வரதலட்சுமி, இராஜலட்சுமி, ஜெயலட்சுமி ஆகியோ ரின் பாசமிகு தாயாரும், கேதீஸ்வரன், நித்தியபாக்கியம், மகேந்திரன், திலகநாதன், இரவீந்திரன் ஆகியோரின் மாமியும், மாதங்கி, மாதூரன், கார்த்திகா, கார்த்தீபன், சாரங்கி, சாரங்கன், சாலபி, விதுசா, வினோத், வினித் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவற்குழி மேற்கு.**
தொடர்புகளுக்கு: 077 452 5496

**தகவல்: விஜயலட்சுமி**
**கேதீஸ்வரன் (மகள்)**

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி பெலிசியானா அந்தோனிமுத்து



இளவாலையைப் பிறப்பிடமாகவும், யாழ் திருச்சிலுவைக் கன்னியர் மடத்தை பணியிடமாகவும் கொண்ட அருட் சகோதரி பெலிசியானா அந்தோனிமுத்து அவர்கள் நேற்று (27.05.2016) காலமானார்.

அருட்சகோதரி பெலிசியானாவின் பூதவுடல் கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (28.05. 2016) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 3 மணித் திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**அருட்சகோதரி கிளேயா சுவானி**
**மாகாணத்தலைவி**
**திருச்சிலுவைக் கன்னியர் சபை**

### திருமதி மேரிமாகிறற் (அழகம்மா) வென்சன்சிலாஸ்



நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிமாகிறற் (அழகம்மா) வென்சன்சிலாஸ் 25.05.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசு - சூசானம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான யோசேப் - ஆனந்தம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வென்சன்சிலாஸின் (யேசு) அன்பு மனைவியும், சுபாஸ், சுசி, றீகன், தீபன், றெஸ்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகரனின் (கண்ணன்)அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.05.2016) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித இராயப்பர் - சின்னப்பர் தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (j/1654) (11,18)

**நாரந்தனை தெற்கு,**
**ஊர்காவற்றுறை.**

**தகவல்:**
**பிள்ளைகள், மருமகன்**

**077 424 0771, 076 543 4226**

### விமலநாதன் மகேஸ்வரன்

(கருணா - பொறியியலாளர் Civil Engineer)



யாழ்.அத்தியடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Lyon ஐ வதிவிடமாகவும் கொண்ட விமலநாதன் மகேஸ்வரன் 22.05.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரன் - அன்னபூரணம் (வேவி) தம்பதிகளின் அன்பு மகனும், லூர்துநாயகியின் (லூட்ஸ்) அன்புக் கணவரும், சஞ்சீவன், பிரதீபன், பிரியந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விமலராணி (விமலா), காலஞ்சென்ற விமலேந்தி (றாதா), விமலேஸ்வரி (லலி-ஜேர்மனி), விமலசுந்தரி (சாரதா-பிரான்ஸ்), விமலேந்திரன் (உருத்திரன் - பிரான்ஸ்), விமலாவதி (ரதி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகம் (ஆசிரியர் - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்), நிர்மலாதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஸ்ரீஸ்காந்தராஜா (ஜேர்மனி), தர்மேந்திரன் (கண்ணன் - பிரான்ஸ்), சுதா (பிரான்ஸ்), பிரின்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், Benoit, Nathalie ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயந்தி லிங்கேந்திரா (ஆசிரியை - யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்), ஜெயக்கிஷ்ணா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரைச்சிப் பிரதேசசபை), ரூபா, நுரேன், சுஜி, கோபி, பரா, லவன், றோமன், பவின் ஆகியோரின் அன்பு மாமாவும், லவனியா, விதுசன், கபிஷன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் அயனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.05.2016 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
(j/1619)(11,18) **ச.சண்முகம் (மைத்துனர்)**

## காணாமற்போனோரின்

றம் சுமத்தியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கு விசேட கட்டமைப்பு ஒன்றை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் என்று தெரிவித்த அவர், அதில் காணா மற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளடக்கப் படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். (த-வ-5)

## யாழ்.

தீர்வு வழங்கப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாண மேல் நீதி மன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார். இலங்கையில் 36 ஆவது தொழில் நியாய சபை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த தொழில் நியாய சபை, யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றிய போதே மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்துக்கான தொழில் நியாயசபை, தொழில் நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் நீதியமைச் சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதனை இங்கு ஆரம்பித்து வைத்த இன்றைய நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். இதுவரை காலமும் அநுராதபுரம் சென்று வந்த எங்களுடைய தொழில் பிணக்குகள் தொடர்பான வழக்குகள், இனிமேல் யாழ்ப்பாண தொழில் நியாய சபையில் நடத்துவதற்கான நீதிசார் நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தொழில் நீதிமன்றத்தினுடைய கடமை, தொழில் பிணக்குள் சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்வதாகும். பணி நீக்கம் செய்யப்பட்ட நபர்கள், இழப்பீடு கோருவோர், அடிப்படை உரிமை கிடைக்காத நபர்கள், ஊழியர் லாபம் கிடைக்காத நபர்கள் போன்ற பல வழக்குகள் தொழில் நியாய சபையினால் விசாரிக்கப்படும்.

தொழில் நியாயச் சபையின் தீர்ப்பில் திருப்தி கிடைக்காத நபர்கள், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில், அந்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

அத்துடன், தொழில் நியாய சபை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டமையால், இங்குள்ள இளம் சட்டத் தரணிகளுக்கு வாய்ப்பாக அமையும். இளம் சட்டத்தர ணிகள் தொழிலாளர் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்று, இந்த நீதிமன்றத்தில் நீதியை நிலைநாட்டவேண்டும். ஏனெனில் இளம் சட்டத்தரணிகளின் வருகை,யாழ்.நீதிமன்றத்தில்நல்லபயனைஏற்படுத்தியுள்ளது. இந்த நீதிமன்றத்துக்கு உரிய நியாயாதிக்கம் தற்பொழுது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. வடக்கு மாகாணம் முழுவதுமான தொழில் பிணக்குகள் இங்கு விசா ரிக்கப் படவுள்ளன. தொழில் நியாய சபையின் தலைவரின் கடமை, நியாயமான தீர்ப்பை வழங்குவதாகும். உயர் நீதிமன்றம் அடிப்படை மனித உரிமை வழக்குகளில் நீதியான தீர்ப்பை வழங்கவேண்டும். தொழில் நியாய சபை தொழில் பிணக்குகளில் நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும்.

ஒவ்வொரு நீதிமன்றத்துக்கும் நீதிபதிக்கும் வழங்கப்பட்ட சுதந்திரம், ஒவ்வொரு நீதிபதியும் தீர்ப்பு எழுதுவதற்கு வழங்கப்பட்ட சுதந்திரத்துக்கு எதிராக எந்தவிதமான அரசியல் தலையீடு இருக்கலாகாது. நீதித்துறை சுயாதீனமாக இயங்கும் - என்றார். (த-வ-ரி)

## பொறுப்புக்கூறும்

மாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட பிரதமர், போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும், அனைத்து மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையும் விசாரிக்கும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விரைவில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக் குழுவினால் தீர்க்கப்பட முடியாத விடயங்கள், உயர் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படும். வெளிநாட்டு சட்டவாளர்கள், ஆலோசனைகளை வழங்குவார்கள். எனினும் அவர்கள் விசாரணைகளில் பங்கேற்கமாட்டார்கள்.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற் கொள்ளுமாறு, எந்தவொரு சர்வதேச அமைப்பினதும், அழுத்தங்களை நாடு எதிர்கொள்ளவில்லை. ஆனால், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக விளக்கமளித்த பிரதமர், போரின் போது படைகளால் கைப்பற்றப்பட்ட தனியார் காணிகளை மீள ஒப்படைக்க வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

## பிரகீத்

சிறி வர்த்தன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஹோமகம நீதிமன்ற நீதிவான் ரங்க திசநாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இரண்டு மில்லியன் ரூபா காசுப்பிணையிலும், தலா 6 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு பேரின் சரீரப் பிணையிலும், செல்வதற்கு லெப்.கேணல் சிறிவர்த்தன வுக்கு, நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட இரண்டாவது சந்தேகநபரான இவர், பல மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிக்கப்படாத பகுதியில் விசாகப் பொங்கல் வழிபாடு

விடுவிக்கப்படாத பகுதியில் உள்ள வயாவிளான் தெற்கு, ஞான வைரவர் ஆலய விசாகப் பொங்கல் வழிபாடு நாளை நடைபெறவுள்ளதாக ஆலயப் பரிபாலன சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

30 வருடங்களாகியும் இன் னும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத நிலை யில், கிராம மக்களின் தொடர் முயற்சியால் அமைச்சு மட்டத் தி லும், இராணுவ உயர் மட்டத்தி லும் மேற்கொண்ட கலந்துரை யாடலின் பின் இந்த அனுமதி கிடைத்துள்ளது.

இத்தகைய தொடர் ஆலயப் பிர சன்னம் வெறும் தெய்வ தரி சனத்துக்கு மட்டுமல்ல, வயா விளான் கிராமத்தின் மீள்குடிய மர்வுக்கான முயற்சியாகவும் பார்க்கப்படுகின்றது. எனவே வயாவிளான் மக்கள் இதற்கு ஒத்துழைப்பு நல்கி பாகுபா டின்றி இந்த நிகழ்வில் பங்குபற்ற வேண்டும்.

இந்தப் பொங்கல் நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்கள் நாளை காலை 8 மணிக்கு வயா விளான் மத்திய கல்லூரிக்கு முன்பாக ஒன்று கூடுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

# ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,மே 28

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி திங் கட்கிழமைமுற்பகல் 10 மணிக்கு தேர்த் திரு விழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (த-ஐ)

# வீழ்ந்தது கொடிச் சீலை

யாழ்ப்பாணம், மே 28

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நேற்றைய தினம் கொடியேற்ற உற்சவத்தில் கொடிச் சீலையை ஏற்றுகின்ற வேளை விட்டம் உடைந்த நிலையில் கொடிச்சீலை வீழ்ந்தது. நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று இடம்பெற்றது.

இதன்போது முற்பகல் 10.10 மணிக்கு கொடியேற்ற நிகழ்வு ஆரம்பமானது. அந்தநேரத்தில் கொடியேற்றுவதற்கு கொடிச் சீலையை ஏற்றப் பயன்படுத்தப்படும் விட்டம் உடைந்தமையினால் கொடிச் சீலையும் கயிறும் வீழ்ந்தன. இவ்வாறு கொடிச்சீலை வீழ்கின்றவேளை பக்தர்கள் குரல் களை எழுப்பி அம்பாளை வேண்டினார்கள்.

அவ்வாறு வீழ்கின்றவேளை கொடிச்சீலையை ஒரு பூசகர் தாங்கிப்பிடித்தார். எனினும் உடனடியாகவே கொடிக்கம்பத் தின் விட்டம் சீர் செய்யப்பட்டுக் கொடி மீண்டும் ஏற்றப்பட்டது. (த-வ-101)

## கந்தரோடையில்

கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. எனி னும் குறித்த கைக்குண்டு வெடிக்காதமை யினால் சேதங்கள் எவையும் ஏற்படவில் லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் நேற்றிரவு 7.30 மணி யளவில் தேவராஜா முருகதாசன் என்பவ ரது வீட்டின் மீதே இனந்தெரியாதோரால் இந்த கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இது குறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கைக்குண்டை மீட்டனர். இதனையடுத்து குண்டு செயலிழக்க வைக்கும் பகுதியினருக்குப் பொலிஸார் அறிவித்துள்ளனர். அத்துடன் குறித்த வீட் டுக்கும் நேற்றிரவு பாதுகாப்பு வழங்கப் பட்ட தாகப் பொலிஸார் கூறினர். (த-வ-36-101)

## அனைத்து

விஜயதாச ராஜபக்ச.

வடக்கு மாகாணத் தொழில் நியாய சபை நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக் கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராகக்கலந்துகொண்டுஉரையாற்றுகை யிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் தொழில் நியாய சபை ஆரம்பிக்கப்பட்டமை நல்லதொரு செயற் பாடாகும். இங்குள்ள தொழில் வழங்கு நர்களும் தொழிலாளர்களும் தமது தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு, பல மைல்கள் கடந்து, அநுராதபுரத்துக்கே சென்று வந்தனர். எனினும் தற்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

அதேபோன்று வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட் டங்களுக்கு இன்றைய தினம் (நேற்று) விசேட மத்தியஸ்த சபை நியமிக்கப்பட்டுள் ளது. இதனால் இங்கு காணப்படும் பல காணிப் பிணக்குகள் மத்தியஸ்த சபை ஊடாகவே தீர்த்து வைக்கப்படும்.

இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை உண்டு. அவர் களுக்குத் தமது மொழி, மத விடயங்களில் உரிமை உண்டு. அதன் அடிப்படையி லேயே நல்லாட்சி இடம்பெறவேண்டும் என்பதே ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவினதும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினதும் கட்டளையாகும்.

இதனடிப்படையிலேயே யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பல பொலிஸ் அதிகா ரிகள் மற்றும் அலுவலர்கள் தமிழ்மொழி தெரிந்தவர்களாக உள்ளனர். அத்துடன், பொலிஸாருக்குத் தமிழ்மொழி கற்பிக்கப் படுகின்றது.

மேலும், மக்கள் தமக்கான நீதியைப் பெறுவதற்கு அரசால் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அதன் அடிப் படையிலேயே சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியுடன் தொழில் நியாய சபை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

நீதிக்கான சுதந்திரத்தை நீதியுடன் தேடு கிறோம். நாட்டில் எந்தப் பகுதியிலும் சட் டத்தை நிலைநாட்டுவது சட்டத்தரணிகளின் கடமையாகும். சட்டத்தரணிக்கான பயிற் சியை மேற்கொள்ளும் மாணவர்கள், வெளிமாவட்டங்களில் பயிற்சி மேற் கொள்வது சிறந்ததாகும். இதன் மூலம் நல்லெண்ணம் உருவாக்கப்படும். உரிய வகையில் நீதி நிலை நாட்டப்படும்.

நாட்டின் பிரஜைகளாக நாட்டில் நீதியை நிலை நாட்டுவது சட்டத்தரணிகளின் அடிப்படைக்கடமையாகும். மக்கள் சட்டத் தரணிகளிடம் இருந்து நீதிக்கான உரிய தீர்வை எதிர்பார்க்கின்றனர். வெளிப் படையான - சுதந்திரமான - சமத்துவ மான நீதி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

நமது நாட்டின் அரசமைப்புக்கு அமைய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களின் தேவை, நீதிக்குரிய வசதிகள் சென்றடையவேண்டும். யாழ்ப் பாணத்தில் தற்போது சட்டரீதியாக ஏற்பட் டுள்ள பெரிய நெருக்கடி காணிப் பிரச்சி னைகளாகும். வடக்கு நீதிமன்றங்களில் காணிவழக்குகள்அதிகஎண்ணிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக, அத னால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. உரிமையாளர் கள் தமது சொந்த இடங்களை அடையா ளம் கண்ட பின்னரும், அவற்றுக்குத் தகுந்த சட்ட நடவடிக்கை மெற்கொள்வதில் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வகை யில் சட்டத்தரணிகள் செயற்படவேண்டும். குறித்த காலத்தினுள், உரிய நீதி அல்லது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடு கையில் எமது நாட்டில் சட்ட நடவடிக் கைகள் சிறப்பாக மேற் கொள்ளப்படு கின்றன - என்றார். (த-வ-ரி4)

## அரநாயக்க

எம்.அபேவிக்ரம வனசூரிய தெரிவித் துள்ளார்.

மக்களின் கோரிக்கைக்கு இணங்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரச அதி பர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கிராம மக்கள் மற் றும் மத குருமார்களுடன் நேற்று முன்தி னம் வியாழக்கிழமை கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாட லில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமையவே இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரையிலும் அரநாயக்க பகுதியில் 47 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 97 பேர் காணாமற்போயுள்ளனர்.

ஆயிரத்து 507 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 414 பேர் பாதிக்கப்பட்டுள் ளதாகவும் 29 வீடுகள் முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளதுடன், 84 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜய நாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரநாயக்க பகுதியில் 300 இராணுவத்தினர் வெளியே மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவதாகவும் ஜயநாத் ஜயவீர குறிப்பிட்டார். (த-வ-5)

## தனியார்

தலைமையிலான மூவர் அடங்கிய நீதி யரசர்களின் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

கடந்த 2013 ஆம் ஆண்டு காணிச்சட்ட விதிமுறைகளுக்கு

மாறாக இராணுவம் தங்களது காணி களைக் கையகப்படுத்தியதாக தெரிவித் துள்ள மனுதாரர்கள், தங்களுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுக்களைச் சமர்ப் பித்தனர்.

சம்பந்தப்பட்ட காணிகளை இராணுவம் கையகப்படுத்திய தாக அரச சட்டத்தரணி தெரிவித்தபோதிலும், அதனை உறுதிப் படுத்தக் கூடிய தகுந்த ஆவணங்களை அவர் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. எனவே, இந்த முறைப்பாடு குறித்து விசாரணைகளை மேற்கொள்வது அவ சியமென்று கூறிய பிரதம நீதியரசர், வழக்கு விசாரணை நவம்பர் மாதம் 2 ஆம் திகதி நடை பெறுமென்று அறி வித்தார்.

அன்றையதினம் இந்த முறைப்பாடு குறித்து விளக்கமளிக்குமாறு, மனுக்க ளில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டி ருந்த இராணுவத் தளபதி உட்பட அதிகாரி களுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித் துள்ளது. (த-வ-5)

## நல்லிணக்க

தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜப்பான் இசெசிமாவில் நேற்று நடை பெற்ற ஜி - 7 உச்சி மாநாட்டின் எல்லை கடந்த கூட்டத் தொடரில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

ஒரு புரட்சிகரமான ஆட்சி மாற்றத்துடன், எனது அரசு பல்லின சமூக சூழலில் நல் லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் நிலை யான அபிவிருத்தி சூழலுக்குமான வழியை ஏற்படுத்துவதிலும் வெற்றி கண் டுள்ளது. தற்போது எமது மக்கள் சுதந்திர மாகவும் மனித உரிமைகள் மதிக்கப்பட்ட வர்களாகவும் உள்ளார்கள்.

நாங்கள் ஏற்படுத்திய மாற்றத்தை ஜி - 7 நாடுகள் எப்படிப் பாராட்டின என்பதை நான் அறிவேன். இந்த மாற்றங்கள் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற இரண்டு தேர்தல்களில் மக்களினால் அங்கீகரிக் கப்பட்டவை. இது ஸ்திரத்தன்மைக்கும் சுபீட்சத்திற்கும் தடையாகவுள்ள ஊழல், மோசடிகள், வீண் விரயம் போன்றவற் றுக்கான மக்களின் எதிர்ப்பை எடுத்துக் காட்டியது.

நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத் துவதற்காக, நாட்டின் எதிரும் புதிருமாக இருந்த இருபெரும் அரசியல் கட்சிகளை நாடாளுமன்றத்தில் ஒன்றிணைத்து, எனது தலைமைத்துவத்தின் கீழ் நாம் ஒரு தேசிய ஐக்கிய அரசை அமைத்தோம். எமது அரசமைப்பில் 19 ஆவது திருத் தத்தை அறிமுகப்படுத்தி, அதனூடாக உயர் நீதிமன்றத்தினால் மறுக்கப்பட்ட அதிகாரங்களை தவிர்ந்த, எனது ஏனைய நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றை நான் நாடாளுமன்றத்திற்கு கையளித் தேன். இது ஜனநாயகத்தின் சிறந்த நடைமுறையாகும்.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் சட்ட ஆட்சி என்பவற்றுக் கான எனது அர்ப்பணத்தின் ஒரு வெளிப் பாடாகவும், ஊழலை ஒழித்துக்கட்டும் எனது உறுதிப்பாட்டின் காரணமாகவும், களவாடப்பட்ட அரச சொத்துக்கள் குறித்து விசாரணை செய்வதற்காக நான் ஒரு விசேட ஜனாதிபதி செயலணியை நிறு வினேன். ஊழல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய் வதற்காக ஒரு ஆணைக்குழுவையும் நிய மித்துள்ளேன்.

மேலும், பெரியளவிலான நிதி மோசடிக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக, நிதி மோசடி விசாரணைப் பிரிவை பொலிஸ் திணைக்களத்தில் ஒரு விசேட பிரிவாக அமைத்துள்ளேன்.

ஊழலும், அநீதியும், அரசியல் வன் முறையைத் தோற்றுவிப்பதுடன், முதலீ டுகள் பின்வாங்கப்படவும், ஸ்திரமற்ற பொருளாதார சூழல் உருவாவதற்கும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. எனவே, எமது மேற்கூறிய நடவடிக்கைகள் ஸ்திரத்தன்மையையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தும்.

நிறைவேற்று அதிகாரங்களை கையளிப் பதற்கு மேலதிகமாக, பொதுச்சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, எல்லை மீள்வரைவு மற்றும் நிதி ஆகிய சுதந்திர ஆணைக்குழுக்களை மீளவும் ஸ்தா பித்துள்ளேன்.

நல்லிணக்கம் தொடர்பில் கவனம் செலுத் துவதற்காக, நான் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் தெரிவித்தவாறு, நாம் உண்மையைக் கண்டறிவதற்கும், நீதியை வழங்குவதற்கும், எல்லா தரப்புகளுடனு மான விரிவான ஆலோசனைகளின் அடிப்படையில், கடந்த கால நிலைமை கள் மீண்டும் ஏற்படாதிருப்பதை உறுதி செய்வதற்கான பொறிமுறைகளை அமைத்து வருகின்றோம்.


எமது நாட்டில் பொருளாதாரத்தை ஊக்கு விப்பதற்கும், போரின்போது எமது நாட் டுக்கு சமாதானத்தைக் கொண்டு வருவ தற்கும், கடந்த சில தசாப்தங்களாக ஜப் பான் எமக்கு வழங்கிவரும் உதவிகளுக் காக, ஜப்பான் மக்களுக்கும் ஜப்பான் அரசுக்கும் நான் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பிரச்சினைகள் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்தப்படும் பட்சத்தில், எனக்கான உங்களது அழைப்பு, எல் லைகள் தாண்டிய உண்மையான பய னைக் கொண்டுவர வழி வகுக்கும். இந் தக் கூட்டத் தொடரின்போது ஜி - 7 நாடு களின் தலைவர்களும் ஜி - 7 எல்லை கடந்த நாடுகளின் தலைவர்களும் வெளிப் படுத்திய நட்புறவு மற்றும் புரிந்துணர்வை நான் பெரிதும் பாராட்டுகின்றேன் - என் றார். (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

## தாமோதரம்பிள்ளை விஜயரட்ணம் (ஓய்வூதியர்)



பிறப்பு
14.10.1946



இறப்பு
27.04.2015

கடந்த 27.04.2016 புதன்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் தாமோதரம்பிள்ளை விஜயரட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியையும் ஆத்ம சாந்திப் பிராத்தனை நிகழ்வும் இன்று (28.05.2016) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புளியம் தோட்டம்,
மல்லாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# Vehicle Fleet Management

## தொடர்பான மென்பொருளுக்கான கூறுவிலை கோரல்

எமது சபையின் தேவையின் பொருட்டு Vehicle fleet Management தொடர்பான மென்பொருள் ஒன்றினைக் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளோம். குறித்த Vehicle Fleet Management தொடர்பான மென்பொருள் பின்வருவனவற்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

**Software - Vehicle Fleet Management**

1. User Friendly Interface
2. Web base
3. Software Content
   - a. Vehicles Database
     - * Vehicles details
     - * Insurance details
     - * Tax details
     - * Driver details
     - * Accident
   - b. Vehicles Maintenance
     - *Vehicles repairing
     - * Vehicle parts replacement
     - * Vehicle spare parts stock
   - C. Vehicles Moment / Tracking (Use Suitable latest Technology devices)
     - * Vehicle tracking system
     - * Vehicle moment details
     - * Vehicle running chart
   - D. Fuel / Lubricant

எனவே தங்களால் வழங்கப்படக் கூடிய Vehicle Fleet Management தொடர்பான மென்பொருள் தொடர்பான தங்களின் திட்ட முன்மொழிவினை ( Project Proposal ) குறிப்பிட்டு தங்களின் கூறுவிலையினைக் கடித உறையிலிட்டுக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Vehicle fleet management தொடர்பான மென்பொருளுக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு **"ஆணையாளர் மாநகர சபை, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 14.06.2016 இற்கு முன்பதாக அனுப்பிவைக்கவும். (தேவையான விவரங்களினையும் இணைத்து அனுப்பவும்)

**குறிப்பு:-** தங்களின் கூறுவிலையுடன் பின்வரும் விடயங்களினையும் இணைத்து அனுப்பிவைக்கவும்.

* Company Profile
* Certified copy of Business Registration Certificate.
* Certified Copy of VAT Certificate

**ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.** (ச/81927) (11,17,18) **28.05.2016**

# கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்ட செயலக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி சா.தாரணி** அவர்களின் அன்புத் தாயார்.

## திருமதி ஸ்ரீபதி சிவனேஸ்வரி

26.05.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன். அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரி கழகம்**


# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

**காலம்: 29.05.2016** **நேரம்: காலை 10.00 மணி**
**இடம்: பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்**

மேற்படி வருடாந்த பொதுக்கூட்டம் பழைய மாணவர் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளமையால் அத்தினம் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**செயலாளர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.**

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர்
**சி. நித்தியானந்தன்** அவர்களின் தந்தையார்

## அப்புப்பிள்ளை சின்னையா

அவர்கள் 26.05.2016 அன்று இறைபதம் எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தின் கல்வியங்காடு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் முகாமையாளர்
**ந. சிவகுமார்**
அவர்களின்-பாசமிகு தாயார்


திருமதி
## நடராசா நாகம்மா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்வின் எழுச்சி முகாமையாளர் சங்கம்,
யாழ் மாவட்டம்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
30 . 04 . 1962



இறைவன் அடியில்
27 . 04 . 2016

## அமரர் வல்லிபுரம் கிருஷ்ணலிங்கம்

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தியினை கேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மேலும் பல வழிகளில் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

நாளை (29.05.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பெரியாவுடை,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.** **குடும்பத்தினர்.**

## மனைவியை தாக்கியவர்களுக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,மே 28

மதுபோதையில் தத்தமது மனைவியைத் தாக்கிக் காயப்படுத்திய இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் எழுதுமட்டுவாழ் தெற்கு மற்றும் மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் மனைவியைத் தாக்கிக் காயப்படுத்தினார்களென தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. இந்த இரண்டு பேரையும் எதிர் வரும் ஜூன் மாதம் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-ஜ-9)

## மதுபோதையில் மனைவியை செருப்பால் அடித்த கணவன்

யாழ்ப்பாணம், மே 28

மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவன், மனைவியை செருப்பால் அடித்ததில் முகத்திலும், உடம்பிலும் காயமடைந்த நிலையில் பாதிக்கப்பட்ட மனைவி யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 8:30 மணியளவில் வதிரி, நெல்லியடி பகுதியில் இடம்பெற்றுள்ளது. தினந்தோறும் குடித்து விட்டு வரும் கணவன், வீட்டு வன்முறையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பலமுறை முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், பாதிக்கப்பட்டவர்களின் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. வழக்குப் பதிவு செய்துள்ள நெல்லியடி பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர். (த-ஜ-4-107)

## இந்து மாமன்ற மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 28

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைர விழா மலர் வெளியீடு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும், நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலும் மாமன்றத்தின் தலைவர் க.நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ளதாக மாமன்றம் தெரிவித்துள்ளது.

இன்று முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜனும் கலந்து கொள்வர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதனும், இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனும், மேல்மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரனும், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயும், பதில் இந்தியத் தூதுவர் அந்ரம் பகூஷியும் கலந்து கொள்வர். (த-ஜ-ரி)

**விற்பனைக்கு**
சணல் ஆடுகள்,நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
அல்சேசன், பொம்மேரியன், நாய்க்குட்டிகளும்.
(7 16647)(12,18.)
**077 101 6407**

**விற்பனைக்கு**
வெள்ளடியன், பன்ரம், சிலிக்கி, ஊர்க்குஞ்சுகள், கோழிகள் மற்றும் நல்லின ஜமுனாபாறி ஆடுகள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: 077 491 5980 வட்டுக்கோட்டை

**உடனடி வேலை வாய்ப்பு**
கூடிய சம்பளம் நல்லூரில் உள்ள உணவகத்துக்கு (Hotel) பார்சல் பகுதிக்கும் விநியோகப் பிரிவுக்கும் ஆண், பெண் உடன் தேவை.
தொடர்பு:- 077 614 2203, 077 774 7864

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேரமாற்றம்

யாழ்ப்பாணம், மே 28
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால், அன்றைய தினமே இணைத் தலைவர்களின் சம்மதத்துடன் பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் பொ.தயானந்தன் தெரிவித்துள்ளார்.

(த-ரி)

## மரண அறிவித்தல்

திருமதி
### சிவமணி சோமசுந்தரம்



தோற்றம் 16 . 03 . 1953

மறைவு 26 . 05 . 2016

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி சோமசுந்தரம் கடந்த (26.05.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சுரேஸ்குமார் (முகாமையாளர், மக்கள் வங்கி, கிளிநொச்சி), ரமேஸ்குமார் (லண்டன்), சசிகலா, சத்தியகலா, சிவகலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருநீலகண்ட சிவம், கேதீஸ்வரன், துஸ்யந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், தர்சிகா, றஜீவன், சிவகாந், சுதர்சன், சயந்தன், அருள் செல்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவலிங்கம் (சிவா என்ரபிறைஸ், நுவரெலியா), சிவகலை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், சோதிப்பிள்ளை, தவ மணி மற்றும் உருக்குமணி ஆகியோரின் அன்பு மைத்து னியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அன்னாரின் வேம்படி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கண்ணன் ஸ்ரோர்ஸ், வேம்படி,**
**காரைநகர், 077 314 6025**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சபாரத்தினம் தவராசா
### (லொறி சிங்கம்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் தவராசா (லொறி சிங்கம்) கடந்த (25.05.2016) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம்-நல்லமத்து தம்பதிகளின் மகனும் தம்பிராசா-மனோன்மணி தம்பதியரின் மருமகனும் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சபேஷ்காந் (பிரான்ஸ்), கமல்காந் (பிரான்ஸ்), சுஜிதா (கோண்டாவில்), பிரதீபா, கிஷோகாந் (லண்டன்), இளங்காந் ஆகியோரின் அன்புத் தந்தையும் பவதர்ஷிகா (பிரான்ஸ்), கஜேந்திரன் (V.M.K ஹாட்வெயர், கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ணிகாவின் அன்புப் பேரனும் பூபதியம்மா, காலஞ்சென்ற இலட்சுமியம்மா மற்றும் கந்தசாமி, விஜயரத்தினம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2016) ஞாயிற் றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயக்காடு இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

மாசிவன் சந்தி, நீர்வேலி.

**(V.M.K ஹாட்வெயர்)கோண்டாவில்.**

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் பாலசுப்பிரமணியம்



தோற்றம் 22.08.1937 மறைவு 26.05.2016

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பாலசுப்பிரமணியம் கடந்த (26.05.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-நால்லம்மா தம்பதியரின் அன்பு மக னும், செல்லம்மாவின் பாசமிகு கணவ ரும், காலஞ்சென்ற பாக்கியம், சுப்பிரமணியம் மற்றும் பொன்மணி, கந்தையா ஆகியோரின் மூத்தசகோதரனும் ஆவா ர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இடைக்காட்டில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நேற்று (27.05. 2016) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செட்டியவளவு,**
**இடைக்காடு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### பொன்னம்பலம்பரமலிங்கம்
### நயினாதீவு



நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பரமலிங்கம் அவர்கள் நேற்று (27.05. 2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நயினா தீவு - 08,**
**021 300 1909**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 11 . 03 . 1942

இறப்பு 27 . 05 . 2016

### அருட் சகோதரி பெலிசியானா

யாழ். பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் மடத்தின் அருட்சகோதரி பெலிசியானா நேற்று (27.05.2016) வெள்ளிக்கிழமை விண்ணக வாழ்வை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிமுத்து மேரி மெக்ட்ரலின் (குமாரத்தி) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், மேரி யூயினா (கனடா), ஜோசப் (புத்தளம்), மேரி ஆன்சலின் (புத்தளம்), மேரி றோஸ் (புத்தளம்), காலஞ்சென்ற அன்ரன் செல்வக்குமார் மற்றும் கிறிஸ்ரி (சவுதி அரேபியா), அலோசியஸ் (ஓமான்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் சகாயமலர் (சின்னப்பிள்ளை), மரியதாஸ், றிச்மன், ரஜனி (புத்தளம்), சியாமளா (கொழும்பு), சுபத்திரா (புத்தளம்) ஆகியோரின் மைத்துனியும், யோஜ் -ஹம்சா (கனடா) ஜெஸ்மின் -சகாயகுமார் (லண்டன்) சுகந்தினி - சுஜீவன் (கனடா) வினிட்டா - கையினஸ் (பிரான்ஸ்) ஜெனிட்டா - டானியல் (பிரான்ஸ்) ஜெனத்குமார் - டிலுஷா (பிரான்ஸ்) ஜொபித்தா, பெஸ்ரிக்கா (புத்தளம்) துஷியந்தன் (லண்டன்) லஸ்சிக்கா - நாமல், அன்ரலோ, பெலிசியா, புலோறினா ஆகியோரின் பாசமிகு பெரியம்மா - மாமியும், சாள்ஸ் அன்ரனி (லண்டன்), அஞ்சலின், அலக்ஷியா, அனிக்கா (கனடா), எமில்டா, அயோலின், மேரி ஜெஸ்மின் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.05.2016) சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு புனித திருச்சிலுவை கன்னியர் மடத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல. 61/1,**
**மவுன்காமல் வீதி, யாழ்ப்பாணம்.**
**076 905 7882**

தகவல்:
**அந்தோனிமுத்து ஜோசப்**
**(சகோதரன்)**

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கனகரத்தினம்

**( ஓய்வுபெற்ற முதுநிலை இந்து நாகரிக விரிவுரையாளர்- பேராதனைப் பல்கலைக்கழகம்- துணைப் பேராசிரியர்)**



யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், மல்லாவி 4 ஆம் யூனிற்றை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கனகரத்தினம் (24.05.2016) அன்று யாழ் போதனா வைத்தியசாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் மீனலோஜினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இரத்தினம் -சற்குணம் தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயரத்தினம் (மல்லாவி), சிதம்பரநாதன்(பிரான்ஸ்), தில்லைநாயகி(பிரான்ஸ்), வைத்திய கனகரத்தினம் (கொல்ல விளாங்குளம்), குணசிங்கம் (மல்லாவி), புவனேஸ்வரி( கல்மடு நகர்), இராஜேஸ்வரன்(கனடா), காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி (பிரான்ஸ்), பரமேஸ்வரி (பிரான்ஸ்), தயாசீலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற யோகேஸ்வரி(மல்லாவி), சுசீலாதேவி(பிரான்ஸ்), பூபாலசிங்கம் (பிரான்ஸ்), கௌசலாதேவி(கொல்ல விளாங்குளம்), சோதிமணி(மல்லாவி), தியாகராசா(கல்மடு நகர்), பவானிதேவி(கனடா), மஞ்சுளாதேவி(பிரான்ஸ்), முருகேசம்பிள்ளை (பிரான்ஸ்), இராசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நாளை(29.05.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 18, கல்மடு நகர்,**
**கிளிநொச்சி.**

தகவல்:
**க. தியாகராசா**
**(மைத்துனர்)**

(K/55)(12.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேரத்தின் சுழல் எடுபடாத நிலையில் ஓட்டங்களைக் குவிக்கிறது இங்கிலாந்து

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து நாள் முடிவில் 310-6 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக குக் மற்றும் கேல்ஸ். 15 ஓட்டங்களுடன் குக்கை வெறியேற்றினார் லக்மல். கேல்ஸ், கொம்டன் இணை மேலதிக இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்கள் வரை தாக்குப் பிடித்தது. இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை 64ஆக இருந்த பொழுது கொம்டனை வெளியேற்றினார் பிரதீப். கேல்ஸும் ரூட்டும் இணைந்து இலங்கையை கடுமையாகச் சோதித்தனர். 100 ஓட்டங்களைக் கடந்தாயிற்று இலக்குச் சரிவு ஏற்பட்டபாடில்லை. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம்ட கடக்க இணைப்பாட்டமும் 100 ஓட்டங்களை நெருங்கிக் கொண்டிருந்தது. 83 ஓட்டங்களுடன் கேல்ஸை வீழ்த்தினார் சிறிவர்தன. 80 ஓட்டங்களுடன் ரூட்டை வெளியேற்றினார் பிரதீப். வின்ஸுடன் இணைந்தார் கடந்த ஆட்டத்தின் நாயகனான பரிஸ் ரௌவ். இணைப்பாட்டமாக 50 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் வின்ஸை பவிலியனுக்கு அனுப்பினார் சிறிவர்தன. தற்போது இங்கிலாந்து 227-5.

மிகவேகமாக அரைச்சதத்தை நெருங்கிக் கொண்டிருந்த பரிஸ் ரௌவ் இரண்டுஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார். மொயின் அலி, வோக்ஸ் இணை பிரிக்கப்படாத நிலையில் நாள் முடிவில் இங்கிலாந்து 310-6 என்ற நிலையில் உள்ளது. மொயின் அலி 28 ஓட்டங்களுடனும், வோக்ஸ் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரதீப் 3 இலக்குகளையும், சிறிவர்தன 2 இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். கேரத் 24 பந்துப்பரிமாற்றங்கள் வீசிய போதிலும் அவரால் ஓர் இலக்கைத்தானும் வீழ்த்த முடியவில்லை. (ம)

# யங்ஹென்றிஸின் தொடரில் இரண்டாவது சுற்று அணிகள்

யாழ்ப்பாணம், மே 28

இளவாலை யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகியுள்ள அணிகளின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி ஏ பிரிவில் மன்னார் சென்.ஜோசப் அணி, மயிலங்காடு ஞானமுருகன் அணி, பலாலி விண்மீன் அணி என்பனவும், பி பிரிவில் மன்னார் சென்.லூசியா அணி, வதிரி டயமன்ஸ் அணி, ஊரெழு றோயல் அணி என்பனவும், சி பிரிவில் இளவாலை யங்ஹென்றிஸ் கல்லூரி அணி, மன்னார் சென்.யூட் அணி, கம்பர்மலை யங் கம்பன்ஸ் அணி என்பணவும், டி பிரிவில் குருநகர் பாடும் மீன் அணி, மன்னார் கில்லறி அணி, நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி என்பனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ம-422)




# வில்லியர்ஸே சிறந்தவர் தெரிவிக்கிறார் கோக்லி

தற்போதுள்ள துடுப்பாட்ட வீரர்களில், டெஸ்ட், ஒருநாள், ரி-20 என மூன்று வகையான ஆட்டங்களிலும் சிறந்தவர் யார் என்பது விவாதத்துக்குரிய ஒன்று. அந்த விவாதத்தில், இருவருக்கிடையிலேயே பிரதான போட்டி காணப்படுகிறது. ஒருவர் விராட் கோக்லி. மற்றையவர் வில்லியர்ஸ். ஆனால் வில்லியர்ஸ்தான் சிறந்தவர் என்று கோக்லியே தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குஜராத்துக்கு எதிரான முதலாவது தகுதியாட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில் - நான் தான் வெற்றிபெற்ற தலைவர் என்பதை நம்ப முடியவில்லை. தற்போதுள்ளவர்களில் சிறந்தவர் யார் என்ற அதிகளவிலான விவாதங்களை இன்று முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அதில் எந்தக் கேள்வியும் இல்லை. வில்லியர்ஸே சிறந்தவர். அவருக்கு நான் தலைவணங்குகிறேன். அழுத்தங்களுக்கு மத்தியில் துடுப்பெடுத்தாடும் வல்லமை படைத்துள்ளவர்களில் வில்லியர்ஸுக்கும் பிரதான இடமுண்டு - என்றார். (ம)

# ரஸ்பேர்க்குடன் முரண்பாடு இல்லை லூயிஸ் ஹமில்டன் தெரிவிக்கிறார்




மெர்சிடஸ் கார்ப்பந்தய அணியின் நட்சத்திர வீரரான ஹமில்டன், தனது சக வீரரான நிக்கோ ரஸ்பேர்க்குடன் தனக்கு முரண்பாடுகள் கிடையாது என்று தெரி வித்துள்ளார்.

ஸ்பெயின் கார்ப்பந்தயத்தில் ரஸ்பேர்க்கின் கார் ஹமில் டனின் காருடன் மோதியமையை அடுத்து இருவருமே குறித்த சுற்றில் இருந்து வெளியேறினர். இதனால் இருவருக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் வெளிவந்தன. இந்த நிலையிலேயே தமக்கிடையில் கருத்து முரண் பாடுகள் இல்லை என்று ஹமில்டன் தெரிவித்துள்ளார். உலக கார்ப்பந்தயத்தின் ஆறாவது சுற்று நாளை ஞாயிற்றுக்கிழமை மொனாக்கோவில் நடை பெறவுள்ளது. (ம)

# செந்தமிழ் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 28

செம்பியன்பற்று சென்.பிலிப்புநேரிஸ் விளையாட்டுக் கழகம் வடமராட்சி கிழக்கு கால்பந்தாட்ட லீக்கில். அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்திய விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் அணி சம்பியனானது.

பிலிப்புநேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி மோதியது. இதில் செந்தமிழ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

செந்தமிழ் அணியின் வீரர்களான கபில்ராஜ், மயூரன், தங்க ரதிஸ்வரன் முறையே ஆட்ட நாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும், சிறந்த கோல் காப்பாளராகவும் தெரிவானார்கள். (ம-23)

# ஹொக்கி சங்கத்தின் உபதலைவராக உடுவில் மகளிர் கல்லூரியின் ஆசிரியர்

யாழ்ப்பாணம், மே 28

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கி சங்கத்தின் உபதலைவராக உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டு ஆசிரியர் ப.தர்மகுமாரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கி சங்கத்தின் நடப்பு வருடத்துக்கான நிர்வாகத் தெரிவு பம்பலப்பிட்டி சென்.பீற்றர்ஸ் கல்லூரியில் அண்மையில் இடம் பெற்றது. இதன்போதே உடுவில் மகளிர் கல்லூரியின் விளையாட்டு ஆசிரியர் ப.தர்மகுமாரன் உபதலை வராகத் தெரிவு செய்யப்பட்டார். ப.தர்மகுமாரன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கி சங்கத்தின் செயலாளராகத் தற்போது பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது 786

யாழ்ப்பாணம், மே 28
வவுனியா கால்பந்தாட்ட சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் 786 அணி வெற்றிபெற்றுள்ளது.
சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், 786 அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதியது. இதில் 786 அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## சரஸ்வதியின் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 28
அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய முன்றிலில் காலை 9 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்திலிருந்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி, ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி, இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி, சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி என்பனவும், அனுராதபுர மாவட்டமதவாச்சிவிளையாட்டுக் கழக அணி, அம்பாறை மாவட்ட அட்டாளைச் சேனை விளையாட்டுக் கழக அணி, மன்னார் மாவட்ட அணி நுவரெலியா மாவட்ட அணி ஆகிய அணிகள் பங்கு பற்றுகின்றன. (ம-23)



# சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதியாட்டம் இன்று

## ரொனால்டோ களமிறங்குவதில் சந்தேகம்

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவந்த சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட், அத்லெட்டிகோ மட்ரிட் அணிகள் இன்று பலப்பரீட்சை செய்யவுள்ள நிலையில், ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோ களமிறங்குவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
குறித்த இறுதியாட்டத்துக்கான பயிற்சியில் ஈடுபட்ட பொழுது சக வீரர் டேனி சார்வாஜல் தள்ளிவிட்டதில் ரொனால்டோவுக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவர் கடைசி மூன்று பயிற்சி ஆட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. இதனாலேயே ரொனால்டோ இன்று களமிறங்குவதில் சந்தேகம் நிலவுகிறது. ரியல் மட்ரிட், ஸ்பெயின் நாட்டின் கழகமாகும். இறுதியாட்டம் இத்தாலியில் நடைபெறவிருக்கிறது. எனவே ஸ்பெயினில் இருந்து இத்தாலிக்கு 218 விமான சேவைகள் கூடுதலாக இடம்பெறவுள்ளன. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 28
**கழுகுகளின் தொடர்**
நெற்கொழுகழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அண்ணா சிலையடி அணியை எதிர்த்து முல்லைத்தீவு இளந்தென்றல் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து தொண்டமானாறு ஒற்றுமை அணி மோதவுள்ளது.
**மன்னார் கிரிக்கெட் சங்கத்தின் தொடர்**
மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் மடு பிரதேச செயலக மைதானத்திலும், அடம்பன் பிரதேச சபை மைதானத்திலும் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் மடு பிரதேச செயலக மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.ஹென்றிஸ் அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏசியன் அணியை எதிர்த்து விக்ரோறி யன்ஸ் அணி மோதவுள்ளது.
**வவு. கால்பந்தாட்ட சங்கத்தின் தொடர்**
வவுனியா கால்பந்தாட்ட சங்கம் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூபைட் அணியை எதிர்த்து வளர்பிறை அணி மோதவுள்ளது.
**கிளி. கால்பந்தாட்ட லீக்கின் தொடர்**
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி மோதவுள்ளது.
**காமாட்சியம்பாளின் கரப்பந்தாட்டம்**
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ அணியும் மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணியும் தொடர்ந்து நடைபெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், நீர்வேலி காமாட்சி அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தன் அணியும் மோதவுள்ளன. (ம-23,108,422)

## கிளிநொச்சி ம.வி.யின் பிடியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

### விழுமா? விடுபடுமா?

கிளிநொச்சி, மே 28
வன்னியின் சமர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றைய முதல் நாளில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.
கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலயம் 8 இலக்குகள் இழப்புக்கு 241 ஓட்டங்கள் என்றிருந்த நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக அந்த அணியின் தலைவர் பேபிசன் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களையும், யதுசன் 57 ஓட்டங்களையும், கஜீபன் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் சார்பாக கஜலவன் 3 இலக்குகளையும், நிலவழகன், தர்சானந், சதுர்ஜனன், நிமலன் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி நாள் முடிவில் 6 இலக்குகள் இழப்புக்கு 80 ஓட்டங்களைப் பெற்று தடுமாற்றம் காட்டியுள்ளது. அதிகபட்சமாக லிபிதன் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும், பிரசாந் 16 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். பந்துவீச்சில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் சார்பில் கிருஸ்ணதுசாந்தன் 2 இலக்குகளையும், மிதுசன், பேபிகன், தேசிகன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர். கிளிநொச்சி மகா வித்தியாலயம் இதுவரை 161 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. முதல் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டார். (ம-422)

## நக்கீரன், விண்மீன் முன்னேற்றம் இமையாணன் மத்தியின் தொடரில்

கரணவாய், மே 28
இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் மற்றும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறியுள்ளன.
இமையாணன் மத்தியின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் கரவெட்டி சுடரொளி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் நக்கீரன் அணியின் கபில் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 20ஆவது நிமிடத்தில் தயானந் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய 2:0 என்ற நக்கீரனின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் எந்த வொரு கோல்களும் பதிவாகாத நிலையில் முடிவில் நக்கீரன் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியும், யாழ். பொற்பதி அணியும் மோதின. டேமியன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய ஆட்டம் கண்டது பொற்பதி அணி. 2:0 என்ற விண்மீனின் ஆதிக் கத்துடன் முடிவுகண்டது முதல் பாதி. இரண்டாம் பாதியில் அதே அணியின் ரஜிகரன் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது விண்மீன். (ம-108)

## சதுரங்கம், கரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 28
யாழ். மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான சதுரங்கம், கரம் தொடர்கள் இன்று ஆரம்பமாகின்றன.
இதன்படி ஆண்களுக்கான சதுரங்கத் தொடர் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம் பெறவுள்ளது. ஆண்களுக்கான கரம் போட்டி இன்று மதியம் ஒரு மணிக்கும் பெண்களுக்கான கரம் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளரங்கிலும் இடம்பெறவுள்ளன. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத் இறுதிக்குத் தகுதி அழைத்துச் சென்றார் வோர்ணர்



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது தகுதியாட்டத்தில் குஜராத்தை வெளியேற்றி இறுதிக்குச் சென்றது ஹைதராபாத்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆரம்ப வீரர்களாக திவேதி மற்றும் மக்கலம். சற்று வித்தியாசமான முடிவு தான். ஐந்தே ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார் திவேதி. ஒரே ஓட்டத்துடன் ரெய்னாவை வெளியேற்றினார் போல்ட். தற்போது குஜராத் 19-2. மக்கலம் நிலைத்து நின்றாலும் அவரது ஆட்டத்தில் அதிரடி என்பது இருக்கவில்லை. ஆரம்ப வீரர் போன்று அல்லாமல் ஏதோ பகுதி நேர துடுப்பாட்ட வீரர் போன்று விளையாடிக் கொண்டிருந்தார். தான் குவித்த 32 ஓட்டங்களுக்காக அவர் 29 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். துவண்டு கிடந்த குஜராத்தை தூக்கி நிறுத்தினார் பின்ஞ். 28 ஓட்டங்களில் அரைச்சதம் கடந்த அவர், சரியாக 50 ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தார். 150 ஓட்டங்களுக்குள் குஜராத் கட்டுப்படப் போகிறது என்று எதிர்பார்க்கையில் 10 பந்துகளை எதிர்கொண்டு 20 ஓட்டங்களைக் குவித்தார் பிராவோ. முடிவில் குஜராத் 162-7.

பதிலுக்குக் களமிறங்கியது ஹைதராபாத். ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து பதற்றத்தை அதிகரித்தார் தவான். ஹென்றிக்ளை வெளியேற்றினார் சிமித். பவுண்டரியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் யுவராஜ். ஆனால் அது ஒன்றே யுவராஜால் பெறப்பட்ட ஒட்டு மொத்த பவுண்டரியாக அமைந்தது. 4 ஓட்டங்களுடன் கூடாவை வெளியேற்றினார் பிராவோ. 6 ஓட்டங்களுடன் கட்டிங்கை வெளியேற்றினார் கௌசிக். ஓர்முனை இவ்வாறாக பலவீனமாக உணரப்பட்டாலும் மறுமுனையில் ஆணி அடித்ததைப் போன்று அசையாமல் ஆடினார் வோர்ணர். 35 பந்துகளில் வோர்ணரின் அரைச்சதம் பதிவானது. இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களில் 32 ஓட்டங்களைப் பெற வேண்டுமென்ற நிலமை. வோர்ணரின் துடுப்பிலிருந்து சிக்சர், பவுண்டரிகளாகப் பறக்க குஜராத்தை வெளியேற்றி இறுதிக்குச் சென்றது ஹைதராபாத். வோர்ண[illegible] 93 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

நியத்த ஜய
வெற்றி வாரம் : 465
திகதி : 27.05.2016
வர்ணம் : நீலம்
விஷேட வெற்றி இலக்கம்
27133
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
1,07,32,840/=
23 30 37 62 O
Web: www.dlb.lk
SMS: DLB LOT NJ 1919
Tel: 011 4 824 824
31.05.2016

## லண்டன் கண்காட்சி இலவச காட்சிப்படுத்தல்

லண்டனில் யூலை மாதம் நடைபெறவுள்ள விளையாட்டு நிகழ்வுடன் கூடிய நட்சத்திர இரவில் நடைபெறும் கண்காட்சியில் உங்கள் கைப்பணி பொருள்கள் மற்றும் இதர தயாரிப்புகளை இலவசமாக காட்சிப்படுத்துவதற்கு அரிய சந்தர்ப்பம் சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

(வட மாகாண உற்பத்திப் பொருள்கள் மட்டும்)

தொடர்புகளுக்கு:- 077 7360353
49-51, அம்மன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.



## வயாவிளான் மானம் பராயானின் சிரமதான அறிவித்தல்

வயாவிளான் மானம் பராய்ப்பிள்ளையாரின் மெய்யடியார்களே நாளை (29.05.2016) ஞாயிற்றுக்கிழமை எமது ஆலய வீதியினைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்ய அனுமதி கிடைத்துள்ளமையால் சகல அடியார்களும் வந்து சிரமதானம் மூலம் எம்பெருமானின் வீதியினை துப்புரவு செய்து உதவும் வண்ணம் அன்புரிமையுடன் கோருகின்றோம்.

பெருமளவு இளைஞர்களை எதிர்பார்க்கின்றோம்.

தலைவர்:- 077 507 8025
செயலர்:- 077 0333396
பொருளாளர்:- 077 310 1462

இறைபணியில் வயாவிளான் மானம் பராய் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர்.

## INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure

MAY BATCHES
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
Executive Officer -

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 27.05.2016 | வெற்றி வாரம் 1983 | வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
06 08 21 22
விசேட வெற்றி இலக்கம்
40656
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 20,00,000/-
2016-05-29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
Web: www.dlb.lk
SMS: DLB LOT LW 1919

கோடிபதி
014
2016-05-27
அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.8,18,61,620/-
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
G 07 44 55 72
விசேட வெற்றி இலக்கம்
29379
Web: www.dlb.lk

## சமையல் வெற்றிடங்கள்

யாழ் நகரில் ஆரம்பிக்கப்பட உள்ள அதி உயர்தர சைவ அசைவ உணவகத்துக்கு யாழ் அறுசுவை மற்றும் இதர உணவு வகைகள் தயாரிக்கக் கூடிய ஆண்/பெண் இரு பாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது எல்லை இல்லை. ஆற்றல் அனுபவம் இரண்டிற்கும் முன்னுரிமை.

நேரடி தேர்வு: 28.05.2016 நேரம்:- பகல் 2 மணி
31.05.2016 நேரம்:- முற்பகல் 10 மணி

யாழ் பாடி
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 075 987 5800

## பணி தொடர வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை இந்துமாமன்றம் தனது அறுபதாவது ஆண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம். இந்துமத வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகள் மேலோங்கி எங்கும் சிவமயமாக மிளிரச்செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கந்தசுவாமி தேவஸ்தானம் நீர்வேலி.

இராஜேந்திரக் குருக்கள், சுவாமிநாத குருக்கள்

## British College of Higher Studies

BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Anyakulam Junction)
Hotlines: 077 036 5728, 0777585913, 0777222422

## Accounting Class

A/L-2016 மாணவர்களுக்கான விசேட மீட்டல் வகுப்பு
ஆசிரியர் : O. KAYLAN
இடம்:-யாழ். நகர்
ஆரம்பம்: 30.05.2016
T.P: 077 611 4238

## அலுவலக வேலை வாய்ப்பு

ELLAAM (PVT)LTD
V2 TRAVELS & TOURS

- OFFICE ADMINISTRATION
- BUSINESS ADMINISTRATION
- ENGLISH FOR BUSINESS
- CUSTOMER CARE MANAGEMENT
- BASIC ACCOUNTING
- AIRLINE TICKET BOOKING SYSTEM
- INBOUND, OUTBOUND TOURISM
- MS OFFICE (Word, Excel, Powerpoint)
- MARKETING
- PHOTOSHOP

தொடர்புகளுக்கு: 0768226243

AIRLINE TICKETING, INTERNATIONAL & DOMESTIC COURIER SERVICES DESIGNING, MARKETING, CUSTOMER CARE போன்ற பல்வேறு சேவைகளில்

6 மாத பயிற்சியின் முடிவில் 15,000/=க்கு குறையாத வேலைவாய்ப்பு 100% எம்மால் ஏற்படுத்தித்தரப்படும்

6 மாத முடிவில் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற Airline ticket booking சான்றிதழ் வழங்கப்படும்

முதலாவது அணியில் 10 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்படுவர்.

நேர்முகத்தேர்வு -29-05-2016
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
(யாழ் பொதுநூலகத்திற்கு முன்னால் உள்ள வீதி)

கட்டாயமாக சுயவிபரக்கோவை(CV)மற்றும் தகமைச்சான்றிதழ்களின் நிழற்பிரதிகளுடன்(photo copy)வரவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.